வெளியீடு 15-3-99 | Issued 15-3-99

15 செப் 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 18, 1998 - தொகுதி 54 – எண் 1

**Monday the 18th May, 1998 – Volume 54 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

V2ll,3l'N98·
N98·54·1·
2l9l00·

[Price Rs. 3.00

**18-5-1998**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-38 |
| *2.* **விதி 110-ன்கீழ் அறிக்கைகள்--** | |
| (அ) அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் வயது குறித்து முதலமைச்சரின் அறிக்கை | 39 |
| (ஆ) மின்சார வாரியத்தில் போலியாக பணி மாறுதல் ஆவணங்கள் தயார் செய்தவர்கள் மீதான நடவடிக்கை குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை | 40 |
| (இ) மையக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் குறித்து உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை | 41-42 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 3. | **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| | (அ) சேலம், பனமரத்துப்பட்டியில் எம்.ஜி.ஆர். சிலை உடைப்பு | 42-49 |
| | (ஆ) திருப்பத்தூர் வனத்துறை அதிகாரி விஜயன் இறந்தது | 49-59 |
| 4. | **கவன ஈர்ப்பு--** | |
| | மின்வெட்டு காரணமாக விவசாயம், தொழிற்சாலைகள், வியாபாரிகள் பாதிப்பு | [illegible] |
| 5. | **அறிக்கைகள் அளித்தல்--** | |
| | மனுக்கள் குழு | 65 |
| 6. | **தகவல் கோரல்--** | |
| | கைது செய்யப்பட்ட போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களை விடுதலை செய்தல் | 66-68 |
| 7. | **காமன்வெல்த் நாடுகளின் பாராளுமன்றக் கருத்தரங்கிற்காக வெளிநாடு செல்லும் பேரவைத் தலைவருக்குப் பாராட்டு--** | 69-71 |
| 8. | **மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி--** | |
| | கோரிக்கை எண் 10 - பால் வழங்கு செயல் திட்டங்கள் | 71-127 |
| | *மாண்புமிகு திரு. க. சுந்தரம் | 71,73-74, 85-86,104, 106-107,109-110, 111-125 |
| | திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 72,74-80, 124,126 |
| | திரு. ஜி.எல். வெங்கடாசலம் | 80-84 |
| | திரு. லி. அய்யலுசாமி | 84-87 |
| | திரு. எ. ராமசந்திரன் | 88-92 |


219100




| | | பக்கங்கள் |
|---|---|---|
| 8. | **மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| | திரு. ப. மோகன் கந்தசாமி | 92-95 |
| | திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 95-99 |
| | திரு. பி.வி.எஸ். வெங்கடேசன் | 100-102 |
| | திரு. ப. கோவிந்தன் | 102-105 |
| | திரு. டி. மணி | 105-106 |
| | திரு. மு. அப்பாவு | 106-111 |
| 9. | **அறிவிப்புகள்--** | |
| | (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்வு | 127-128 |
| | (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்வு | 128-129 |
| | (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்வு | 129-130 |
| | (ஈ) அவை உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்வு | 130-131 |
| | (உ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம் | 131-132 |
| | (ஊ) பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள் நியமனம் | 132 |
| | (எ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம் | 133 |
| | (ஏ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம் | 133-134 |
| | (ஐ) அவைக்குழு உறுப்பினர்கள் நியமனம் | 134 |
| | (ஒ) மனுக்கள் குழு உறுப்பினர்கள் நியமனம் | 135 |
| | (ஓ) நூலகக் குழு உறுப்பினர்கள் நியமனம் | 135-136 |
| | (ஔ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு உறுப்பினர்கள் நியமனம் | 136 |
| 10. | **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 137-138 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், நேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத்துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** : **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** : **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** : **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** : **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** : **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** : **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** : **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** : **The Hon. Thiru N. K. K. Periasamy:**
Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** : **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** : **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act.

| | | |
|---|---|---|
| 21. Minister for Animal Husbandry | : | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. Minister for Social Welfare | : | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. Minister for Adi-Dravidar and Tribal Welfare | : | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. Minister for Tourism | : | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. Minister for Khadi | : | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. Minister for Fisheries | : | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. *சாலமன்* ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. | திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. | திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 28 | இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. | திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. | கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந. பூ. | .. | மயிலாப்பூர் |
| 40. | இராஜரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. இ. | .. | எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. | நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. சு. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராயநகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

108. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்

109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்

160 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)

161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)

162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி

164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு

165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை

166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)

167. பொன்னார்டு, திரு. இரா. .. குளச்சல்

168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்

169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்

171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)

172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி

173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்

174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)

175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்

176. மணி, திரு. டி. .. விளவங்கோடு

177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்

178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்

179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு

181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி

184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்

185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை

186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)

187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி

188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை

189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)

190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்

191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்

192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்

193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்

195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்

196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்

197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்

198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)

201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

203. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்

204. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்

205. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

206. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்

207. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்

208. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி

209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்

210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். .. காங்கேயம்

211. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

212. வல்லரசு, திரு. பி. என். .. உசிலம்பட்டி

213. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்

214. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்

215. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்

216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி

217. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை

218. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். .. பாலக்கோடு

221. வெங்கடேசன், திரு. ச. க. .. மதுராந்தகம்

222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்

223. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்

224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)



225. வேணு, திரு. கி. .. கும்மிடிப்பூண்டி

226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்

233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

235. ஆன் டி' மான்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 4, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**
**1998 மே 18, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று"*

*நெய் போன்ற பொருள்களைத் தீயிலிட்டு ஆயிரம் வேள்விகளை நடத்துவதைவிட உண்பதற்காக ஓர் உயிரைப் போக்காமலிருப்பது நல்லது.*

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 521, திரு. வி.கே. லட்சுமணன், திரு. கோ. தளபதி மற்றும் திரு. க. மணிவர்மா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**521-**

**தொடக்கப் பள்ளிகளுக்கு நிதியுதவி**

*7477—**திரு. வி.கே. லட்சுமணன்:**
**திரு. கோ. தளபதி:**
**திரு. க. மணிவர்மா :**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிராமப் பகுதிகளில் அரசு நிதியுதவியின்றி நடைபெற்று வரும் அரசு அங்கீகாரம் பெற்ற தொடக்கப் பள்ளிகளுக்கு நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1991-92-ம் ஆண்டிலிருந்து அங்கீகாரம் வழங்கப்பட்ட தனியார் பள்ளிகளுக்கும் புதிதாகத் தொடங்கப்படவுள்ள தனியார் பள்ளிகளுக்கும் எப்போதும் அரசின் நிதி உதவி வழங்கப்படுவதில்லை என அரசு கொள்கை முடிவு மேற்கொண்டது. அங்கீகாரம் கோரும் பள்ளிகளிடமிருந்து எப்போதும் நிதி உதவி கோரமாட்டோம் என்ற உறுதிமொழியினைத் தாங்களாகவே முன்வந்து அளிக்கும் நிறுவனங்களுக்கே அங்கீகாரம் வழங்கப்படுகிறது. இதன்படி புதிதாகத் தொடங்கப்படும் தனியார் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிடமிருந்து மேற்குறிப்பிட்டவாறு தங்களின் சொந்த விருப்பத்தின்பேரில் எப்போதும் நிதி உதவி கோரமாட்டோம் என்ற உறுதிமொழியினை அளித்த நிறுவனங்களுக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கிராமப் பகுதியாயினும், நகரப் பகுதியாயினும் மேற்குறிப்பிட்ட நிபந்தனையின்படி அரசு நிதி உதவியின்றி நடைபெற்றுவரும் பள்ளிகளுக்கு அரசின் நிதி உதவி ஏதும் வழங்கப்படமாட்டாது.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30, 40 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இதுபோன்ற தொடக்கப் பள்ளிகளிலே இப்போது எந்தவிதமான வசதியும் இன்றி கிராமத்திலே வாழக்கூடிய ஏழை விவசாய மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாணவர்களுடைய எண்ணிக்கைக்குத் தேவையான ஆசிரியர்கள் இல்லை. மீண்டும் பரிசீலனை செய்து ஏற்கெனவே 20 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட பள்ளிகளுக்காவது அரசு நிதி உதவி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-வது ஆண்டுக்கு முன்னர் தொடங்கப்பட்ட பள்ளிகளிலே பெரும்பாலான பள்ளிகள் நிதி உதவி கேட்டு, நிதி உதவி வழங்கப்படுகிறது. அப்படித் தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு நிதி உதவி பெற வேண்டிய நியாயமான உரிமை இருக்குமானால், அவர்கள் விண்ணப்பிக்கலாம். நிதி உதவி பெறுகிற பள்ளிகளில்



ஆசிரியர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்குமானால், அதைப் போக்குவதற்கு இந்த ஜூன் திங்களிலிருந்து நாம் ஏற்படுத்தியிருக்கிற புதிய மாணவர் விகித அடிப்படையில் ஆசிரியர்கள் வழங்கப்படுவார்கள்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறப் பகுதிகளில் அரசு அங்கீகாரம் பெற்று விளங்குகின்ற தனியார் பள்ளிகளிலே மாணவர்கள் நன்கொடை இல்லாமல் சேர்ந்து படிக்கின்றார்கள். குறிப்பாக, இந்து Management பள்ளிகளிலே சிறப்பாக நடத்துகிற பள்ளிகளில் எல்லாம் மாணவர்கள் நன்கொடை அளிக்காமல் படிக்கின்றார்கள். அந்தச் சிறப்பாக நடத்துகின்ற பள்ளிகளிலே என்னுடைய தொகுதியிலே டி. வாலவட்டி, குறுக்கலாம்பூர், உடையார் குப்பம் போன்ற பள்ளிகளிலே மாணவர்கள் பயில்கின்றார்கள். அவர்களுக்குப் போதுமான கட்டட வசதிகள் இல்லாமல், குடிநீர் வசதி இல்லாமல், போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் பயில்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு வேண்டிய அந்த வசதிகளை எல்லாம் செய்துதர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளுக்கே போதுமான கட்டடங்கள் இல்லாத ஒரு நிலை எல்லா மாவட்டங்களிலேயும் எல்லா நிலையிலேயும் இருக்கிறது. அவற்றை நிறைவு செய்வதற்கு அரசு பெரு முயற்சி எடுத்துக்கொண்டு திட்டமிட்டுச் செயல்படுகிறது. உள்ளாட்சித் துறை சார்பாகவும்கூட 500 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒன்றிரண்டு வகுப்பறைகள் கட்டித் தருவது பற்றி அமைச்சர் அறிவித்திருப்பதை இந்த அவை மிக நன்றாக அறியும், எனவே, தனிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு உதவி வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏதேனும் ஒரு வகையில் உதவி செய்ய முடியுமா என்பதை விண்ணப்பித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர், குறிப்பாக கிருஸ்துவர்கள், முஸ்லீம்கள், இராமகிருஷ்ணா மடம் போன்ற இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகின்ற நிதி உதவி பெறுகின்ற பள்ளிகள் 1991 வரை ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்கியிருக்கின்றீர்கள்.

[1998 மே 18

அதற்குப் பின்னர் நம் அரசு பொறுப்பு ஏற்ற பின் 200-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளை, ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பித்து இருக்கிறோம். சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளின் கட்டட வசதிகளை அவர்களே ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ஆகவே, தமிழகத்திலுள்ள பாதிக்கு மேற்பட்ட பள்ளிகளை சிறுபான்மையினர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேல்நிலை, உயர்நிலை, நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தும்போது சிறுபான்மையினர் நடத்துகின்ற தனியார் பள்ளிகளுக்கும் அந்த வாய்ப்பைக் கொடுப்பீர்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு நிதிப் பொறுப்பு இருக்கிறபோதுதான் பள்ளி வழங்கும் எண்ணிக்கையை அரசு மிகவும் கட்டுப்பாட்டோடு வழங்க வேண்டியிருக்கிறது. தனியாரோ அல்லது சிறுபான்மையினரோ தங்கள் நிதிப் பொறுப்பில் நடத்துவோர்களானால், அவர்கள் பள்ளியை மேம்படுத்துவதற்கு முன்வந்தால், எல்லா நோக்கிலும் அரசு அனுமதி வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமம் மற்றும் நகர்ப் பகுதிகளில் தனியாரால் நடத்தப்பட்டு வரும் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவை அரசு அங்கீகாரம் பெற்றுதான் நடைபெற்று வருகின்றன. ஆனால், அரசு மானியமோ, வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுக்கு சம்பளமோ வழங்கப்படாமல் இருக்கிறது. இப்படி அரசு நிதி உதவி இல்லாமல் நடத்தப்படும் பள்ளிகளை ஆய்வு செய்து, நல்ல Infrastructure facilities இருக்கிற பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து நிதி உதவி அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து சொல்லி வருகிற அந்த அடிப்படையைக் குறித்தே மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்புகிறார். நல்ல 'Infrastructure facilities' இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு நல்ல ஆதரவு இருக்கும். எனவே, அவர்களுடைய நிதியைக் கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க முடியும்.



1998 மே 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறாமல், ஆனால், அரசு அங்கீகாரம் பெற்று நடத்தப்படுகிற பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் எல்லாம் ஒரு கட்டற்ற சுதந்திரத்தை அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள். ஒன்று, மாணவர்களுக்கு அதிகக் கட்டணம் விதித்து வசூலிக்கிறார்கள். இன்னும் ஒன்று, ஆசிரியர்களுக்கு அரசு ஊதியம் வழங்குவது இல்லை. எனவே, மாநில அரசு உரிய சட்டத் திருத்தத்தை மேற்கொண்டு அரசு உதவி பெறவில்லை என்றாலும், அங்கீகாரம் பெற்று நடத்துகிற தனியார் பள்ளிகள் முழுவதும் அரசு ஊதியத்தை வழங்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும் அரசு நடத்துகிற அந்த முறைப்படிதான் அவர்களும் நடத்தவேண்டும் என்ற பொதுவான விதி இருக்கிறது. அந்த விதிகள் மீறப்படுகின்றன என்று ஆதாரத்தோடு குற்றச்சாட்டுக்கள் வருமானால், உரிய முறையில் விசாரித்து செய்யத்தக்கது என்ன என்று ஆலோசித்து அந்தக் கடமையினை அரசு நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தனியார் நடத்துகின்ற அரசு உதவி பெற்ற பள்ளிகளோ, அரசு உதவி பெறாத பள்ளிகளோ அவர்களால் நடத்த முடியவில்லை என்ற காரணத்தால் நாங்களே முன்வந்து இந்தப் பள்ளிகளை அரசுக்கு ஒப்படைத்து விடுகிறோம் என்று சொன்னால், அதை அரசு ஏற்றுக்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒப்படைக்க முன்வருவார்களானால், அந்தப் பள்ளி குறித்து வேறு யாரும் அதற்குப் பின்னர் தலையீடு செய்வதற்கான காரணங்கள் இல்லாமல் இருக்குமானால், அரசு ஏற்றுக்கொள்ள முன்வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[1998 மே 18

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது விதிப்படிதான் மற்ற பள்ளிகள் எல்லாம் நடத்தப்பட வேண்டும், அப்படி நடத்தப்படவில்லை என்று சொன்னால், புகார்கள் வந்தால், கவனிப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அதேபோல் C.B.S.E. பள்ளிகளுக்கு இவ்வளவுதான் கட்டணம் வசூலிக்கவேண்டும் என்று விதி இல்லை, ஆசிரியர்களுக்கு இவ்வளவுதான் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்றும் விதி இல்லை. ஆகவே, அவர்கள் நிறைய பணத்தை Capitation fee என்ற முறையில் சாதாரணமாக L.K.G. Admission-க்குக்கூட 15 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் முதலில் Admission கொடுக்கிறார்கள். பிறகு அவர்கள் Term Fees ஆயிரம் ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். இப்படி நிறைய பணத்தை பிடுங்கக்கூடிய ஒரு . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கிராமப் பகுதியைப் பற்றிய வினா.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில்கூட இப்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நிறைய வந்துவிட்டன. கிராமப் பகுதிகளில் இப்படி சுரண்டல் நடைபெறுகிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நெறிப்படுத்த மெட்ரிகுலேஷன் படிப்புக்கு தனியாக Directorate ஒன்றை உருவாக்கி, இதற்கு ஏதாவது தனியாக சட்ட திட்டங்களைக் கொண்டுவந்து, இதை நெறிமுறைப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு ஆலோசிக்கும். இருந்தாலும்கூட 15,000 ரூபாயோ, 10,000 ரூபாயோ, அதைக் கொடுப்பதற்குக் Queue வரிசையிலேபோய் நிற்பவர்களை மாண்புமிகு உறுப்பினர்தான் கண்காணித்துத் தடுக்க வேண்டும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகளே இல்லாத கிராமங்களிலே, தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா? இந்த ஆண்டுக்கு உரிய கருத்துருவிலே மன்னார்குடி தொகுதியிலே ஓர்



1998 மே 18]

ஊராட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான அனுமதி இந்த ஆண்டே வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகளும், அடுத்த ஆண்டு 400 தொடக்கப் பள்ளிகளும் தொடங்குவதன் மூலமாகத் தொடக்கப் பள்ளி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு கொள்கை முடிவு எடுத்திருக்கிறது. இந்த ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகளும், நிச்சயமாக மாவட்டந்தோறும், கூடுமானவரையில் பரவலாக, அந்தப் பள்ளிகள், வருவதற்கு அரசு கருதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அங்கீகாரம் பெற்று, அரசின் நிதியுதவி பெற்று, சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளிகள், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க அரசு அனுமதி அளிக்கும்போது, இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பறறாமல், தனது சமூகத்தைச் சேர்ந்தவர்களை சிலர் நியமித்துக்கொள்ளும் நிலையை மாற்றி, இட ஒதுக்கீட்டை அந்தப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அவ்வாறு ஆசிரியர்கள் நியமித்து உள்ளதை ரத்து செய்து, மீண்டும் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் பள்ளிகள் என்று சொன்னாலே சில தனி உரிமைகள் அவர்களுக்கு இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்குகிறபோது, அவர்கள் தெரிவித்த கருத்து இது: மொத்தத்தில் 100-க்கு 50 போவது சிறுபான்மை சமூக மாணவர்கள் அந்தக் கல்வி நிலையத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஓர் ஆணை இருக்கிறது. ஏனென்றால், பிற சமூகத்துப் பிள்ளைகளை அதிகம் சேர்த்து, தொழில் முறையில் கல்வி நிலையத்தை நடத்தி இலாபம் பெறுவதற்காக சிறுபான்மை என்ற பெயரை வைத்துக்கொண்டு அல்லது அந்த அமைப்பை வைத்துக்கொண்டு, பள்ளி நடத்துகிற, கல்லூரி நடத்துகிற நிலைமை இருக்கிறது என்பதால் உச்ச நீதிமன்றம் அப்படி ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எனவே, அதை முழு அளவில் கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை.

[1998 மே 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலும், தனியார் கல்லூரிகளிலும், இட ஒதுக்கீட்டுக்கு எதிராகச் செயல்படக்கூடிய வகையில், தாழ்ந்தப்பட்ட, மிக மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கின்றபொழுது முதலில் ஒரு மாதம் அல்லது 6 மாத காலத்திற்கு நியமிக்கிறார்கள். பின்பு அவர்களிடத்திலே வற்புறுத்தி இராஜினாமாக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களை அல்லது அவர்களுக்கு வேண்டியவர்களை நியமித்துக் கொள்ளக்கூடிய போக்கு தனியார் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் நடைமுறையில் இருக்கிறது. எனவே, அதைத் தடுத்து நிறுத்தி, தாழ்த்தப்பட்ட, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்ட ஆசிரியர்களுடைய பங்கு முறையாகக் கிடைக்கக்கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி எந்தத் தனியார் கல்வி நிலையமாக இருந்தாலும், அந்தக் கல்வி நிலையம் இந்தச் சமூக நீதி அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டிய முறை இருக்குமானால், அந்த முறைப்படி நியமிக்கப்பட்ட எந்த ஆசிரியரை விலக்கினாலும் அது செல்லாது. அவர்களை நீக்குவதோ, இராஜினாமா செய்யச் சொல்லுவதோ முறையற்றது. அப்படி ஏதேனும் குறைபாடு இருந்து தனிப்பட்ட முறையில் விவரமாகத் தெரிவிக்கப்படுமானால், அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே, மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் என்ற ஒரு திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்திலே, கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டப்படும்பொழுது, ஆதிதிராவிடர்களுக்குப் பள்ளிக் கட்டடம் ஒதுக்கப்படுவது இல்லை. எனவே, இதைக் கருத்திற்கொண்டு, அந்தத் தொடக்கப் பள்ளிகளுக்கு—ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளிகளுக்கு—கூடுதல் பள்ளிக் கட்டடம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.



1998 மே 18]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக, அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலே எந்தப் பள்ளிக்கூடங்கள் நிலை உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறதோ அவற்றை அந்தத் திட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்ள முடியுமா என்று அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 522, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு கல்வி அமைச்சர்

**522—**

**அரக்கோணம் நகரில் கலைக் கல்லூரி அமைத்தல்**

***13592—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் அரசுக் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

முற்பகல் 9-45

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரக்கோணம் தொகுதி ஒரு வளர்ந்து வரும் தொகுதி ஆகும். அரக்கோணம் நகரம் மட்டும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகைக் கொண்ட நகரம். அங்கே ஐ.என்.எஸ். இராஜாளி மற்றும் இரயில்வே பணிமனை எல்லாம் உண்டு. என்னுடைய நகரத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 800 கிராமங்களுக்கு மேல் உண்டு. அந்தக் கிராமங்களிலிருந்து மாணவ, மாணவியர்கள் சென்னைக்கும், வேலூருக்கும் சென்றுதான் படிக்கின்ற ஒரு நிலைமை.

[1998 மே 18

அதிலும், குறிப்பாக மாணவியர்கள் இரவிலே வெகுநேரம் கழித்து வீட்டிற்குத் திரும்பும்போது அவர்களுடைய பெற்றோர்கள் மிகவும் கவலைக்குள்ளாகிறார்கள். அரசு மறுபரிசீலனை செய்து, தயவுசெய்து என்னுடைய அரக்கோணம் நகருக்கு ஒரு அரசு கலைக் கல்லூரி வழங்க பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்லூரிகள் ஏற்படுத்துவது என்ற ஒரு கொள்கை ஏற்கப்படுமானால், அப்போது அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலை, அறிவியல் கல்லூரிகளை தனியார் தொடங்க முன்வரும்போது அரசு என்னென்ன விதிமுறைகளை வகுக்கிறது? அப்படி அந்த விதிமுறைகளுக்குட்பட்டு கல்லூரிகள் தொடங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டினுடைய கல்வி தொடங்க வேண்டிய காலகட்டத்திற்கு 6 மாதத்திற்கு முன்னால் டிசம்பருக்குள்ளாக விண்ணப்பம் அனுப்பப்படுமானால், நகர்ப்புறமாக இருந்தால் எவ்வளவு நிலம் இருக்க வேண்டுமோ அந்த அளவு நிலம், பேரூராட்சியாக இருந்தால் அதற்குக் குறிப்பிடப்பட்ட அளவு நிலம், கிராமப் பகுதியாக இருந்தால் அதற்குக் குறிப்பிட்ட அளவு பரப்பளவு நிலம் இருக்குமானால், அந்த நிறுவனங்களுக்காக Endowment நிதி வைக்கப்படுமானால் தற்காலிகமாக கல்வி நிலையத்தைத் தொடங்குவதற்கு ஒரு வாடகைக் கட்டடமோ, தனியாருடைய வேறு கட்டடங்களோ கிடைக்கும் வசதி இருக்குமானால், இந்த அடிப்படைகளில் அவை பரிசீலிக்கப்படும். பரிசீலிக்கப்பட்டு, உரிய தகுதி இருக்குமானால் கல்லூரி நடத்துவது ஏற்றுக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 523, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1998 மே 18]

**523—**

**ஒட்டன்சத்திரத்தில் அரசு மருத்துவமனை**

***3299—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): 1997-98 ஆம் ஆண்டு பகுதி 2-ம் திட்டத்தில், ஒட்டன்சத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுத்ததற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஒட்டன்சத்திரம் நகரம் வளர்ந்து வரக்கூடிய நகரம். இப்போது அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு, ஸ்கேன், எக்ஸ்ரே, கூடுதலாக டாக்டர்கள், கூடுதலான செவிலியர்கள் இல்லை. தற்சமயம் அங்கு விபத்து ஏற்பட்டாலும் பழனிக்கோ, திண்டுக்கல்லுக்கோ அந்த நோயாளிகளைக் கொண்டு போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே அந்த வசதிகளையெல்லாம் ஏற்படுத்தித்தர முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1998 மே 18

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளும் படிப்படியாக செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 524, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**524—**

## மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

***9724—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர், வடக்கன்குளம், திசையன்விளை, பணகுடி ஆகிய இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு 1998-99-ஆம் நிதியாண்டில் இத்தகைய செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கும், நாகர்கோவிலுக்கும் இடையே உள்ள மிகப் பெரிய வளர்ந்து வரும் நகரம் வள்ளியூர். ஆகவே, வள்ளியூரிலாவது இந்த ஆண்டு ஒரு அரசு மருத்துவமனை உருவாக்கித்தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு, வடக்கன்குளத்திற்கும், திசையன்விளைக்கும் 24 மணி நேர ஆரம்ப சுகாதார மையமாக ஆக்கித் தந்ததற்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு,



1998 மே 18]

அதேபோன்று பணகுடி, கூடங்குளம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் 24 மணி நேர அரசு ஆரம்ப சுகாதார மையமாக உயர்த்தித் தருவீர்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆசிரியர், துணை வினாவை எழுதி வைத்துப் படிப்பதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாலுகா தலைநகரங்களிலே இப்போது வட்டார மருத்துவமனை தொடங்கப்பட்டு, இப்போது இந்த அரசு அனைத்து இடங்களிலும் மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி அங்கே உள்ள வடக்கன்குளம் ஆகிய இடங்களிலே இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு இப்போது அரசிடம் இல்லை. இருந்தாலும் எதிர்காலத்திலே நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு இது பற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 525, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**525—**

## திருவோணத்தைத் தனி வட்டமாக்குதல்

***9664—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்தைத் தனி வட்டமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணத்தைத் தனி வட்டமாக ஆக்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் இதைத் தனி வட்டமாக, தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று சொல்லி, பரிசீலனை செய்து பல கிராமங்களை அழைத்துப் பேசி ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னால் அதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். ஒரத்தநாடு வட்டம் ஒரு பெரிய வட்டம், பட்டுக்கோட்டை வட்டம் பெரிய வட்டம், இவற்றைப் பிரித்து திருவோணத்தை ஒரு வட்டமாக அமைக்க அரசு ஆவன செய்வது நல்லது. அது நிருவாகத்திற்கும், மக்களுக்கும் ஏற்றதாக இருக்கும் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட கேள்விக்கு எனது சுருக்கமான பதிலைத் தர விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் கீழ்க்கண்ட வட்டங்கள் அமைந்துள்ளன. ஒன்று தஞ்சாவூர், மற்றவை, ஒரத்தநாடு, திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர், பாபநாசம், பட்டுக்கோட்டை, பேராவூரணி. மேலும் கீழ்க்கண்ட புதிய 11 வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை 1-1-1997 முதல் செயல்பட்டு வருகின்றன. அவை, பூந்தமல்லி, தாம்பரம், திருக்கழுக்குன்றம், கீழ்வேலூர், எடப்பாடி, கங்கவல்லி, வேப்பம்தட்டை, மணச்சநல்லூர், கிருஷ்ணராயபுரம், தேவி, போடிநாயக்கனூர். மேலே குறிப்பிட்ட 11 புதிய வட்டங்கள் 1-1-1997 முதல் செயல்பட்டு வருகின்ற நிலையில், தஞ்சை மாவட்டம், திருவோணத்தை தனி வட்டமாக ஆக்குவது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அதோடு, புதிய வட்டங்கள் மற்றும் புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிருவாக அமைப்புகளை நிதிநிலை காரணமாக 20-6-1998 வரை உருவாக்குவதில்லை என்று அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே, வரும் 20-6-1998-க்குப் பிறகு உறுப்பினர் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 526, திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.





526—

### பாதாள சாக்கடையைச் சீர் செய்தல்

***16374—மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்)**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, தாணா தெரு விரிவு தொடங்கி, பேசின் பாலத்தில் முடிவடையும் பாதாள சாக்கடை தூர்ந்து போயிருப்பதால், மழைக் காலங்களில் எழும்பூர், புரசைவாக்கம், பெரம்பூர் மற்றும் பூங்கா நகர் ஆகிய இடங்கள் பாதிக்கப்படுவதால் அதனைச் சீர் செய்துதர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாணா தெரு முதல் எழும்பூர், புரசைவாக்கம், பெரம்பூர் மற்றும் பூங்காநகர் பகுதியிலுள்ள குழாய்களில் தூர் வாரும் பணி சென்னைக் குடிநீர் வாரியத்தால் இராட்சத இயந்திரங்கள் மூலமும், பந்து செலுத்தும் முறை மூலமும், இழுவை வாளி இயந்திரங்கள் மூலமும், செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதியிலுள்ள 49 கி.மீ. நீள கழிவுநீர்க் குழாய்களில் பிப்ரவரி 1998-லிருந்து இதுவரை 9 கி.மீ. நீளத்திற்கு சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள குழாய்கள் சுத்தப்படுத்தப்படும் பணி இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்திற்குள் முடிக்கப்படும்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலங்களில் என்னுடைய தொகுதியிலுள்ள கே.எம்.கார்டன் பகுதி வெள்ளத்தால் மிதக்கும் நிலை ஏற்பட்டு, இதனால் அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இதற்குக் காரணம், தாணா தெரு extension-ல் தொடங்கி, பூங்கா நகர் வழியாக பேசின் பாலத்தில் முடிகின்ற பாதாள சாக்கடைதான். .Arch drain என்று அழைக்கப்படுகிற இந்தப் பாதாள சாக்கடை வெள்ளையர் காலத்தில் போடப்பட்டது. தற்போது இவை தூர்ந்து

[1998 மே 18

போய்விட்டதாலும், அந்தக் கால்வாய் மீது ஆக்கிரமிப்புகள் இருக்கின்ற காரணத்தினாலும், மழை நேரத்திலே மழை நீர் வெளியேறுவதற்கு வழியில்லாமல் ஊருக்குள் சென்று மக்கள் மூழ்குகின்ற நிலை ஏற்படுகிறது. இந்த ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவாகக் கேட்கவும். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அழைத்துச் சென்று நேரிடையாக அந்தப் பகுதியைக் காட்டிய காரணத்தினால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் என்னவென்றால், இந்தப் பணி 101-வது வட்டத்தில் தொடங்கி, பேசின் பாலத்தில் முடிவடைய வேண்டியது. ஆனால், தற்போது அமைச்சர் அவர்களால் நடைபெறுவதாகச் சொல்லப்பட்ட பணி, என்னுடைய தொகுதிக்குட்பட்டு 99-வது வட்டத்தில் மட்டுமே நடைபெற்றிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மழைக்காலம் வருகின்ற காரணத்தால் இதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சியால் குறிப்பிட்ட அளவிற்குத்தான் தொகையை ஒதுக்க முடியும். ஆனால், இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ 3 கோடி ரூபாய் தேவைப்படுவதால், முன்னுரிமை கொடுத்து மழைக்காலத்திற்குள் இந்தப் பணியை முடித்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தது. அந்தத் திட்டம் பற்றிய பதிலை இங்கே வைத்திருக்கிறேன். மழைக்காலங்களில் ஏற்படுகிற நிலையையும் பரிசீலிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மாநகராட்சியாக இருந்தாலும், இப்படிப்பட்ட வாரியமாக இருந்தாலும் அரசுக்கு உட்பட்டுத்தான் பணிபுரிகின்றன. அனைத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் பொறுப்பு ஏற்று இருக்கிறார்கள். அவர்களிடத்தில் தேவைப்படுகிற நிதியைப் பெற்று நிச்சயமாக இந்தப் பணியை நிறைவேற்றுகின்ற வாய்ப்பு உருவாக்கப்படும். எப்படி இந்தப் பணியை ஆரம்பித்தாலும், அது எளிதில் முடியாத பணியாகத்தான்



1998 மே 18]

இருக்கும். கூடுமானவரையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தக்க நடவடிக்கையை மாநகராட்சியும், இந்த வாரியமும், அரசும் இணைந்து மேற்கொள்ள வேண்டும். அந்தப் பணிகளுக்கெல்லாம் உறுப்பினர்கள் உதவி அளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படி அளித்தால் விரைவாக இந்தப் பணியைத் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 527. திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

527—

### நன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்தல்

***7332—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வடகால் மங்கலக்குறிச்சி அருகில் புதிய மடை அமைத்து சிறுத்தொண்டநல்லூர், பெருங்குளம் கிராமங்களைச் சார்ந்த நன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள சிறுத்தொண்டநல்லூர் பெருங்குளம் கிராமத்தைச் சேர்ந்த நிலங்கள் மருதூர் கீழக்கால் மூலம் பாசனம் பெற்று வருவதால் வடகாலில் புதிய மடை அமைத்துக் கொடுக்கத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மருதூர் கீழக்காலில் உள்ள குளம் பாசனப் பகுதியாக இருந்தாலும், மருதூர் கீழக்காலில் பெருங்குளம் கடைசி குளமாக இருக்கிறது. அங்கு தண்ணீர் வருவதில் பல்வேறு இடர்ப்பாடுகள் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

[1998 மே 18

திருவைகுண்டம் வடகாலில் மங்கலக்குறிச்சிக்கு அருகில் ஒரு மடை அமைத்துக் கொடுத்தால்தான் அது சிறுதொண்டநல்லூர், உண்டியனூர், பெருங்குளம் பகுதியிலுள்ள சுமார் 300 ஏக்கர் நிலப் பரப்பிற்குப் பாசன வசதி செய்வதற்கு-பெருங்குளத்தைவிட மிக அருகில் உள்ளதால் - ஏதுவாக இருக்கும். இதனால் சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பயன் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழக்கால் பகுதியில் வடகாலில் ஒரு சிறிய மடை அமைத்து, அந்தப் பகுதியிலுள்ள, தண்ணீர் வசதி பெறாத நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்க மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்ததைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் அறிவார்கள். காரணம், இவர் பாசனம் கொடுக்க வேண்டும் என்று கேட்கிற பகுதிகள் சிறுநட்டாத்தி, சிறுத்தொண்டநல்லூர், பெருங்குளம் பகுதிகளாகும். இது வடகாலிலிருந்து பிரிகிறது. ஆனால், வடகாலிலே ஏற்கெனவே 1,2,3 என்ற மடைகள் மூலமாக 20 எம்.சி. தண்ணீர் எடுக்கிறபோது, இந்த மடைகளை அடைத்துவிட்டுத்தான் எடுக்கிறோம். அடுத்ததாக, பெருங்குளத்திற்குத் தண்ணீர் வராது என்கிறார். அப்படி வராது இருக்கிற காரணத்தால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக பேரூர் bye-pass ஒன்று அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அது முடிவடைந்து, அந்த பேரூர் bye-pass வழியாகக்கூட தண்ணீர் பெருங்குளத்திற்கு வரமுடியாவிட்டால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்தக் கோரிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 528, டாக்டர் மு. தேவராஜன் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**528—**

### விசுவக்குடி நீர்த்தேக்கம் அமைத்தல்

***9944—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 மே 18]

பெரம்பலூர் தொகுதியிலுள்ள வேப்பந்தட்டை வட்டத்தில் விசுவக்குடி நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளது.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பரிசீலனையில் இருப்பதால், எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு (investigation) குறித்து, எங்களுடைய துறையின் Wing report-ஐக் கொடுத்த பிறகு, அதுகுறித்து அரசு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தையும் கேட்ட பிறகு, பரிசீலித்து முடிவு எடுக்கும். ஆனால், ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கு உரிய தகுதியான இடம் என்பது மட்டும் முதல் பார்வையிலேயே அறிக்கையின் மூலம் எங்களுக்குத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 529, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**529—**

### நட்டயீட்டுத் தொகை வழங்குதல்

***3824—திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சட்ட உதவி மூலம் வழங்கப்படும் நட்டயீட்டுத் தொகை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முழுமையாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகச் சட்டத் திருத்தம் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1998 மே 18

(அ) மற்றும் (ஆ) இலவச சட்ட உதவி மூலம் வழங்கப்படும் நட்டயீட்டுத் தொகை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முழுமையாகத்தான் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலுள்ள அனைத்து நஷ்டயீட்டு நீதிமன்றங்களிலும் - இதுபோன்ற நஷ்டயீட்டு மனு செய்யும்போது கணவனோ, மகனோ, மகளோ, மனைவியோ இப்படி விபத்தால் பலியாக்கப் பட்டவர்களுடைய உறவினர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லும்போது, மக்கள் நீதிமன்றங்களில் முடிக்கப்படும் வழக்காக இருந்தாலும் சரி, தற்போது நடத்தி முடிக்கப்படும் வழக்குகளாக இருந்தாலும் சரி, தீர்ப்பு வழங்கப்படுகின்றபோது 2 அல்லது 3 வருடங்களுக்கு நட்டயீட்டுத் தொகையை வங்கிகளில் வைப்பு நிதியாக வைக்கின்றனர். இதனால் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகின்றன; பல சோதனைகளுக்கு உள்ளாகின்றன. எனவே, இதைக் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு இலவச பண உதவியைத் தவிர மற்ற நஷ்டயீட்டுத் தொகையை உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட பல்வேறு தீர்ப்புகளின் அடிப்படையில் Tamil Nadu Motor Vehicles Act—வாகன உறுதிச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் மூன்று ஆண்டுகளுக்கு, அவர்களுக்கு அந்தத் தொகை பிடித்து வைக்கப்படுகிறது. அந்த மூன்று ஆண்டுகளில்கூட, அவர்கள் ஏதேனும் சொத்துக்கள் வாங்க விரும்பினால், அதற்குக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், Minor sons—வயது முதிர்ச்சி அடையாத சிறு குழந்தைகள் இருப்பார்களேயானால், அவர்களுடைய அந்த இழப்பீட்டுத் தொகையை வைப்புத் தொகையில் பிடித்து வைத்துக் கொடுக்கவேண்டுமென்றும் சட்டம் இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் இது வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்குள்ளாகக்கூடிய குடும்பங்களுக்கான வழக்குகள் நடக்கின்றபோது, நீதிமன்றத்தில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்



1998 மே 18]

ஆகின்றன. எனவே, மக்கள் நீதிமன்றம் உருவாக்கப்பட்டால், எல்லாவிதமான வழக்குகளும் ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்குள் முடியக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. Corporation-களைப் பொறுத்தவரையில் அந்த நீதிமன்றத்தில் முடித்துக் கொள்வார்களேயானால், செலவும் மீதமாகும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் உதவியும் உடனடியாகக் கிடைக்கும் என்ற வகையிலும், நீதிமன்றங்களுக்கும் பளு குறையும் என்ற வகையிலும் இந்த முறையை நம்முடைய அனைத்து Corporation-களுக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 530, திரு. ஆர். மகேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

530—

**திருப்பத்தூர் - மைக்காமேடு பேருந்து இயக்குதல்**

***4294-திரு. ஆர். மகேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், திருப்பத்தூரிலிருந்து மைக்காமேடு கிராமத்திற்கு செல்லரப்பட்டி வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று இயக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 531, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**531—**

## தமிழ் இசைப் பள்ளி ஏற்படுத்துதல்

***7439—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரப் பகுதியில் தமிழ் இசைப் பள்ளி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரப் பகுதியில் தமிழ் இசைப் பள்ளி ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியில் பிறந்த, உலக நாடுகளிடையே முதன்முதலாக தமிழ் இசையை வளர்த்தவர்கள் மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத்தாண்டவ தீட்சிதர் மற்றும் அருணாசலக் கவிராயர். அவர்களைத் தொடர்ந்து மறைந்த சீர்காழி கோவிந்தராஜன் அவர்களும், அவரைத் தொடர்ந்து அவரது குமாரர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களும் தமிழ் இசையை நன்றாக வளர்த்து வருகின்றார்கள். இந்தத் தமிழ் இசை மேதைகளெல்லாம் சீர்காழியிலே பிறந்தவர்கள். கடந்த 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதிகூட, நம்முடைய துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் அங்கே மூவர் விழா நடைபெற்றபோது அதிலே கலந்துகொண்டு, தமிழக முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்த நிதியைக் கொண்டு தமிழ் இசை மூவர் விழா அங்கு நடத்தப்பட்டது. அதேபோன்று இந்த ஆண்டு பிப்ரவரி மாதமும் மூவர் விழா மூன்று நாட்கள் நடத்தப்பட்டன. எனவே, தமிழிசையை வெளிநாடுகளில் வளர்த்தவர்களுடைய நினைவாக மீண்டும் அரசு மறுபரிசீலனை செய்து தமிழிசையை வளர்க்கும் நோக்கத்தோடு சீர்காழி நகரிலே தமிழிசைப் பள்ளி ஒன்றை அரசு நிறுவ முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, சீர்காழியில் மூவர் என்று பெயர் பெற்ற தமிழிசை வேந்தர்கள் அந்த நகரத்திற்கும், இந்த நாட்டிற்கும் பெரும் சிறப்பைச் சேர்த்திருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அருணாசலக் கவிராயர் பாடல்களும், முத்துத்தாண்டவர் பாடல்களும், மாரிமுத்தாப் பிள்ளை அவர்களுடைய பாடல்களும் இன்றைக்கும் பலரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, அவர்களுடைய சிறப்பை நாங்கள் முழுமையாக உணர்ந்துதான், கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த மூவருக்குமான தமிழிசை விழாவை தமிழக அரசு நடத்தி வருகின்றது. தொடர்ந்து நடத்தும். அதேநேரத்தில் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, சீர்காழியில் இசைப் பள்ளியைத் தொடங்குவது குறித்து வெகு விரைவில் முடிவு எடுக்கவேண்டி இருக்கும். காரணம் அதற்குப் பக்கத்தில் இருக்கின்ற புதுக்கோட்டையில், அடுத்து வருகின்ற திருச்சியில், இந்தப்புறம் இருக்கின்ற திருவாரூரில், அடுத்து இருக்கின்ற திருவையாற்றில், அதற்கு அடுத்து இருக்கின்ற கடலூரில், அதற்கு அடுத்து இருக்கின்ற விழுப்புரத்தில் இத்தனைக்கும், இசைப் பள்ளிகள் வந்துவிட்டன. எனவே எஞ்சியிருப்பது சீர்காழி ஒன்றுதான். நல்ல முடிவை எடுப்போம்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 532, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**532—**

## மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தினை ஆழப்படுத்துதல்

***8160—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 மே 18

(அ) மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தினை ஆழப்படுத்தி, நீர் தேக்கி படகு விடும் நிலை உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில், பல நூறாண்டு காலமாக, மிக அழகான முறையிலே அமைக்கப்பட்டு, மதுரை மக்கள் மட்டுமின்றி, தமிழக மக்களும், குறிப்பாக வெளிநாட்டவர்களும் வந்து, அங்கே படகுப் பயணம் செய்தார்கள். அந்தக் குளத்தின் மத்தியிலே இருக்கக்கூடிய அழகான மைய மண்டபத்தின் உச்சியிலே ஏறிப் பார்த்தால், மதுரை மாநகரமே தெரியக்கூடிய அளவில், அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தெப்பக்குளத்தில் கடந்த பத்தாண்டு காலத்திற்கு முன்புவரை தண்ணீரும் இருந்து, படகும் சென்று வந்தது. ஆனால், கடந்த பத்தாண்டு காலமாக தண்ணீர் இல்லாமல், வறண்டு கிடக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மீண்டும் அதை ஒரு அழகிய தெப்பக்குளமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, தண்ணீரை நிரப்பி, படகு விடுவதற்கும் அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மூன்று கோணத்தில் ஆய்ந்து விடை சொல்ல வேண்டியிருக்கிறது. வைகையிலே தண்ணீர் வரத்து என்பது தட்டுப்பாடான நிலை என்பதை நாம் அறிவோம். எப்பொழுதாவது பெருவெள்ளம் வந்தால்தான் வைகையில் தண்ணீர் வருகிறது. இல்லாவிட்டால் அதுவே வறண்டு போய்விடுகிறது. எனவே, அங்குள்ள வரத்துக்கால்வாய்களைச் சரிசெய்து, நிரந்தரமாக இந்தத்



1998 மே 18]

தெப்பக்குளத்திற்குத் தண்ணீர் விடுவது என்பது ஒரு திட்டம். பத்தாண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலை இப்போது இல்லை. ஏராளமான ஆக்கிரமிப்புகளின் காரணமாக மதுரையில் எந்த இடத்தில் வீடு கட்டப்பட்டிருக்கிறது என்பதே தெரியாத நிலை கொஞ்ச காலத்திற்கு முன்னால் இருந்தது. இப்போது கொஞ்சம் தெரிந்திருக்கிறது. இன்னும் தெரியாமலும் இருக்கின்றது. எனவே, அந்த வரத்துக்கால்வாய்களைச் சரிசெய்தால்தான், அவைமூலம் நிரந்தரமாக தண்ணீரைக் கொண்டுவர முடியும். அதுமட்டுமல்லாமல், இந்தத் தெப்பக்குளத்தைச் சுற்றி ஏராளமான ஆழ்துளைக் கிணறுகளைப்போட்டு ஏராளமான வீடுகளில் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, தெப்பக்குளத்தில் நீரை நிரப்பினாலும், அடிப்படையிலே இருக்கின்ற நீர்வள ஆதாரத்திற்கு அது பயன்பட்டு, ஆழ்துளைக் கிணறுகளுக்குத்தான் அது பெரிதும் பயன்படுமே தவிர, படகு விடுகின்றபோது தண்ணீர் இருக்குமா என்பது ஐயப்பாடுதான். மூன்றாவது, இந்தத் தெப்பக்குளத்தில் இப்போது மட்டுமல்ல, எப்பொழுதாவது, தேவைப்படுகின்றபோது, தை மாதத்தில் தெப்ப உற்சவம் நடைபெறுகிறபோது, தண்ணீரை முழுவதுமாக நிரப்புகிறோம். அப்படியும் வைகையிலிருந்து நிரப்ப முடியாவிட்டால், பக்கத்தில் இருக்கின்ற மணலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து மாநகராட்சியே தண்ணீரை நிரப்புகிறது; தெப்ப விழா நடைபெறுகிறது. எனவே, இந்த மூன்று காரணத்தினாலும், இதைச் சிந்தித்து, தொடர்ந்து இதை நிலைப்படுத்த முடியுமா என்பது குறித்து இந்த அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 533, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**533—**

### நியாய விலைக் கடை ஏற்படுத்துதல்

***10488—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 18

ஈரோடு மாவட்டம், அந்தியூர், சத்தியமங்கலம், தாளவாடி ஆகிய ஒன்றியங்களில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு நடமாடும் நியாய விலைக் கடை ஏற்படுத்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், அந்தியூர் மலைவாழ் பகுதி மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்களை அந்தியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமான நடமாடும் ஊர்தி மூலமாக முன்பு விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தற்போது அங்கு நிலவும் சூழ்நிலை காரணமாக அத்தியாவசியப் பொருட்களை நடமாடும் ஊர்தி மூலமாக விநியோகிக்க முடியவில்லை. இருப்பினும், இம்மாவட்டத்தில் அந்தியூர், சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி வட்டங்களில் மக்கள் நலன் மற்றும் தேவைகளைக் கருதி நிபந்தனைகளுக்குட்பட்டு முழுநேர/பகுதிநேர நியாயவிலைக் கடைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலுள்ள தாளவாடி ஒன்றியம் என்பது, முழுக்க முழுக்க மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களும் அதிகமாக வாழ்ந்து வருகின்ற பகுதி. அதேபோல, சத்தியமங்கலம் ஒன்றியத்திலுள்ள குன்றி, கோமாலம் போன்ற பகுதிகளிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் முழுக்க முழுக்க மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கே, 11 கிலோ மீட்டர், 12 கிலோ மீட்டர் தொலைவிற்குச் சாலையே இல்லாத சூழ்நிலை இருக்கின்றது. மேலும், அந்தியூர் ஒன்றியத்திலுள்ள பர்கூருக்கும், பர்கூரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் நடமாடும் ஊர்திகள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வந்தது, தற்போது விநியோகிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, கீழ்நிலையிலே இருக்கின்ற, விவரம் தெரியாத மக்களுக்கு உடனடியாக அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுத்து, இன்னும் ஒரு மாத காலத்திற்குள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1998 மே 18]

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாளவாடி பகுதி பற்றி தெரிவித்தார்கள். தாளவாடி வட்டாரத்தில் கிட்டத்தட்ட 15 நியாயவிலைக் கடைகள் முழுநேரக் கடைகளாக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதேபோல, சத்தியமங்கலம் வட்டாரத்தில் குன்றி உள்பட 5 இடங்களில் நியாயவிலைக் கடைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடமாடும் ஊர்தியை ஏன் அந்தப் பகுதியில் இயக்கமுடியவில்லை என்றால் சந்தனக் கடத்தல்காரனுடைய தொந்தரவு ஒருபுறம்; மறுபுறம் போலீஸ், கட்டுப்பாடு; இப்படி இருக்கின்ற காரணத்தால் தொடர்ந்து அங்கே ஊர்தியை இயக்க முடியவில்லை. இருப்பினும் மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு நிச்சயமாக அங்கு முழுநேரக் கடைகளாகவே திறப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் எந்தெந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் 15 நாட்களுக்குள்ளாக அந்தக் கடைகளைத் திறப்பதற்கு உத்தரவு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பொங்கலூர் தொகுதியில், சுல்தான்பேட்டை வட்டாரத்திலும் அக்கநாயக்கன்பாளையத்திலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே நடத்தப்படக்கூடிய நியாயவிலைக் கடைகளில் 925 அட்டைகள் இருக்கின்றன. அதிலே வேலப்பநாயக்கன்பாளையம் கிராமத்தில் மட்டும் 360 அட்டைகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? இப்படி நீங்கள் துணை வினா கேட்டால் அமைச்சருக்கு இந்தத் தகவல்கள் எப்படித் தெரியும்? கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அதிகமான அட்டைகள் இருப்பதால் அதைப் பிரித்து கடைகள் அமைக்க அந்த கிராம மக்கள் இலவசமாக வீடுகள்

[1998 மே 18

கொடுப்பதற்கு ஒப்பந்தங்கள் எல்லாம் போட்டு கிட்டத்தட்ட 6 மாத காலம் ஆகிறது. எனவே வேலப்பநாயக்கன்பாளையத்திலே ஒரு பகுதி நேரக் கடையைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உத்தரவிலே தெளிவாக இருக்கிறது. ஒரு கடையில் 800 அட்டைகளுக்கு மேல் இருக்குமானால், பிரிக்கப்படக்கூடிய இடம் 2 கிலோ மீட்டருக்குத் தள்ளி இருக்குமானால் உடனடியாகப் பிரித்துத் தர வேண்டுமென்று அரசு உத்தரவில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிபந்தனைகளுக்கு அந்த இடம் பொருந்துமானால் உடனடியாக அந்தக் கடையைத் திறப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்ணந்தூர் ஒன்றியம், போகமலை என்ற கிராமத்தில் மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அந்தப் பகுதிக்குச் செல்வதென்றால், கிட்டத்தட்ட 10 மைல் தூரம் ஒருவழிப் பாதையிலேதான் நடந்து செல்ல வேண்டும். அங்கு ஏற்கெனவே கழுதைகள் மூலமாக உணவுப் பொருட்கள் எடுத்துச் சென்றிருக்கிறார்கள். தற்போது அது சாத்தியமில்லை என்று நிறுத்தப்பட்டுவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரும், நானும் அந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். தலைச்சுமை வழியாக அந்த உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதாக அந்த மக்கள் கூறினார்கள். அப்படி தலையிலே அந்தப் பொருட்களை எடுத்துச் செல்லக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய கட்டணம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அந்த உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு யாரும் முன்வருவதில்லை. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட இது சம்பந்தமாக விளக்கமாக கடிதம் கொடுத்திருக்கிறேன். அவர்களும் இதுபற்றி இணைப் பதிவாளரிடம் எடுத்துக் கூறினார்கள். ஆனால் இதுவரையில் தலையின் மூலமாக உணவுப் பொருட்களை போகமலைக்கு எடுத்துச் செல்லக்கூடியவர்களுக்கு கொடுக்கக்கூடிய கட்டணம் உயர்த்திக் கொடுக்கப்படவில்லை. அந்தக் கட்டணத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு உடனடியாக அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.



1998 மே 18]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-க்கும் மேற்பட்ட இடங்களிலே ஊர்திகள் மூலமாக நியாயவிலைக்கடைகள் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. சில நேரங்களில் சாலை வசதி சரியாக இல்லாத காரணத்தினால் அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்ற முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைச்சுமையாய் எடுத்துச் செல்பவர்களின் ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுத்து விரைவிலே அந்த மக்களுக்குப் பொருட்கள் கிடைப்பதற்கு முழு முயற்சியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள விதிமுறைப்படி 200 குடும்ப அட்டைகளும், 2 கிலோ மீட்டர் தூரமும் இருந்தால் புதிய பகுதி நேரக் கடைகள் ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறது. சில இடங்களில் தூரம் 5 கிலோமீட்டருக்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் கார்டுகளின் எண்ணிக்கை 200-க்கு சற்றுக் குறைவாக இருக்கின்றது. இப்படிப்பட்ட இடங்களில் தூரத்தைக் கணக்கில் கொண்டு அந்த விதிமுறையைத் தளர்த்தித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே ஒரு புதிய நியாயவிலைக் கடை திறக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலம் அதற்காக பாடுபட வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உழைக்கின்ற மக்களுக்கு உடனடியாகப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்தப் புதிய திட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறார்கள். இதிலும் குறிப்பிட்ட சில இடங்களில் அவர்களுக்கு கடைகள் நிச்சயமாகத் திறக்கப்பட வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. அந்த இடத்திலே சாதிப் பிரச்சினையோ அல்லது 5 கி.லோமீட்டருக்கு மேல் தூரம் இருக்கிறது என்றோ மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருதுவார்களேயானால் 100 அட்டைகள் இருந்தால்கூட ஒரு பகுதி நேரக் கடையைத் திறப்பதற்கு ஏற்கெனவே அரசு ஆணையிட்டிருக்கிறது. உரிய முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டு, அவர் அனுமதி மறுப்பாரேயானால்

[1998 மே 18

மறுபடியும் இங்கே வந்து சொன்னால் அதற்குரிய அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 534, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-15

**534—**

**கூட்டுறவு வங்கிக் கட்டடங்கள் நவீன முறையில் கட்டுதல்**

***11416—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டடங்களை நவீன முறையில் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பெரணமல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு நவீன வசதிகளுடன் கூடிய வங்கி அலுவலகக் கட்டடம் கட்ட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பெரணமல்லூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு நவீன கட்டட வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரணமல்லூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே அதற்குத் தேவையான இடம் இருக்கிறது. ஆனால் 15, 20 சதுர அடிகள் குறைவாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டடத்தில் முன் பகுதியை வடிவமைத்துக் கொடுத்தார்கள் என்று கருதுகிறேன். அந்த முன் வடிவமைப்பை



1998 மே 18]

மாற்றாமல், பின்புற வடிவமைப்பை மாற்றி அல்லது இரு அடுக்குகளாக மாற்றி பிரதான இடத்திலேயே அந்த வங்கிக்கான நவீன கட்டடத்தை கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 50 இடங்களிலே புதிய வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, அதற்கான வரைபடத்தையும் தேர்வு செய்து தந்தார்கள். எவ்வளவு அகலம், எவ்வளவு நீளம் இருக்க வேண்டுமென்ற வரைபடம் இருக்கிறது. இது குறித்து பல இடங்களிலிருந்து கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் எங்களுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எங்களுக்கு இருக்கின்ற பழைய இடம் முக்கிய இடத்திலே இருக்கிறது என்றும், வேறு இடத்திலே இடம் இருந்து அங்கு கட்டினால் கொஞ்சம் வியாபாரம் குறைவாக இருக்கும் என்றும், அதனால் பழைய இடத்திலேயே கொஞ்சம் குறைத்துக் கட்டிக் கொள்ளலாம் என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது உரிய முறையில் ஆய்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 535, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**535—**

**தோல் வியாதிகளைத் தடுத்தல்**

***5785—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் கவுண்டம்பட்டி என்ற பகுதியில் சாயப்பட்டறையிலிருந்து வெளிவரும் கழிவுநீரினால் அந்தப் பகுதி பாதிக்கப்படுவதோடு பல தோல் வியாதிகள் ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா?

[1998 மே 18

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். அறியும், சேலம் மாவட்டம் எடப்பாடி நகர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மொத்தம் 110 சலவை மற்றும் சாயப்பட்டறைகள் உள்ளன. 110 தொழிற்சாலைகளுக்கும் தன்னிலை விளக்கம் வாரியத்தால் கோரப்பட்டு 32 தொழிற்சாலைகளுக்கு மூடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, இதில் இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் வரை 26 தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. 41 தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி நகர், சாயத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அங்கு கைத்தறி, விசைத்தறி நெய்யக்கூடிய மக்கள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குத் துணையாக இந்தச் சாயப் பட்டறைகள் இருக்கின்றன. நான் இந்தக் கேள்வியிலே கேட்டிருப்பது கவுண்டம்பட்டி என்ற பகுதியிலே சாயத் தொழிலைச் செய்துவிட்டு அந்த சாயத் தண்ணீரை அப்படியே ரோட்டிலே விட்டுவிடுகிறார்கள். அதிலே நடந்து செல்வதால் பல தோல் வியாதிகள் வருகின்றன. இந்த இழிவு நிலையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பல கடிதங்களை வைத்துத்தான் 26 தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு துண்டிப்பு நடைபெற்றிருக்கிறது. இப்போது அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்து அதிபர்களும் Common Effluent Treatment Plant போடுவதற்கு வேண்டிய அடிப்படை வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இப்போது முழுமையாக 41 பேர் ஓர் இடத்தை தேர்வு செய்து இருக்கிறார்கள். அந்தப் பணி இன்னும் முடியாமல் இருக்கிறது. இப்போது அங்கே 26



1998 மே 18]

தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பிறகு நிலைமை ஓரளவுக்குக் கட்டுக்குள் அடங்கியிருக்கிறது. மேலும் ஏதாவது இதுகுறித்து உறுப்பினருக்கு தேவைப்படின், அவர் அதற்கான விவரங்களைத் தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாய சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த கால அவகாசம் தேவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதன் அடிப்படையிலே, எடப்பாடி நகரில் 26 பேர்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் 6 மாத கால அவகாசம் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு வழி இல்லாத காரணத்தினால்தான் உறுப்பினருடைய கோரிக்கையை வைத்து மின் துண்டிப்பு செய்யப்பட்டது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதை உடனடியாகக் கொடுத்து விட முடியாது. ஆகவே, அவர்களை ஓரளவுக்காவது ஒழுங்குப்படுத்தச் சொல்லி முறைப்படுத்தித் தருகின்ற பணியை உங்களுடைய முழு ஒத்துழைப்போடு செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 536, திரு. டி. மணி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**536—**

**கழிவுநீர், ஆற்றில் கலப்பதைத் தடுத்தல்**

***6436—திரு. டி. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மயிலார் கோட்டத்தில் அரசு குடியிருப்புகளுக்குப் பக்கத்திலிருக்கும் ரப்பர் பால் பதனிடும்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் ஆற்றில் கலப்பதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா, மயிலார் கிராமத்தில் அமைந்துள்ள அரசு ரப்பர் கழகம், மயிலார் டிவிஷன், ரப்பர் பால் பதனிடும் தொழிற்சாலையின் கழிவுநீர் தற்போது ஆற்றில் விடப்படுவதில்லை.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலார் கோட்டத்தில் இந்தத் தண்ணீர் ஆற்றில் விடப்படுவதில்லை என்ற தகவலைச் சொல்லி இருக்கின்றார்கள். அது உண்மைக்குப் புறம்பான தகவல் ஆகும். ஏனென்றால், கடந்த ஆண்டு நம்முடைய வனத் துறை அமைச்சர் அந்தப் பகுதிக்கு வந்திருந்தபோது நான் இந்தப் பிரச்சினையை அவர்களிடம் தெரிவித்தபோது அப்போதைக்கு அதைத் தடுத்தார்கள். ஆனால் மூன்று மாதம்தான் அது நிறுத்தப்பட்டிருந்தது. அங்கு தண்ணீர் இல்லாத இந்த வறட்சிக் காலத்தில் குளிக்கவும், குடிக்கவும் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்துகின்ற தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அந்தக் குடியிருப்புகளுக்கு கொஞ்சம் தள்ளி மணல் பகுதி இருக்கின்றது. அந்த இடத்தில் திறந்து விடலாம். ஆகவே, அந்த அடிப்படையிலே இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்துவதற்கும், அந்தப் பகுதியில் குடியிருக்கின்ற தொழிலாளர்களுக்கு குளிக்கவும், குடிக்கவும் உள்ள வகையில் அந்தத் தண்ணீர் மாசுபடாத வகையில பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கையினை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் 20-2-1997 அன்று மயிலாற்றிலே இந்தக் கழிவு நீர் விடப்பட்டது உண்மை. அதற்குப் பிறகு மாண்புமிகு வனத் துறை அமைச்சரும் அங்கே சென்று பார்த்து இருக்கிறார். இடையிலே அந்த ஆலை நிறுத்தப்பட்டு மீண்டும் 7-4-1997-ல்தான் இயக்கத்திற்கு வந்தது. நாங்கள் சில விதிமுறைகளை விதித்து அதை ஒழுங்குபடுத்தினால்தான் தடையின்மைச் சான்றிதழ் வழங்க முடியும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றோம். அந்தத் தண்ணீர் எந்தக் காரணத்தைக்





கொண்டும் விவசாயத்திற்குத்தான் பயன்படுத்தப்பட வேண்டுமேயொழிய ஆற்றில் கழிவு நீரை விடக் கூடாது என்ற அடிப்படையில் அவர்கள் சுத்திகரிப்புப் பணியை செய்ய வேண்டுமென்று கேட்டு N.O.C. கொடுக்காமல் இதுவரை வைத்திருக்கின்றோம். எல்லாவற்றையும் முறைப்படுத்திய பிறகுதான் அது வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினை இருக்கிறது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பிரச்சினைக்குத்தான் அமைச்சர் பதில் சொல்லிவிட்டாரே!

**திரு. டி. மணி:** ஒரு மாறுபட்ட கருத்து இருக்கிறது. அதாவது குடியிருப்புகள் இல்லாத ஆயிரக்கணக்கான ஏக்கர் இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளில் தண்ணீர் விட்டால் பிரச்சினை எதுவும் வராது. அதனால், அந்த ரீதியிலே ஏற்பாடு செய்தால், செலவும் குறைவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்த அடிப்படையில் ஒரு மாற்று ஏற்பாடு செய்தால் உசிதமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அப்படிப்பட்ட நிலங்களில் தண்ணீரை விடவேண்டுமென்பதுதான் நம்முடைய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய நிபந்தனை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 537, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

537—

### தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்

*7975— **திரு ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மே 18

அம்பத்தூரில் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வாடகைக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 538, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**538—**

**விட்டு வசதிக் கடனை ரத்து செய்தல்**

***10878—டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 1992-93-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் வீடுகளை இழந்து பாதிப்புக்குள்ளானவர்களுக்குக் கூட்டுறவு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன் தொகையைத் திருப்பிக் கட்ட முடியாத அளவுக்கு பொருளாதாரத்தில் மக்கள் நலிவுற்றிருக்கிற நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கடன் தொகையை ரத்து செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம் உள்பட 1992-93-ஆம் ஆண்டு பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி, மானியமாக, ரூ.14,79,02,500-ம் கடனாக ரூ. 10,78,73,000-ம் அட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 539, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1998 மே 18]

**539—**

**கால்நடை கிளை மருந்தகம் தொடங்குதல்**

***10637—திரு ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில், தியாகசமுத்திரத்தில் கால்நடை கிளை மருந்தகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பாபநாசம் தொகுதியில் தியாகசமுத்திரத்தில் கால்நடை கிளை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 540, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**540—**

**ஆதிதிராவிடர்களுக்கு ஆரம்பப் பள்ளி தொடங்குதல்**

***3024—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், கோசல்ராம் நகர் ஆதிதிராவிடர்களுக்கு ஆரம்பப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-25

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, களக்காடு பகுதியில் ஆதிதிராவிட மாணவர்கள் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் சென்று கல்வி பயில வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய நலனைக் கருதி, கோசல்ராம் நகர் ஆதிதிராவிடர்களுக்கு ஆரம்பப் பள்ளி அமைக்க அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை. ஆனால், அடக்கத்துடன் செயல்படும் தமிழக அரசு, புதிய தொடக்கப்பள்ளிகள் 300 இந்த ஆண்டும், 400 பள்ளிகள் அடுத்த ஆண்டும் தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. கடந்த ஆண்டும் 168 பள்ளிகளைத் தொடங்கி இருக்கிறது. அந்த 168 தொடக்கப்பள்ளிகளில் 14 பள்ளிகளை ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதிகளிலே அரசு ஆரம்பித்திருக்கிறது. ஆகவே, கல்வித் துறையை அணுகினால், சாத்தியக்கூறுகள் இருப்பின், எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

### (அ) அரசு அலுவலர்கள் ஓய்வுபெறும் வயது குறித்து முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க விரும்புகிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையை வைக்கின்றேன்.

மத்திய அரசு தனது அலுவலர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணிகளின் அலுவலர்கள் பதவியிலிருந்து ஓய்வுபெறும் வயதினை 58-லிருந்து 60-ஆக உயர்த்தியுள்ளது. தமிழக அரசும் தனது அலுவலர்களின் ஓய்வுபெறும் வயதினை அதிகரிப்பது பற்றி 16-5-1998-ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலித்தது. அரசு அலுவலர் ஓய்வு பெறும் வயதினை 58-லிருந்து 60-ஆக உயர்த்தினால், வரும் இரண்டு ஆண்டுகளில் அரசுப் பணிகளில் காலி இடங்கள் ஏற்படுவது வெகுவாகக் குறைந்துவிடும். இதனால், இந்த இரண்டு ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது தடைபெற்றுவிடும். மேலும், அரசு ஊழியர்கள் பலருக்கு இந்த இரண்டு ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைப்பதில் தடை ஏற்பட்டு விடும். அரசு அலுவலர் ஓய்வுபெறும் வயதினை 60-ஆக உயர்த்துவதால் அரசுக்கு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்குச் செலவு குறையும். 1000 கோடி ரூபாய் குறையும் இரண்டு ஆண்டுகளுக்கு. ஆயினும், தமிழகத்தின் இளைஞர்களின் வேலைவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு தமிழக அரசின் அலுவலர்களுக்கு பதவியிலிருந்து ஓய்வுபெறும் வயது தற்போதுள்ள 58 ஆண்டாகவே தொடர்ந்து இருக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[1998 மே 18

### (ஆ) மின்சார வாரியத்தில் போலியாக பணி மாறுதல் ஆவணங்கள் தயார் செய்தவர்கள் மீதான நடவடிக்கை குறித்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க விரும்புகிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் பின்வரும் அறிக்கையை வைக்கின்றேன்:

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியில் இல்லாத சிலர் பணியில் உள்ளது போல பணி மாறுதல் ஆவணங்களைப் போலியாகத் தயார் செய்து மற்ற இடங்களில் பணியில் சேர்ந்து மின் வாரியத்தின் ஊழியர்களாகப் பணிபுரிந்து வந்தனர். இதுமாதிரியாக, போலி ஆவணங்களின் அடிப்படையில் பணியில் சேர்ந்த 19 பேரும், மற்றும் போலி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு பணியில் சேராமல் இருந்த 2 பேரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீது, மேலும் மின்வாரியம் விசாரணை நடத்தி வருகிறது. இதுவரை நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், சென்னை சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் 18-5-1998-ல், இன்று, முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படும்.. இதில் சம்பந்தப்பட்டுள்ள வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் மீதும் குற்றவியல் நடவடிக்கை மற்றும் வாரியத்தின் மூலம் துறை நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இதுபோன்று வேறு ஏதேனும் குற்றங்கள் நடந்துள்ளனவா என்பதை விசாரிக்கவும், கண்காணிக்கவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



1998 மே 18]

### (இ) மையக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் குறித்து உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க விரும்புகிறார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன், உறுதி அளித்தவாறு, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்திட உத்தரவிட்டுள்ளது. அதற்கிணங்க, முதற்கட்டமாக நீதிமன்றங்களில் வழக்கில் உள்ள சில சங்கங்கள் தவிர, அனைத்து பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக, மைய கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் பின்கண்ட அட்டவணைப்படி நடத்தி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் பணி (1) மையக் கூட்டுறவுச் சங்கங்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட மையச் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து மையக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் (மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள், கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மற்றும் கூட்டுறவு அச்சகங்கள் நீங்கலாக) 3-7-1998 அன்று தொடங்கி 31-7-1998-க்குள் முடிக்கப்படும்.

முற்பகல் 10-30

(2) அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் 31-8-1998-க்குள்ளாக தேர்தல் நடத்தி முடிக்கப்படும்.

(3) அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் 30-9-1998-க்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்படும்.

(4) அனைத்து கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கும் மற்றும் கூட்டுறவு அச்சகங்களுக்கும் 31-10-1998-க்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்படும்.

தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட தலைமைச் சங்கங்கள் உள்ளிட்ட (1) அனைத்து தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும்

[திரு. க.நா. நேரு] [1998 மே 18

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நீங்கலாக, 31-8-1998-க்குள் தேர்தல் நடத்தி முடிக்கப்படும்.

(2) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு 15-10-1998-க்குள்ளும் (3) தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு 30-11-1998-க்குள்ளும் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சேலம் பனமரத்துப்பட்டியில் எம்.ஜி.ஆர் சிலை உடைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சேலம் பனமரத்துப்பட்டியில் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை உடைக்கப்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்துள்ளார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்போது சிலைகள் ஆங்காங்கே நிறைய வைக்கப்பட்டு, அதற்காக விழாக்கள் எடுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலையிலிருந்து, இப்போது சிலைகள் உடைக்கப்படுகின்ற காட்சிகள் அவ்வப்போது அரங்கேறி சட்டம் ஒழுங்கைக் கெடுக்கின்ற வகையில் சலசலப்பு ஏற்படுகிற நிலை உருவாகியிருக்கிறது.

பனமரத்துப்பட்டியில்கூட சென்ற 29 ஆம் தேதி எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை சமூக விரோதிகளால் உடைக்கப்பட்டிருக்கிறது. யாரோ இருவர்கூட கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் உண்மையான குற்றவாளிகள் அல்ல, வேறு யாரோதான் உடைத்திருக்கிறார்கள் என்ற தகவலும் வந்திருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் சிலைகளை வைப்பதற்கு ஏதாவது நெறிமுறைகள் ஏற்படுத்தி, சிலைகளை வைப்போரே காவலில் ஈடுபட வேண்டும். காவல் துறையை நாம் அதிகமாக ஈடுபடுத்த முடியாத காலகட்டத்தில், ஊர்க் காவல் படையிலிருந்து இரண்டு பேரை செலக்ட் செய்து



1998 மே 18] [திரு. சி. ஞானசேகரன்]

24 மணி நேரமும் அங்கே காவலுக்கு வைக்கலாம் அல்லது சிலை வைப்பவர்களே பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் நிலையை அரசு உருவாக்கித் தந்தால்தான் எதிர்காலத்தில், சிலைகள் உடைப்பு, சாலை மறியல்கள் இருக்காது, போராட்டம் இருக்காது. இப்போது சிலைகள் உடைக்கப்பட்டு போராட்டம் என்று வருவது என்பது தினந்தோறும் நடக்கக்கூடிய காட்சிகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஏதாவது நெறிமுறைகளை ஏற்படுத்தி, சிலை வைப்பதற்கு நிபந்தனைகளை உட்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி கிராமத்தில் கடந்த மாதம் 29ஆம் தேதி அன்று சில சமூக விரோதிகளால் புரட்சித் தலைவர் பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய திருவுருவச் சிலையை கடப்பாறை கொண்டு தகர்த்து உடைத்திருக்கிறார்கள். அதை நான் கடந்த 1ஆம் தேதியே நம்முடைய பேரவைத் தலைவரிடம், சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். என்ன காரணத்தாலோ தெரியவில்லை புரட்சித் தலைவர் மீது இருக்கின்ற பாசத்தாலோ என்னவோ தெரியவில்லை, இன்றைக்கு 18ஆம் தேதி அன்று எடுத்திருக்கிறார்கள். நான் பேசிய...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையே குற்றம் சாட்டிப் பேசுவது முறையல்ல. இதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மன்னிக்க வேண்டும், நான் கவனிக்கவில்லை. என்ன சொல்லுகிறீர்கள்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது 1ஆம் தேதியன்றே கொடுத்தேன். என்ன காரணத்தாலோ பேரவைத் தலைவர் எடுக்கவில்லை, எம்.ஜி.ஆர் மீது எவ்வளவு பாசம் இருக்கிறது என்று சொல்கிறார், அந்தப் பகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், என்ன சொன்னீர்கள், 1ஆம் தேதி கொடுத்தீர்களா?

[1998 மே 18

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1ஆம் தேதி கொடுத்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1ஆம் தேதி அன்று கொடுக்கவில்லை. இப்படித் தவறான தகவலைக் கொடுத்தால் நான் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவேன். ஒழுங்காகப் பேசவேண்டும்.

(முற்பகல் 10-35

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் பேசி முடித்ததற்குப் பிறகு முதல்வர் அவர்கள் இதிலே ஒரு விளக்கம் கொடுக்க இருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு நான் பேசுவதற்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் அவர்கள், நீங்கள் பேசி முடித்த பிறகு விளக்கம் கொடுக்கவில்லை. முதல்வர் அவர்கள், நீங்கள் முறையாகப் பேசவில்லை என்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஒழுங்காகப் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் பேசி முடித்ததற்குப் பிறகு அந்தச் சிலை உடைப்பைப் பொறுத்து முதல்வர் அவர்கள் விளக்கம் கூற இருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் ஒவ்வொரு முறைப் பேசும்போது நான் அதிகாரிகள் கொடுத்த தகவலை வைத்துக் கொடுக்கின்றேன்: அதில் உண்மை முழுமையாக இருக்கிறதோ இல்லையோ, எனக்குத் தெரியாது: அவர்கள் கொடுத்த தகவலை வைத்துப் பேசுகிறேன் என்று கூறுவார்கள். அதையும் முன்னுதாரணமாக வைத்துக்கொண்டு, இதிலே அவர்கள் குறிப்பிடுவார்கள்: அந்தச் சிலையை உடைத்ததிலே 2 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று கூறுவார்கள். அந்த அடிப்படையிலே, எனக்குக் கிடைத்த தகவலை நான் இங்கே கூறுவது என் கடமை என்று நினைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் என்ன பதில் சொல்வார் என்பதெல்லாம் உங்களுக்குத் தேவையில்லை. உங்களுக்குத் தெரிந்த தகவலைச் சொல்லிவிட்டு உட்காருங்கள். தேவையில்லாமல் பேசினால், உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்காமல் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுவேன். தவறான தகவலை எல்லாம் கொடுக்கிறீர்கள். 1ஆம் தேதி கொடுத்தேன் என்கிறீர்கள். 1ஆம் தேதி விடுமுறை. 4ஆம் தேதி அல்லது 5ஆம் தேதி கொடுத்து விட்டு, 1ஆம் தேதி கொடுத்தேன் என்று தவறான தகவலைச் சட்டமன்றத்தில் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஒழுங்காகப் பேசுங்கள்.



1998 மே 18]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த பனமாத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, காந்திநகரைச் சேர்ந்த கனகு என்ற கனகராஜ் என்பவர் ரஜினி என்பவரைக் கொலை செய்துவிட்டு, அந்தக் கொலை வழக்கு காரணமாக, அவர் சிறையிலே இருக்கிறார். அந்தச் சிலை உடைப்பு 29ஆம் தேதி இரவு நடக்கின்றது. அவனை 25ஆம் தேதியே கைது செய்து வைத்து இருக்கிறார்கள். அந்தக் கொலை வழக்கு சம்பந்தமாக அந்தப் பகுதியை சேர்ந்த தங்கவேலு மற்றும் சீனிவாசன் ஆகிய இருவரையும் போலீசார் அழைத்துச் சென்று விசாரிக்கிறார்கள். அவர்களை அழைத்துச் சென்றது 28ஆம் தேதி, 28ஆம் தேதி, 29ஆம் தேதி, 30ஆம் தேதி ஆகிய 3 நாட்களும் போலீசார் மல்லூர் என்ற காவல் நிலையத்திலே அவர்களை லாக்-அப்பில் வைத்து இருக்கிறார்கள். ஆனால், போலீஸ் தரப்பிலே கூறுவது அந்தச் சிலை உடைப்பு சம்பந்தமாக தங்கவேலு மற்றும் சீனிவாசன் ஆகிய இருவரை கைது செய்து இருப்பதாகக் கூறுகிறார்கள். இதிலே நான் கூறுவது என்னவென்றால், உண்மைக் குற்றவாளிகள் கண்டறியப்பட வேண்டும். உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காமல், நீங்கள் அந்தச் சிலையை உடைத்ததை ஒத்துக்கொள்ள வேண்டும்: ஒத்துக் கொள்ளவில்லை என்றால், உங்கள்மீது கொலை வழக்கு சம்பந்தமாக கொலை கேஸ் பதிவு செய்வோம் என்று கூறி போலீசார் அவர்களை அடித்துத் துன்புறுத்தி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் மீது செய்யாத குற்றத்திற்காக, அந்த எம்ஜி.ஆர் சிலையை உடைத்ததாக அந்த இரண்டு பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து இருக்கிறார்கள். அப்போது 3 ஆம் தேதிகூட அந்தப் பகுதியில் இருக்கிற அண்ணா தி.மு.க. சார்பாக உண்ணாவிரதம் நடைபெற்று இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மைக் குற்றவாளி இல்லை என்றால் நீங்கள் ஒரு கடிதம் மூலமாக உங்களுக்குத் தெரிந்த தகவலை முதலமைச்சருக்கு அனுப்புங்கள், காவல் துறை நடவடிக்கை எடுத்து, 2 பேரைக் கைது செய்த பிறகு, அவர்கள் விசாரணை செய்வதற்கு முன்னாலே நீங்கள் சட்டமன்றத்திலே எழுந்து, அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று அவர்களுக்கு வக்காலத்து வாங்கினால், காவல் துறை எப்படித் தன்னுடைய கடமையைச் செய்வது? (குறுக்கிடு) காவல் துறையினர் சில பேரைக் கைது செய்து இருக்கிறார்கள். அவர்கள் கைது செய்தது தப்பு; சம்பந்தப்பட்டவர்கள் வேறு ஆட்கள் என்பது உங்களுக்குத் தெரிந்தால் அந்தத் தகவலை முதலமைச்சரிடம் கொடுங்கள். இப்போது சீக்கிரம் பேசி முடியுங்கள்.

[1998 மே 18

**திரு. பி.ஆர். சுந்தரம்:** கொலை கேஸில் சம்பந்தப்பட்டவர்களை போலீசார் அடித்துத் துன்புறுத்தி, அந்தச் சிலை வழக்கு சம்பந்தமாக ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, நான் மீண்டும் தெரிவிக்கிறேன். உண்மையான குற்றவாளிகளைப் போலீசார் கண்டறியவேண்டும்; அதற்கு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29-4-1998 அன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சிலை சில சமூக விரோதிகளால் கடப்பாறையால் குத்தி சேதப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றைய நாட்டினுடைய முதல்வர் கலைஞருடைய 40 ஆண்டுகால நண்பர் எம்.ஜி.ஆர். வறுமைக்கு யார் ஆட்பட்டாலும் அவர்களுக்கு ஓடோடிச் சென்று உதவி செய்யக்கூடிய உத்தம நெஞ்சம் படைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சிலையை உடைத்து இருக்கக்கூடிய சமூக விரோதிகளை இந்த அரசு நிச்சயமாகக் கண்டுபிடிக்க வேண்டும். யார் தவறு செய்து இருந்தாலும், அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க இந்த அரசு தயங்கக்கூடாது. உண்மைக்கு மாறாக, இங்கே சுந்தரம் அவர்கள் பேசியதைப்போல, தவறான இருவரை (சிரிப்பு) உண்மைக்கு மாறாக இரண்டு கைதிகளை சுந்தரம் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல இரண்டு பேரைக் கைது செய்து, தேவையற்ற ஒரு வழக்குக்காக அவர்கள்மேல் இந்தக் குற்றத்தைச் சாட்டியிருப்பது, போலீஸ் இலாக்காவுக்கே ஒரு களங்கம் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்களுடைய பசியைப் போக்கத் துடிதுடித்தவர். அவருடைய கரங்கள்...

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எம்.ஜி.ஆரைப் பற்றி நீங்கள் சொல்வதில் இங்கே யாருக்குமே கருத்து வேறுபாடு கிடையாது. நீங்கள் இங்கே சிலை உடைப்பைப்பற்றி மட்டும் பேசினால் போதும். சிலை உடைப்பைப்பற்றிப் பேசிவிட்டீர்கள், அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.



1998 மே 18]

**திரு. ஐ. கணேசன்:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன் ஆகியோர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை ஒன்று பனமரத்துப்பட்டியில் உடைக்கப்பட்டது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பை இங்கே தந்திருக்கின்றார்கள். அவர்கள் இதிலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கும்போது - முதலிலே தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சிலை சிமெண்டினால் செய்யப்பட்ட ஒரு சிலை. வெண்கலத்தினால் செய்யப்பட்ட சிலையையே உடைக்கக்கூடிய ஆற்றலாளர்கள், சென்னையில், அந்தக் காலத்திலே (சிரிப்பு) அண்ணா சாலையிலே இருந்ததை உடைத்த ஆற்றலாளர்கள் தமிழ்நாட்டில் இருப்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்கு தெரியும். அவர்கள் இதிலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கும்போது - இந்தச் சிலையை உடைத்ததற்காக வருத்தப்படுகிறார்களா அல்லது உடைத்ததாகக் கைது செய்யப்பட்டிருக்கின்ற இரண்டு பேருக்காக உறுப்பினர்கள் வருத்தப்படுகின்றார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

இரண்டு பேர், தங்கவேல் என்ற ஒருவரும் சீனி என்ற சீனிவாசனும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். 2-5-1998 அன்று அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்லர் என்றும், ரௌடிகள், போக்கிரிகள் என்றும் அந்த வட்டாரத்திற்கே நன்றாகத் தெரியும். அவர்கள் குடிபோதையில் இந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்றும் காவல் துறை மூலமாகத் தகவல் அனுப்பப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு பேரன்னியில் வேறு யாராவது இதிலே ஈடுபட்டிருந்தால் அவர்களையும் விசாரிக்கச் சொல்லி அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு ஆணையிடப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொதுவாக திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஒவ்வொரு சிலைக்கும் காவல் போட்டுக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டில் சிலை வைப்பது என்பதற்கு இலக்கணம் என்ற ஒன்று இல்லை. சிலைகள் அமைப்பதென்றால், அதற்கு அரசிடம் அனுமதி பெறவேண்டும். அதுவும் அந்த வட்டாரத்தில் உள்ள நிர்வாக அலுவலகங்களிடத்திலே, அதிகாரிகளிடத்திலே அனுமதி பெறவேண்டும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 18

மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது ஒன்றியம் அல்லது ஊராட்சி போன்ற இந்த அமைப்புகளிடத்திலே அனுமதி பெற வேண்டுமென்று இல்லாமல், உணர்ச்சிபூர்வமாக எந்த நிலைமையையும் சமாளிக்கலாம் என்ற எண்ணத்தோடு அவரவர்கள் ஆங்காங்கே சிலைகளை வைக்கின்றார்கள். இந்தச் சிலை வைப்பதிலே அந்தத் தலைவர்கள் மீது உண்மையான பற்றும் சிலை வைப்பவர்களுக்கு இருக்கிறது. சில நேரங்களில் சிலை வைப்பது என்ற பெயரால் சிறந்த வசூலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் மனதிலே வைத்து இந்தச் சிலைகள் அமைப்பதுபற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இருந்தாலும்கூட இவற்றையெல்லாம் காப்பாற்றவேண்டியவர்கள், சிலை வைப்பவர்கள்தான் அல்லது அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் அதற்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்ற இதுபோன்ற ஒன்றிரண்டு சம்பவங்களில், அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அமைதியை ஏற்படுத்த தன்னால் இயன்ற எல்லா வகையான முயற்சிகளிலும் ஈடுபடுகின்றது. அந்த வட்டாரத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்கள், பெரியவர்கள் இவர்களெல்லாம் கூடிக் கலந்தாலோசித்து அங்கே அமைதியை உருவாக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

பொம்மைகள் சிலைகள் என்றும், சிமெண்டினால் செய்யப்பட்டவை சிலைகள் என்றும் வைக்கப்படுகின்ற காரணத்தால்தான் மிகச் சுலபமாக சமூக விரோதிகள் இப்படிபபட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு விடுகின்றார்கள். நம்முடைய திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, எம்.ஜி.ஆரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பதைப் போல, 'அவர் எவ்வளவு வள்ளலாக வாழ்ந்தார்; எப்படியெல்லாம் இருந்தார்' என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆனால், எம்.ஜி.ஆரைப் பற்றி, அன்றைய பிரதமர் ஒருவருக்கு, இன்றைய இந்தக் கட்சியினுடைய தலைவர் என்ன எழுதினார் என்பதையெல்லாம் தயவுசெய்து நம்முடைய திரு. கணேசன் அவர்கள் படித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். ஆங்கிலத்திலே கைப்பட எழுதப்பட்ட கடிதம் அது. தன்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று சொன்னவர்தான் இந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கிறார் என்பதையும் திரு. கணேசன் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது என்று குறிப்பிட்டு, இந்த அளவில் எனது விளக்கம் போதும் என்று கருதி, அமைகிறேன்.



1998 மே 18]

முற்பகல் 10-45

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

## (ஆ) திருப்பத்தூர் வனத்துறை அதிகாரி விஜயன் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருப்பத்தூர், வனத் துறை அதிகாரி விஜயன் அவர்கள் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இறந்தது குறித்து, திரு. சி. ஞானசேகரன், திரு டி. மணி, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. ஐ. கணேசன், திரு இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் அவையில் விவாதிக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். திரு. சி. ஞானசேகரன் (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை உட்காருங்கள் என்று சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களே, உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம், என்னுடைய மாவட்டத்தில் திருப்பத்தூரில், செங்கத்தில் வனக் காவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்த விஜயன் என்பவர், அச்சுதன் ஸ்டோர்ஸினுடைய Petrol bunk எதிரில், மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு உடலில் காயம்பட்டு இறந்திருக்கிறார். ஏற்கெனவே, சந்தனக் கடத்தல் வழக்கிலே ஈடுபட்டிருக்கக்கூடிய 3 எதிரிகள், ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், யாரெல்லாம் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்கிற விவரங்களையெல்லாம் தந்து, அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கு இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டு, அந்தக் C.B.I. விசாரணையெல்லாம் வேண்டுமென்று கேட்டு, அதற்குப் பிறகு, C.B.I. விசாரணை நடந்ததாகவும், அந்த C.B.I. விசாரணையிலே, விஜயன் என்ற அந்த வனக் காவலர் சாட்சியம் பகல் பொழுதில் அளித்துவிட்டு, மாலைப் பொழுதில் தன்னுடைய இல்லத்திற்கு தனது சகோதரன் அந்தோணியோடு சென்று, பிறகு சிறிது நேரத்திற்குப் பிறகு, தன்னுடைய

சித்தப்பா பையன் சுதந்திரராஜன் என்பவருடன் வெளியே வந்ததாகவும், வெளியே வந்தபோது, Petrol Bunk எதிரிலே அடிபட்டு விழுந்து கிடந்ததாகவும், பிறகு அவருடைய உடல் ஜில்லிட்டு இருந்த காரணத்தினால், உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, அங்கு நடந்த பிரேதப் பரிசோதனையிலே— 'போஸ்மாட்டம் சர்ட்டிபிகேட்-லே அவர் தலையிலே, blood clot இருக்கிறது என்றும், அதேபோல் அவர் அணிந்து வந்த ஆடையான லுங்கி கிழிந்து இருந்தாகவும், அவருடைய தொடையில் ஏற்கெனவே எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, அவர் குடித்துவிட்டு, இறந்தார் என்கிற கதையும் அந்த நேரத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையாகக்கூட இருக்கலாம். அப்படிக் குடித்துவிட்டு இறந்திருந்தால்கூட, எலும்பு முறிவு ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை. அதேபோல, தலையிலே blood clot வரக்கூடிய வாய்ப்பும் இல்லை. இப்படி, தலையிலே உள்காயம் ஏற்பட்டு, blood clot ஏற்பட்டதற்கும், எலும்பு முறிவு ஏற்பட்டதற்கும், அந்த இறப்பிற்கும் உள்ள தொடர்பை நாம் இணைத்துப் பார்த்தோமேயானால், சாதாரணமாக ஒரு மனிதன் குடிபோதையிலே விழுந்து இறந்திருக்கக்கூடிய வாய்ப்பு என்பது மிகமிகக் குறைவு. அவர் C.B.I. விசாரணையில், சாட்சியம் அளித்துவிட்டு வந்த காரணத்தினால், அந்த இடத்திலே மர்மமான முறையிலே, ஏதோ ஒரு லாரியை வைத்தோ அல்லது ஏதோ ஒரு வாகனத்தை வைத்தோ இடித்துத் தள்ளப்பட்டிருக்கலாம் என்கிற ஒரு கதையும் சொல்லப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒரு போராட்டத்தைக்கூட அறிவித்து, இறந்துபோன அந்தக் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அவர்கள் ஏற்கெனவே அறிவித்து, இன்றைக்கு அதைக் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இவ்வாறு சாட்சியம் கொடுத்தவர்கள் எல்லாம்— ஏற்கெனவே, சண்முகசுந்தரம் என்ற வழக்கறிஞர், டான்சி ஊழலைக் கண்டுபிடித்து, சாட்சியம் அளிக்கப் போனதற்காக அவர் தாக்கப்பட்டார்; விஜயன் என்பவர் 69 சதவிகித இட ஒதுக்கீடு பற்றி வழக்குத் தொடர்ந்த காரணத்தினால், தாக்கப்பட்டார். இப்படி கடந்த கால ஆட்சியிலே தாக்கப்பட்டது போல, இப்போதும் சாட்சியம் அளித்ததற்காக அவர் தாக்கப்பட்டாரா; அல்லது வேறு காரணங்கள் ஏதாவது இருக்கிறதா? அவர் இறப்பிலே மர்மம் இருக்கிறது என்றும் 'போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட்' குறித்து C.B.I. விசாரணை வேண்டுமென்றும் முன்னாள் முதலமைச்சர்





அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதே முன்னாள் முதலமைச்சர், C.B.I. பற்றி என்ன விளக்கத்தை இங்கே அளித்தார் என்பதைப் பற்றி நாம் இந்த அவையிலே பேசி இருக்கிறோம். 'அவர்கள் என்ன தேவதூதர்களா?' என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அவர் எப்படியெல்லாம் C.B.I. பற்றி தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார். அப்படி மாற்றிக் கொண்டுள்ளபடி, C.B.I. விசாரணை நடந்தால், ஒரு நல்ல விசாரணை, பூர்வாங்கமான விசாரணை, முழு, உண்மையான விசாரணை கிடைக்கும் என்று அவர் கருதுகிறாரா? எப்படி அவர் தனது கருத்தை மாற்றிக் கொண்டார் என்பது நமக்குத் தெரியவில்லை. எதற்கு எடுத்தாலும், C.B.I. Enquiry கேட்கிறார்கள். அடிஷனல் எஸ்.பி. திரு. பாண்டியன் அவர்கள்கூட அங்கு சென்று, அந்த லோக்கல் போலீஸை விசாரித்து, அது நேற்றைய பேப்பரிலே வருகிறபோது, ஒருவேளை வாகனம் ஏதாவது இடித்து விழுந்து இறந்திருக்கலாம் என்ற ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது.

முற்பகல் 10-50

இதிலே உண்மை என்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நாட்டிற்குத் தெளிவுபடுத்த வேண்டும். இல்லையென்று சொன்னால் இதை வைத்துக்கொண்டே ஒரு பெரிய போராட்டம் நடத்துவார்கள். ஏற்கெனவே Bomb culture நம்முடைய நாட்டிலே நடந்து அவர்களைக் கண்டுபிடிப்பதற்கே இன்றைக்கு சோதனைக்கு 2,000 போலீசார் வீடு புகுந்து எல்லோரையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். போலீசுக்கு இருக்கக்கூடிய பணியிலே இப்படி ஒவ்வொரு இறப்புக்கும்கூட C.B.I., C.B.I.என்று போய்க் கொண்டிருக்கக்கூடிய நிலை வரவேண்டுமா? என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இல்லையென்று சொன்னால் Local Police-க்கு அதிகமான வேலை இருக்கும் என்று சொன்னால் C.B.I. Enquiry-க்குப் பதிலாக C.B.C.I.D. Enquiry மூலமாவது, நீங்கள் தெளிவுபடச்செய்யலாம். அதைப்போல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதே அதிகம். அப்புறம் யாரோ கொடுக்கின்ற சீட்டையும் வாங்கி வைத்துக் கொள்கிறீர்களே, உட்காருங்கள். திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் அருகே சந்தனக் கடத்தல் சம்பந்தமாகவும் தீப்பிடித்தது

V 211,31'N98
M98.57.1

சம்பந்தமாகவும் C.B.I. விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அந்த C.B.I. விசாரணைக்கு வாக்குமூலம் கொடுத்துவிட்டுத் திரும்பிய வனக்காவலர் விஜயன் அவர்கள் இறந்ததாகச் சொல்கிறார்கள். அவர் லாரி மோதி இறந்துவிட்டாரா? அல்லது யாராவது லாரியைவிட்டு ஏற்றி சினிமாவைப்போல கொன்று விட்டார்களா என்று தெரியவில்லை. ஆகவே இது சம்பந்தமாக C.B.I. விசாரணை நடத்த வேண்டுமென்று நாங்கள் சொல்கின்றோம். உண்மைக் குற்றவாளியை கண்டுபிடியுங்கள், அந்த வாக்குமூலத்தில் இந்த வனக்காவலர் விஜயன் அவர்கள் உண்மையைச் சொன்ன காரணத்தினாலேதான் லாரியை ஏற்றிக் கொன்றார்கள் என்று அந்தப் பகுதியிலே பொதுமக்கள் சொல்கிறார்கள். நன்றாக இருந்தவரைக் கொன்று போட்டார்களே என்கிற அளவிலே பேசுகிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக C.B.I. விசாரணை நடத்த வேண்டும். ஏற்கெனவே இதுசம்பந்தமாக, தீப்பிடித்தது வந்து ஆயிரம் கோடியா, 3,000 கோடியா என்று ஜனாதிபதிக்கு ஒரு பொது நல ஊழியர் கடிதம் எழுதி அதுசம்பந்தமாக நம்முடைய தலைமைச் செயலாளருக்கு ஜனாதிபதி மூலம் கடிதம் வந்து அதுவும் விசாரணை நடக்கிறது. அதைக் கடத்திவிட்டார்கள், தீப்பிடிக்கவில்லை என்பது சம்பந்தமாகவும் விசாரணை நடைபெறுகிறது. ஆகவே, இது வந்து ** என்று பொதுமக்கள் மத்தியில் பேசப்படுகிறது. ஆகவே, உண்மை நிலையை அறிய.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மரணத்தைப் பற்றி இங்கே சிறப்புக் கவன ஈர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பேசப்படுகிறது, சொல்லப்படுகிறது, 3,000 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய் என்றெல்லாம் சம்பந்தமில்லாமல் வேண்டுமென்றே மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிடுவது இந்த அவையினுடைய கண்ணியத்தையே குறைப்பதாகும். எதற்காக நீங்கள் அனுமதிக்கிறீர்களோ அதை விட்டுவிட்டு அவர்கள் எவற்றையெல்லாம் பேச வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவற்றையெல்லாம் பேசுவதற்கு இந்த அவை அனுமதிக்கலாமா என்பதை அருள்கூர்ந்து நீங்கள் ஒரு ஆணையாகப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். இது, ஆதாரமில்லாமல் பேசுவதனாலே வருகிற பிரச்சினை. பொதுமக்கள் பேசுகிறார்கள், அவர்கள் பேசுகிறார்கள்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இவர்கள் பேசுகிறார்கள் என்று சொல்வதெல்லாம் ஆதாரம் இல்லாததனால்தான். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடுதானே C.B.I. விசாரணை பண்ணுகிறார்கள். வன இலாகா அதிகாரிகள் வந்து புகார் பண்ணி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** C.B.I. விசாரணை நடைபெறுவது சந்தன மரத்தைப் பற்றி. இப்போது இதிலே வந்து C.B.I. விசாரணை வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதைப் பேசி முடியுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** உண்மை நிலையை சம்பந்தப்பட்ட C.B.I.-க்கு சொன்னதனாலே ** நீங்கள் அதை வந்து ஆக்சிடெண்ட். . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினர். நீங்கள் அடுத்த உறுப்பினருக்கு மரியாதை கொடுத்தால்தான் உங்களுக்கு மரியாதை கிடைக்கும். அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் C.B.I. விசாரணையிலே எந்த உண்மை வந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்ல வேண்டுமேயொழிய, ** என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. குற்றச்சாட்டு சொன்னால் அது உண்மையாக இருந்தால் உடனே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்கள் குற்றச்சாட்டில் C.B.I. விசாரணை வைத்து ஆளும் கட்சியிலே பதவியிலே இருக்கக்கூடியவர் ஒருத்தராவது உடன்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேசுங்கள். ** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்காக, மூடி மறைக்கப்பட்ட உண்மை வெளிவருவதற்காக நீங்கள் C.B.I. விசாரணைக்கு உத்தரவிடவேண்டும். இறந்துபோனவர் குடும்பத்திற்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 மே 18

அரசு நிதியுதவி கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்:

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனக் காப்பாளர் விஜயன் அவர்கள் C.B.I. விசாரணைக்காகச் சென்று 4 மணியளவிலே சாட்சியம் அளித்துவிட்டு அவர் இரவு 10 மணியளவிலே, Petrol bunk எதிரே அடிபட்டு, மண்டையிலும் தொடையிலும் அடிபட்டு இறந்திருப்பதாக இங்கே பேசியவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அநியாயமாகக் கொல்லப்பட்ட விஜயன், எந்த வகையிலே யாரால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதை அரசு கண்டுபிடிக்க வேண்டும். அந்த வனக் காப்பாளர் விஜயன் அவர்களுடைய குடும்பத்திற்கு அரசு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டு அவையின் கவனத்தை ஈர்க்கின்றேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் அருகே சந்தனக் கடத்தலை ஒட்டி நடந்த கொலையா அல்லது வேறு விதமான கொலையா என்ற சந்தேகம் அதற்குள்ளே இருக்கிறது. ஒரு வனக் காவலர் அல்லது ஒரு ஊழியர் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதுதான் இதிலே வருத்தத்திற்குரிய பிரச்சினை. அதற்குள்ளே வருகின்றபோது அதற்கு ஏதுவாக சில காரணங்களைப் பத்திரிகைகளில் எல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, இவருடைய மரணத்திற்கு என்ன காரணம் என்பதை அரசு, இரகசிய காவல் துறையின் மூலமாகவோ, அல்லது வேறு எந்தத் துறையைக் கொண்டாகிலும் சரி, சரிவர ஆராய்ந்து அதிலே பிற கட்சிகள் அரசியல் இலாபத்திலே செல்வதற்கு இடம் தராத வகையில் அந்தப் பிரச்சினையிலே தலையிட்டு உண்மையைக் கண்டறிந்து குற்றவாளியைத் தண்டிக்க நடவடிக்கை மேற்கொள்வதோடு, அந்த இறந்தவரின் குடும்பத்திற்கு உரிய நஷ்டஈடும் வழங்க வேண்டுமென்று கேட்டு, அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



1998 மே 18]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஐ. கணேசன், திரு. டி. மணி ஆகியோர் இங்கே கொண்டு வந்து அதுகுறித்து தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சந்தனக் கட்டைகள் கடத்தல் குறித்த வழக்கை விசாரிக்க காவல் துறை கண்காணிப்பாளர், திரு. கதிரேசன் மற்றும் ஆய்வாளர் திரு. பிரேம் குமார் ஆகியோர் தலைமையிலான C.B.I. (மத்தியப் புலனாய்வுத் துறை) குழு 7-5-1998 அன்று முதல் வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலே முகாமிட்டுள்ளது.

செங்கம் வனச் சரகத்தில் பணியாற்றும் வனக்காவலர் விஜயன், 12-5-1998 அன்று விசாரணைக்காக வரவழைக்கப்பட்டு, விசாரணைக்குப் பின்னர் பிற்பகல் சுமார் 1 மணியளவில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். 12-5-1998 அன்று இரவு திருப்பத்தூர் - வாணியம்பாடி சாலையிலே உள்ள அச்சுதன் பெட்ரோல் நிலையத்திற்கு எதிரில் விஜயன் விழுந்து கிடந்ததாகவும், திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாகவும் 13-5-1998 அன்று காலை 6 மணிக்குக் கொடுக்கப்பட்ட புகாரின்பேரில் திருப்பத்தூர் நகரக் காவல் நிலைய குற்ற எண் 190/98 பிரிவு 174 குற்றவியல் நடத்தைச் சட்டத்தின்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பிரேதப் பரிசோதனை மேற்கொண்ட மருத்துவ அதிகாரி விஜயன் உடலிலே, வலது தொடையில் உராய்வுக் காயம் மற்றும் வீக்கம், இடது முழங்கால் சதையில் உராய்வுக் காயம், இடது பின்புறத் தொடையில் கற்கள் குத்திய காயம், மற்றும் தலையில் மண்டை ஓட்டு எலும்புகள் பாதிப்பு இல்லை, ஆக்சிபிடல் பகுதியில் இரத்தக்கட்டு, மூளைத் திசுக்கள் பாதிப்பு இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார்கள். பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் 13-5-1998 அன்று அவரது உறவினர்களால் அவரது உடல் புதைக்கப்பட்டது. இந்த மரணம் குறித்து இன்றைய Indian Express இதழ் ஒரு செய்தியினை வெளியிட்டுள்ளது. அதன் சுருக்கம், "விஜயனின் நெருங்கிய உறவினர் சுகந்தன் என்பவர், அவர் விபத்தினால்தான் மரணம் நேரிட்டது என்று கூறியிருக்கிறார். ஏற்கெனவே மது அருந்தியிருந்த விஜயனை மீண்டும் மது அருந்துவதற்காக சுகந்தன் அழைத்துச் சென்றிருக்கிறார். மது அருந்தி முடித்தபின் விஜயனை சைக்கிளில் ஏற்றிச் சென்று

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 18

விஜயனின் வீட்டின் அருகே இறக்கிவிட்டார். விஜயனின் வீடு பூட்டப்பட்டிருந்ததால் மீண்டும் சுகந்தன் அவரை சைக்கிளில் ஏற்றிக் கொண்டார். அவர்கள் சென்ற சாலை செங்குத்தாக மேடாக இருந்ததால் சைக்கிளை மிதிக்க மிகவும் சிரமப்பட்டார். அதனால் திடீரென்று ஓடிக்கொண்டிருந்த சைக்கிளிலிருந்து விஜயன் கீழே குதித்து இருக்கிறார். குதித்த வேகத்தில் வேகமாக அப்போது வந்து கொண்டிருந்த லாரி ஒன்று மோதி பலத்த காயங்களுக்கு ஆளானார். காவல் துறையினர், விஜயன் மீது மோதிவிட்டு வேகமாகச் சென்றுவிட்ட லாரியைக் கண்டுபிடிக்க முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டு உள்ளனர். காயம்பட்ட விஜயனுக்கு குடிப்பதற்கு உடனடியாகத் தண்ணீர் கொடுத்த இரண்டு மெக்கானிக்குகள் காவல் துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் விபத்து நடைபெற்றபோது, சுகந்தன் அந்த இடத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள். விஜயன் மரணத்திற்காக தன்னைப் பொறுப்பாக்கிவிடுவார்களோ என்ற பயத்தில் சுகந்தன், விஜயன் காயம்பட்டு திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலையில் கிடந்ததைப் பார்த்ததாக முதலில் பொய் சொன்னதை சுகந்தனே ஒப்புக்கொண்டுள்ளார்." இவ்வாறு இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழ் இன்று காவல் துறையின் தலைமையகத்திலிருந்து செய்தி பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளது.

முற்பகல் 11-00

இந்த மரணம் குறித்து கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு .எம். பி. பாண்டியன், திருப்பத்தூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. கே. முத்துவேல், வேலூர் மாவட்ட தனிப்பிரிவு ஆய்வாளர், திரு. ஏ. கே. பார்த்தசாரதி, திருப்பத்தூர் தாலுகா ஆய்வாளர் பெரியசாமி, திருப்பத்தூர் நகர உதவி ஆய்வாளர் விஜயராகவன் ஆகியோர் அடங்கிய சிறப்புக் குழு விசாரணைகளை நடத்தியதன்பேரில் தெரிய வந்த விவரங்களையும் தெரிவிக்கின்றேன்.

12-5-1998 அன்று பிற்பகல் 1 மணிக்கு விசாரணைக்குப் பின்னர் மத்திய புலனாய்வுத் துறைக் குழுவால் விஜயன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். பின்னர் விஜயன் தன் வீட்டிற்குச் சென்று மதிய உணவு அருந்தியுள்ளார். அன்று மாலை 6 மணி அளவில் நாகு என்பவருக்குச் சொந்தமான முடிதிருத்தும் கடையில் விஜயன் முகச்சவரம் செய்து கொண்டிருக்கிறார். பின்னர் தன்னுடைய உறவினர் அந்தோணிராஜ் என்பவர், ஒலிநாடா பதிவாளராக வேலை செய்யும்



1998 மே 18] [கலைஞர் மு. கருணாநிதி]

கடைக்குச் சென்று அவருடன், சரவணா ஒயின்ஸ் என்ற மதுக் கடைக்குச் சென்று, மது வாங்கிக் கொண்டு சுமார் 7.45 மணிக்கு ராஜன் பழரசக் கடைக்குச் சென்று அங்கே மது அருந்தியுள்ளார். மீண்டும் வினோதினி ஒயின்ஸ் என்ற மதுக்கடைக்குச் சென்று மது வாங்கி 8.15 மணிக்கு மது அருந்தியுள்ளார். பின்னர் இருவரும் ஒலிநாடா கடைக்குச் சென்றுள்ளார்கள். அங்கே அவர்களோடு புகார் கொடுத்த சுகந்தன் என்பவரும் இணைந்து கொண்டார். இரவு சுமார் 8.30 மணிக்கு விஜயனும் சுகந்தனும் விஸ்கியை மீண்டும் வாங்கி ஆசைத்தம்பி பழரசக் கடையிலே வைத்து மது அருந்தி உள்ளார்கள். இரவு சுமார் 9.20 மணிக்கு அவர்கள் வீடுகளுக்குத் திரும்பி விட்டார்கள். சுகந்தனின் மனைவி வீட்டில் இல்லாததால் தன் சகோதரியினுடைய வீட்டிற்குச் சென்றுள்ளார். அவ்வாறு அவர் போகும் வழியில் விஜயன் அச்சுதன் பெட்ரோல் நிலையத்திற்கு அருகில் குடிபோதையில் தள்ளாடிக்கொண்டு போவதைப் பார்த்திருக்கிறார். தன்னுடைய சைக்கிளில் அவரை ஏற்றிக்கொண்டு செல்ல முயற்சித்து இயலாததால் இறங்கி விட்டார். இந்தச் சமயத்தில் ஜோலார்பேட்டையிலிருந்து திருப்பத்தூருக்குச் சென்ற காலி லேலண்ட் லாரி விஜயனை இடித்துவிட்டு நிற்காமல் சென்று விட்டது. சுகந்தன், லாரியின் பதிவு எண்ணைப் பார்க்க இயலவில்லை. விஜயன் தார்ச்சாலையில் விழுந்து கிடந்ததால், அவரைச் சாலையின் ஓரத்தில் சுகந்தன் இழுத்துச் சென்றார். அப்போது ஆண்டி என்கிற தமிழ்ச்செல்வன் மற்றும் மெக்கானிக் கேசவன் ஆகியோர் உதவிக்கு வந்தார்கள். ஒரு ஆட்டோவை அழைத்து வரும்படி, ஆண்டியை சுகந்தன் அனுப்பினார். ஆண்டி என்கிற தமிழ்ச்செல்வன் மற்றும் மெக்கானிக் கேசவன் ஆகியோர் விஜயனை ஆட்டோவில் ஏற்றி, சுகந்தனுக்கு உதவி செய்தார்கள். திருப்பத்தூர் தாலூகா கருப்பனூரைச் சேர்ந்த பெருமாள் என்பவரின் மகன் கோபி என்பவரும் அவர்களுக்கு உதவி செய்துள்ளார். சுகந்தனும், கோபியும் அவரை, அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர் நிலைமை மோசம் அடைந்தது. விஜயனுடைய சகோதரர் தென்னரசு மற்றொரு ஆட்டோவை அழைத்து வந்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். விஜயன் வழியிலேயே இறந்தார். மரணம் அடைந்த பின்னர் இரவு 11.40 மணிக்கு எடுத்துவரப்பட்டதாக விபத்துப் பதிவேட்டில் மருத்துவ அதிகாரி பதிவு செய்திருக்கிறார். விஜயன் மீது மோதிவிட்டு வேகமாகச் சென்றுவிட்ட லாரியைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விஜயன் தமிழகக் காவல் துறையின் விசாரணைக்குச் சென்று திரும்பவில்லை. C.B.I..

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 18

விசாரணைக்குச் சென்றுவிட்டு பிற்பகல் 1 மணி அளவிலே திரும்பி விட்டார்.

காவல் துறையினுடைய அறிக்கையையும், எக்ஸ்பிரஸ் ஏடு வெளியிட்டுள்ள செய்தியையும் இங்கே தெரிவித்து இருக்கிறேன். மேலும் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கிடையில் அவசரப்பட்டு சில உறுப்பினர்கள் இங்கே பேசியதைப் போல நான் எதையும் கூற விரும்பவில்லை. அவருடைய குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்று இங்கே கோரப்பட்டது.

பொதுவாகவே, அரசு ஊழியர்கள் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்பப் பாதுகாப்பு நிதி தர வேண்டும் என்ற இந்த திட்டத்தையே கொண்டு வந்தது இந்த அரசுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையில் வனத் துறைச் செயலாளர் இந்தக் குடும்பத்திற்கு 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஜயன் அவர்கள் கொலை செய்யப்பட்டுத்தான் இறந்திருக்கிறார். உண்மையான சாட்சியம் சொன்ன காரணத்தால் கொலை செய்யப்பட்டுத்தான் இறந்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களுக்கு பேசுவதற்கு உரிமை கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அப்படியென்றால் நாங்கள் வெளிநடப்பு பண்ணுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றாகப் பண்ணுங்கள், நீங்கள் வெளிநடப்புப் பண்ணுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கொலை செய்யப்பட்டுத்தான் இறந்திருக்கிறார் என்று அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் எல்லாம் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...



1998 மே 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புப் பண்ணுகிறோம் என்று நீங்கள் சொல்லியாயிற்று. அதற்குப் பிறகு மைக் உங்களுக்குக் கொடுக்கமுடியாது. ஆகையினால் வெளிநடப்புப் பண்ணுங்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 1-ன் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

## 4. கவன ஈர்ப்பு

### மின் வெட்டு காரணமாக விவசாயம், தொழிற்சாலைகள், வியாபாரிகள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றார்கள். திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் வெட்டு காரணமாக விவசாயம், தொழிற்சாலைகள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது.

### அறிக்கை

தமிழகத்தில் தற்போது தமிழக மின் கட்டமைப்பின் உச்சகட்டத் தேவை 4,900 மெகாவாட் என்கிற வகையில் இருந்து வருகிறது. மேற்படி உச்சகட்டத் தேவையில் தற்சமயம் 500 மெகாவாட் வரை பற்றாக்குறை இருந்து வருகிறது.

தொழிலதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபின் வார விடுமுறையை சுழற்சி முறையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு நாள் வீதம் விடுமாறு தொழிலதிபர்கள் கேட்டுக்

கொள்ளப்பட்டார்கள். தவிர, சுயமின்னாக்கிகள் மூலம் தொழிலதிபர்கள் தங்கள் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டால், ஊக்கத் தொகை வழங்குவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

ஆனால் மேற்கண்ட நடவடிக்கைகளினால் மின் கட்டமைப்பின் உச்சகட்டத் தேவை குறையாததினால், 20-4-98 முதல் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்குமான தேவையில் மட்டும் 30% மின்வெட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 250 முதல் 300 மெகாவாட் வரை பற்றாக்குறையை ஈடு செய்ய இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து மொத்தம் 200 மெகாவாட் வரை மின்சாரம் கிடைப்பதினால், வரும் ஜூன் மாதம் வரை மின் தேவையைப் பூர்த்தி செய்ய இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் விவசாய மின் இணைப்புகளுக்கு பகலில் 4 மணி நேரமும் (சுழற்சி முறையில்) இரவில் 8 மணி நேரமும் தடையின்றி சீரான மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னையைத் தவிர பிற நகரங்களில் காலையில் அரை மணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் (காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை) மின்தடை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன். விவர அறிக்கையிலே 500 மெகாவாட் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே 30 சதவீதம் உயர் அழுத்த மின்வெட்டும், விவசாயிகளுக்குப் பகலிலே 4 மணிநேரமும், இரவிலே சுழற்சி முறையிலே 8 மணி நேரமும் கொடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். இதிலே மிகப் பெரிய பிரச்சினை என்னவென்று சொன்னால், விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அந்த மின்சாரம் அப்போதைக்கப்போது கொடுக்கப்படும் நேரத்திலேகூட தடைபடுகிறது. அதை உடனடியாக நீங்களும் பலதரப்பட்ட முயற்சிகள் எடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகக் கூட்டங்கள் எல்லாம் நடத்தி, இதைச் சிறப்பாக விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும் மின்சார வெட்டு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்ற காரணத்தினாலே இன்றைக்கு மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது.

1989 ஆம் ஆண்டு வடசென்னையிலே ஒரு மின்சார உற்பத்தி நிலையம் 2630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின்சார நிலையம் ஏற்படுத்தி உற்பத்தி செய்யவேண்டுமென்ற திட்டம்





அன்றைக்கு தீட்டப்பட்டு 630 மெகாவாட்தான் இன்றைக்கு அது உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது. 2000 மெகாவாட் உற்பத்தி செய்யாமல் இருக்கிறது. அது வீடியோகான் என்ற ஒரு கம்பெனிக்கும், டிரைசெட்ஸ் என்ற கம்பெனிக்கும் சென்ற ஆட்சிக் காலத்தில் தனியாருக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள்.

அதேபோல் தூத்துக்குடியில் 500 மெகாவாட் திறன் கொண்ட மின்சாரத் திட்டம் ஸ்பிக் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டதாகச் சென்ற ஆட்சிக் காலத்தில் சொல்கிறார்கள்.

அதேபோன்று சென்ற ஆட்சிக் காலத்தில் ஜெயங்கொண்டத்திலே ஒரு பெரிய பழுப்பு நிலக்கிரித் திட்டம் மூலமாக 1200 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு நிலையம் வருகிறது என்று சொன்னார்கள். அதேபோல் கடலூரிலே ஒரு திட்டம் வருவதாகச் சென்ற ஆட்சிக் காலத்திலே சொன்னார்கள். அதேபோன்று ஜெயங்கொண்டத்திலே பழுப்பு நிலக்கிரி மூலமாகவும், பிள்ளைபெருமாள்நல்லூரிலே ஒரு மின்சாரத் திட்டம் வருவதாகவும் இந்த மன்றத்திலே அறிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்விதான் கேட்கலாம், சொற்பொழிவு ஆற்றக்கூடாது.

**திரு. டி. சுதர்சனம்:** இந்தத் திட்டங்களில் எல்லாம் மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறதா இல்லையா? நிலக்கரி இல்லாமல்தான் இன்றைக்கு மின்சார உற்பத்தி கிடைக்கவில்லை என்று முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படி நிலக்கரியே இல்லாத நிலைமை இன்றைக்கு இருக்கிறதா? நிலக்கரி எவ்வளவு கையிருப்பில் இருக்கிறது? சென்ற ஆட்சிக் காலத்தில் ஒன்றிரண்டு இடங்களில்தான் நிலக்கரி இருந்தது. இப்போது எவ்வளவு நிலக்கரி கையிருப்பில் இருக்கிறது? நிலக்கரி பற்றாக்குறைதான் மின்சாரம் உற்பத்தி செய்யத் தடையாக இருக்கிறதா என்பதைப் பற்றியெல்லாம் விவரமாகவும், 1991 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஒரு மெகாவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்வதற்கு சென்ற ஆட்சிக் காலத்திலே முடியவில்லை, இதுவரை உற்பத்தியாகவில்லை, அதற்கான விவர அறிக்கையினையும், அமைச்சர் அவர்கள் இங்கே வைப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1998 மே 18

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் மின்சார விநியோகம் எப்படித் தமிழ் நாட்டில் நடைபெறுகிறது என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று பிறப்பித்த ஆணையையொட்டி ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் தினந்தோறும் ஆங்காங்குள்ள மின் வாரிய அதிகாரிகளை அழைத்து, இரவிலே 8 மணி நேரமும், பகலிலே 4 மணி நேரமும் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவது குறித்து ஆலோசித்து வருகிறார்கள். உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நேற்றையதினம் நானும், முதலமைச்சரோடு இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களை, குறிப்பாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரை அதுபற்றி நான் கேட்டேன். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னார், உள்ளபடியே 20ஆம் தேதிக்குப் பிறகு மின்சார விநியோகத்தில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்றும், குறிப்பாக இப்போது இரவு நேரங்களில் 8 மணி நேரமும் பகலிலே 4 மணி நேரமும் முறையாக மின்சாரம் கிடைக்கிறது என்றும் ஒரு சில இடங்களிலே பகலிலே கிடைக்கிற 4 மணி நேர மின்சாரத்தில், 5 நிமிடம், 10 நிமிடம் தடை ஏற்படுகிறது என்றும் அதைப் போக்குவதற்குக்கூட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

அதுமட்டுமல்ல, இந்த அவையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 4 நாட்களாகவே தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே பெய்து வருகின்ற மழையின் காரணமாக நம்முடைய மின்சாரத் தேவைகூட இன்றையதினம் குறைந்திருக்கிறது. எனவே, இப்போது வெளி மாநிலங்களிலிருந்து வாங்கிக் கொண்டிருக்கிற மின்சாரத்தையும் நிறுத்தியிருக்கிறோம். நமது உற்பத்தியே ஓரளவிற்குப் போதுமானதாக இருக்கிறது. இருந்தாலும், இதை நம்பி நாம் ஏற்கெனவே மின்சார விநியோகத்திலே புகுத்திய சில விதிமுறைகளை நாளைக்கே தளர்த்த முடியாது. இருந்தாலும், ஜூன் மாதம் 12 ஆம் தேதிக்குப் பிறகு நம்முடைய மேட்டூர் அணைத் தண்ணீர் திறக்கப்பட்டால் கூடுதலாக 350 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதுவரையிலே, இப்போது இருக்கக்கூடிய மின்சாரத்தை வைத்துக்





கொண்டு சீராக தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்படும் என்ற வாக்குறுதியை நான் தருகிறேன். மற்றபடி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கால ஆட்சியிலே தொடங்கப்பட்ட மின்சாரத் திட்டங்கள் எல்லாம் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். கடந்த காலத்திலே தொடங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதே தவிர அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை. இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகுதான் கடலூராக இருந்தாலும் சரி, வேம்பாறாக இருந்தாலும் சரி, பிள்ளைபெருமாள்நல்லூராக இருந்தாலும் சரி எந்தத் திட்டமாக இருந்தாலும் அதுபற்றி எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் அவர்களையெல்லாம் அழைத்து, கலந்து பேசி Power purchase agreement எல்லாம் போட்டு, அவர்கள் மின்சார உற்பத்தியைத் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு தாங்கள் வெளிநாட்டிற்குப் போக இருக்கிறீர்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** கொஞ்சம் அதிகமாக தாங்கள் என்னை பேச அனுமதிக்கலாம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவைத் தவிர வேறு எது பேசினாலும் நான் நிறுத்திவிடுவேன். பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது மழை பெய்கிற காரணத்தினாலே ஓரளவிற்கு சரியாகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மழை பெய்தும்கூட என்னுடைய பகுதியிலே, எங்களுடைய மாவட்டத்திலே நீங்கள், காலை 1/2 மணி நேரம், மாலை 1 மணி நேரம்தான் கரெண்டை கட் செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், கிட்டத்தட்ட 20 முறை எங்களுடைய கிராமப் பகுதிகளிலே Current off செய்யப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், Low Voltage, என்னுடைய மோட்டாரில் இரண்டு முறை `Coil' போய்விட்டது. இப்படி Low Voltage, வரக்கூடிய காரணத்தினாலே, பலபேருடைய மின்சார மோட்டார்களில் Coil போய்விடுவதினால், விவசாயிகள் பணம் கொடுத்து Coil கட்ட முடியாமல் தத்தளிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கெங்கெல்லாம் நீங்கள் Sub-station போட முடியுமோ, transformers வைக்க முடியுமோ, அங்கெங்கெல்லாம் வைத்து, அதனைச் சீர்செய்து

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 18

சீரான மின்சாரத்தை வழங்க ஆவன செய்ய வேண்டும். ஏற்கெனவே, எங்களுடைய பள்ளிகொண்டாவிலிருந்த D.E.. ஆபீசை ஆம்பூருக்கு மாற்றியதற்காக ஒரு போராட்டத்தைக்கூட ஆரம்பித்திருக்கிறார்கள். மற்ற இடங்களிலே இருக்கக்கூடிய அலுவலங்களிலேகூட சீரான மின்சாரம் வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்களேகூட இதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. திருவண்ணாமலையில் நேற்று கூட்டம் நடந்தபோது, விவசாயிகள் அதிகாரிகள் மீது மிகக் கடுமையான சில வார்த்தைகளைப் பேச, கலெக்டரே அவர்களுக்கு வக்காலத்து வாங்கி அதிகாரிகளைத் திட்டாதீர்கள், திட்டாமல் வேலை வாங்குங்கள் என்றுகூட அறிவுரை கூறியிருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழுவையாவது நியமிக்க (மணியடிக்கப்பெற்றது) அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அதனைச் சீராக ஆக்க முடியுமா என்று கேட்டார்கள். அவை நடந்து கொண்டு இருக்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்களை இதில் ஈடுபடுத்தினால் அவர்கள் சட்டமன்றத்திற்கும் வர முடியாது. அவர்கள் பேசக்கூடிய வாய்ப்பும் கிடைக்காது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ள உத்தரவின் பேரில் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையாகக் கண்காணிக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இப்போதுள்ள சூழ்நிலையில் இன்றையதினம் தமிழகத்திலே மின்சார பற்றாக்குறை இருக்கிறது என்றோ, மின்சாரம் சீராகக் கிடைக்கவில்லை என்றோ எந்தப் புகாரும் இல்லை. இரண்டாவது, வட ஆற்காடு மாவட்டத்திலே Low Voltage இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே 200 இடங்களில் Low Voltage இருக்கிறது. இந்த அரசாங்கம் எதையும் மறைக்க விரும்பவில்லை. 300 இடங்களிலே புதிய Sub stations கட்டினால்தான் Low Voltage பிரச்சினையைத் தீர்க்க முடியும். இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக் கொண்ட உடனே ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 50 துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு இந்த இரண்டு ஆண்டு காலத்திலே 100 துணை மின் நிலையங்களை நாம் அமைத்திருக்கின்றோம். ஒரு துணை மின் நிலையம் அமைக்க குறைந்தது 4 கோடியிலிருந்து 5 கோடி ரூபாய் செலவாகிறது. இருந்தாலும்



1998 மே 18] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பரவாயில்லை: கடன் வாங்கியாவது இந்தப் பணியை மேற்கொள்ளுங்கள் என்று முதலமைச்சர் அவர்கள் எப்படித் தமிழ்நாட்டில் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களும் இந்த ஆட்சிக்காலத்திலே 2 ஆண்டு காலத்திலே கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்களோ அதைப்போல இந்த ஆட்சிக் காலத்திலேயே 300 துணை மின் நிலையங்களும் கட்ட வேண்டும் என்று அவர்கள் ஆணை பிறப்பித்து மேலும் 200 துணை மின் நிலையங்களை ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 60-லிருந்து 70 துணை மின் நிலையங்கள் கட்டி இந்த மின்வெட்டுப் பிரச்சினையை தமிழ்நாட்டிலிருந்து முழுவதுமாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையிலேயும் மின்சார வாரியம் ஈடுபட்டிருக்கிறது. transformers மாற்றுவது பற்றிச் சொன்னார்கள். இந்த ஆண்டு மட்டும் கிட்டத்தட்ட 1050 transformers புதிய transformerகள் வாங்கி எங்கெங்கே தேவைப்படுகிறதோ அங்கேயெல்லாம் பொருத்தப்பட்டிருக்கின்றன என்ற தகவலையும் மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

## 5. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மனுக்கள் குழு அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் தலைவர் திரு. பா.மு. முபாரக்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் ஸ்ட்ரைக்கின் காரணமாக ஆயிரம் பேர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒருவரை பேச அழைத்த பிறகு நீங்கள் இடையிலே எழுந்திருக்கக் கூடாது. நீங்கள் உட்காருங்கள். அவர் அறிக்கையைக் கொடுத்த பிறகு உங்களை என்னவென்று கேட்கிறேன்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஒன்பது, பத்து, மற்றும் பதினோராவது அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.

[1998 மே 18

# 6. தகவல் கோரல்

**கைது செய்யப்பட்ட போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களை விடுதலை செய்தல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்ட பஸ் தொழிலாளர்களை உடனடியாக தமிழக அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று நான் ஏற்கெனவே தங்களிடம் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இன்று எடுத்துக் கொள்வீர்கள் என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்று எப்படியாவது அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயிரம் பேர்களுக்கு மேலே சிறைச்சாலையிலே இருப்பவர்களை அரசு விடுதலை செய்தது என்ற ஒரு நல்ல செய்தியை இந்த மாமன்றத்திலே முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று கேட்பதற்காக அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களுடைய பணியாளர்கள் மொத்தம் 1 இலட்சத்து 24,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த 1 இலட்சத்து 24,000 பேரில் சுமார் ஆயிரம் பேர் முதலிலே வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டு நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றத் தயங்காது என்று அமைச்சர் உறுதி அளித்த பிறகும், வழக்கம்போல் செப்டம்பர் மாதம் நடைபெறுகின்ற ஒப்பந்தத்தில் எந்தக் குறைகள், இருந்தாலும் அவைகளை விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்று பிரதான யூனியன்களாக இருக்கின்ற யூனியன்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களும் அதை வரவேற்ற நிலையில் - ஒரு ஆயிரம் பேர் – முதலிலே வேலைநிறுத்தம் என்ற பெயரால் வேலையிலே ஈடுபட்ட தொழிலாளர்களைப் பாதிக்கின்ற அளவுக்குப் பேருந்துகளைத் தடுத்து நிறுத்தினார்கள். அந்த ஆயிரம் பேரும் முதல்நாள் கைது செய்யப்பட்டார்கள். மாலையிலே விடுதலை



1998 மே 18] [கலைஞர் மு. கருணாநிதி]

செய்யப்பட்டார்கள். கைது செய்தாலும் விடுதலை செய்வதில்லை என்ற ஒரு முரட்டுத்தனமான போக்கு இந்த அரசுக்கு இல்லை என்பதன் அடையாளமாக அன்றைக்கே அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால், மறுநாள் மீண்டும் அதே தொழிலாளிகள் அதே காரியத்திலே ஈடுபட்ட காரணத்தினால், கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படாமல் ரிமாண்டிலே வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதற்கிடையிலே அவர்களுக்குப் பதிலாக வேறு பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று நான் சொன்ன கருத்தைக்கூட மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று 5 தொழிற்சங்கங்களின் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு உடனடியாக நான் அதை ஏற்று யாரும் பழிவாங்கப்பட மாட்டார்கள்; ஏனென்றால் இந்த அரசு தொழிலாளர் விரோத அரசு அல்ல, தொழிலாளர் நல அரசுதான். அதற்கு உதாரணம் வேண்டுமானால் 15 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையிலே ஒரு பால் பண்ணையிலே ஒரு வேலைநிறுத்தம் நடைபெற · அதற்கு அனுசரணையாக ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் சென்னையிலே மாதவரத்திலே உள்ள பால் பண்ணையிலே நடைபெற, அதன் காரணமாக--ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்திற்கே--அன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். 15 ஆண்டுகளுக்குப் பிறகு மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களை மீண்டும வேலையிலே அமர்த்தியது மாத்திரம் அல்ல, நம்முடைய திரு. சுப்பராயன் போன்றவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்த காரணத்தால் அவர்கள் எந்த எந்தச் சலுகைகள் அவர்களுக்கு வேண்டும் என்று கேட்டார்களோ; எந்த எந்த உரிமைகள் வேண்டும் என்று கேட்டார்களோ; அவை எல்லாம் கூட அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இது தொழிலாளர்களைப் பழி வாங்குகின்ற அரசு அல்ல என்பதை விளக்கி நான் நேற்றையதினம் காலையில் சென்னையிலிருந்து சிவகங்கைக்குப் புறப்படுகின்ற வழியிலே இந்த அறிக்கையைத் தந்து விட்டுத்தான் போய் இருக்கிறேன். பத்திரிகையிலே வந்து இருக்கிறது. எனவே, யாரும் பழிவாங்கப்பட மாட்டார்கள்.

முற்பகல் 11-20

இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் 1400 பேர்; ஏறத்தாழ 1400 பேர். அவர்களில் அநேகமாக பலபேர் ஜாமீனிலே வெளியே

வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஜாமீனை அரசு தடுக்கவில்லை. மறுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் பணியிலே அமர்த்தப்பட மாட்டார்கள் என்ற அந்தச் சூழ்நிலை நிச்சயமாக இருக்காது என்பதையும், பஸ்களை மறியல் செய்ததற்கான அந்தக் குற்றத்திற்காக சட்டப்படியான நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் அதற்கு அவர்கள் பணிந்துதான் செல்ல வேண்டும் என்பதையும் நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை என்று நீங்கள் பேசி விட்டு, அப்புறம் நீங்கள் நினைத்து, நினைத்து எழுந்து கொண்டிருந்தால் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பை நான் எடுக்காதபோது பொது முக்கியத்துவம் என்று நீங்கள் எழுந்து பேசினீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு என்ன விளக்கம்?

**திரு. ஐ. கணேசன்:** 1,400 பேரை விடுதலை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1,400 பேரில் பல பேர் ஜாமீனில் வெளியே வந்து விட்டார்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதற்கு அப்புறம் என்ன விளக்கம்?

**திரு. ஐ. கணேசன்:** 1,400 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் அரசு எதிர்க்காது, அவர்கள் ஜாமீனில் வெளியே வரலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன?

**திரு. ஐ. கணேசன்:** அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று சொல்லி பாட்டாளி மக்கள் கட்சி-I சார்பில் வெளிநடப்பு செய்கிறேன்.

(பாட்டாளி மக்கள் கட்சி-I- ஐ சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள்.)





## 7. காமன்வெல்த் நாடுகளின் பாராளுமன்றக் கருத்தரங்கிற்காக வெளிநாடு செல்லும் பேரவைத் தலைவருக்குப் பாராட்டு

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வெளிநாடு செல்லப் போவதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஒரு சிறந்த பேரவைத் தலைவராக, 2 ஆண்டு காலமாக எங்களுடைய தலைவராக இருந்து கொண்டிருக்கிறீர்கள். உலகத் தலைவர்களுடைய மாநாட்டில் நீங்கள் கலந்து கொள்கிறபோது இந்தத் தமிழக சட்டமன்றத்திற்கும், இந்தியாவிற்கும் ஒரு பெருமையைத் தேடித் தருகிற அளவில் நீங்கள் சிறப்பான முறையில் அங்கே உரையாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு எல்லாம் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டு (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சிறப்போடு, நல்ல முறையில் மிகச் சிறந்த சபாநாயகராக, உலகப்புகழ் பெற்ற ஒரு சபாநாயகராக வரவேண்டும் என்று எல்லா எதிர்க் கட்சிகள் சார்பாக நான் உங்களை வாழ்த்தி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானாக இதைச் சொல்லக் கூடாது என்று இருந்தேன். ஏன் என்றால் நம்மை நாமே பாராட்டிக்கொள்வதை விட எதிர்த்தரப்பிலே இருந்து வருகின்ற பாராட்டுத்தான் சிறந்த பாராட்டு என்ற அளவிலே நான் அமைதியாக இருந்தேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மனமார தங்களைப் பாராட்டி தாங்கள் செல்லுகின்ற பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று உரைத்த அந்த வாழ்த்தை நான் வழிமொழிந்து, சென்று வருக; வென்று வருக; என்று கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது காமன்வெல்த் நாடுகளின் சார்பில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகின்ற கருத்தரங்கு. 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை லண்டன் மாநகரிலும் இடையிலே மற்ற ஆண்டுகளிலே மற்ற நாடுகளிலும் நடக்கும். இதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் 23 ஆண்டுகளுக்கு முன்னாலேயே என்னுடைய தலைவரான

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் லண்டனில் நடந்த மாநாட்டுக்கு என்னை அனுப்பி வைத்தார்கள்.

ஆனால் அந்த மாநாட்டுக்குச் செல்லும்போது நான் மாணவனாகச் சென்றேன். காரணம் அங்கே பாடங்கள் எடுப்பார்கள். இப்பொழுது இந்த மாநாட்டுக்கு உறுப்பினராகச் செல்லாமல் பேரவைத் தலைவராகச் செல்லுகின்றேன். என்னுடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சிலநேரங்களிலே கோபம் வந்தால் என்னைப் பார்த்து நீங்கள் ஆசிரியரா என்று கேட்பார்கள். ஆனால், உண்மையாகவே இந்தக் கருத்தரங்கைப் பொறுத்தவரையில், எனக்கு ஆசிரியர் பணியை அங்கே கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற நாடுகளிலேயிருந்து வருகின்றவர்களுக்கு நான் பாடம் எடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கின்றார்கள். பொருளைக் கூடச் சொல்லி இருக்கின்றார்கள். "சட்டமன்றத்தின் அதிகாரங்களும் உரிமைகளும்" என்ற தலைப்பிலே நான் பாடம் எடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கின்றார்கள். உங்கள் அனைவருடைய நல்வாழ்த்துகளுடன் நான் முறையாக என்னுடைய கடமையைச் செய்வேன் என்று சொல்லி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-25

**Thiru M. Abdul Latheef:** Sir, you have been assigned the work of teaching the participants there about the Parliamentary Democracy. So, that itself substantiates and subscribes to the view that is being repeatedly expressed by me. I really feel that you are teaching. That is not with bad intention, but it is only a rich encomium I am paying.

**Hon. Speaker:** Thank you.

**Thiru M. Abdul Latheef:** Therefore, I also support and join the Hon'ble the leader of the Opposition, in saying that you must go there and come back with flying colours, adding life and lustre to the debate. Your teaching there will develop more responsibility in the minds of the people who occupy places in the State Legislatures and in the Central Legislature. I convey my good wishes and felicitations. I always have a very good respect for the Hon'ble Speaker.

**Hon. Speaker:** Thank you very much.



**Thiru M. Abdul Latheef:** I am prepared to get myself taught by the Hon'ble Speaker when he is back, with added responsibilities and with added capacity to guide this House. Thank you very much.

## 8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998-99 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும். வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். 10 பால் வழங்கு செயல் திட்டங்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,96,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1376, திரு. சி. ஞானசேகரன்.

**திரு.சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் உற்பத்தியாளர்களுக்குக் கூடுதல் விலை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 156, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நிஜாமுதீன் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 976, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், குறிச்சியில் பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3225 திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கடலூர் மாவட்டத்திற்கென தனியாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 280, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதியில் ஏழை மக்கள் பயன் அடையும் வகையில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1751, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பால் கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1667, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,96,66,000-ல். ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வழங்கு செயல் திட்டங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில்

---

@139 முதல் 162 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8 மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே பேச இருக்கின்றார்கள். வரப்போகின்ற ஆண்டுக்கு உண்டான எல்லாக் குழுக்களின் உறுப்பினர்கள், தலைவர்கள் பெயர்களை அறிவிக்க இருக்கின்றேன். ஆகவே, இந்தக் கோரிக்கையைப் பொறுத்த விவாதம் 1¼ மணி அளவிலே முடிந்தால் பொருத்தமாக இருக்கும் என்று கூறி, முதலிலே திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

முற்பகல் 11-30

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பால்வளத் துறையில் பேசக்கூடிய வாய்ப்பு கொடுத்தமைக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்து, இந்த மாமன்றத்தில் எனக்குத் தெரிந்த சில கருத்துக்களை எடுத்து வைக்கலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக பால்வளத் துறையில் குஜராத் மாநிலத்தைப் பின்பற்றி தமிழகத்திலே பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, மாவட்ட பால்வள ஒன்றியங்கள் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டு, இணையமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இங்கே இந்த மாமன்றத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம் குஜராத் மாநிலத்திலே மூன்று ஆலைகளை நிறுவி, தினம் ஒன்றுக்கு 42 இலட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து, அதிலிருந்து எந்தவித துர்நாற்றமும் இல்லாமல் பால் பவுடர், உப பொருட்களான பால்கோவா, ஐஸ்கிரீம் போன்ற பல்வேறு பொருட்களையெல்லாம் உற்பத்தி செய்து வருடம் ஒன்றுக்கு 42 கோடி ரூபாய் குஜராத்திலே, ஆனந்திலே, லாபம் பெற்று எந்த அளவிற்கு விவசாயிகள், அதைச் சார்ந்தவர்கள் எல்லாம் பால் ஊற்றுகிறார்களோ அந்த அளவிற்கு டிவிடென்ட், போனஸ்-ஆக பணம்



பிரித்துக் கொடுக்கக்கூடிய அந்தச் சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலை இங்கே ஏன் வரவில்லை என்பதை அன்போடு கேட்க விரும்புகிறேன். குறிப்பாக, பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் லாபத்தில் இயங்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில், மாவட்ட பால்வள ஒன்றியங்களும், மாநில இணையமும் ஏன் நஷ்டத்தில் இயங்குகின்றன என்பதைத் தங்களுடைய பதிலுரையிலே விளக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தில் உலக வங்கியினுடைய உதவியோடு 88 கோடி ரூபாய் கடனாகப் பெற்று 1996 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே அங்கே தினம் ஒன்றுக்கு 30 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரத்தை நிறுவியிருக்கிறார்கள். ஆனால் கடந்த 2 ஆண்டுகளாக, அதை நிறுவியதிலேயிருந்து அந்த இயந்திரம் எந்தவித பயன்பாடும் இல்லாமல் வீணாக இருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்கள் மூலமாக ஒவ்வொரு மாவட்ட ஒன்றியத்திலும் என்ன லாப நஷ்டக் கணக்கு, தேசிய பண்ணையிலும், தேசிய இணையத்திலும் என்ன லாபம் என்பதையெல்லாம் தெள்ளத்தெளிவாகக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய பால்வள வாரியத்தினுடைய தலைவராக இருந்த குரியன் அவர்கள் 1963 ஆம் ஆண்டிலே மாதவரத்திலே சிறந்த நவீன ஆலையைக் கொடுத்துச் சென்றதாகவும், அந்த ஆலை இந்தியாவிலேயே சிறந்த ஆலையாக வரும் என்று எதிர்பார்த்துச் சென்றதாகவும், ஆனால், தமிழக அரசு அதை முழுமையாகப் பயன்படுத்தவில்லையென்றும் வருத்தத்தோடு எடுத்துச் சொன்னார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், கொள்கை விளக்கக் குறிப்பிலே நான்காம் பக்கத்திலே குறிப்பிடும்போது, முழுமையாகப் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்கள்தான் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்ற குறிப்பினை கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். ஆனால், தேர்தல் நேரத்திலே யார் யாருக்கு எல்லாம் 10 ரூபாய் கட்டக்கூடிய சக்தியிருக்கின்றதோ அவர்கள் கட்டி மெம்பராகி, அவர்கள் எல்லாம் தேர்தலிலே நிற்கக்கூடிய வாய்ப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். இது முழுமையாக சட்டத்திற்கு விரோதமான, நீதிக்கு விரோதமான செயல் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பயனீட்டாளர்கள் யார் யார் எல்லாம் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகப் பயனடைவார்களோ அவர்கள்தான் அங்கே உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அவர்கள்தான் தேர்ந்தெடுக்கக்கூடிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும், தேர்தலில் நிற்க வேண்டும், என்ற நியதி கண்டிப்பாக, மாதிரிச் சட்டமாக கூட்டுறவிலே அமல்படுத்தவேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இங்கே, 8,848 பிரதமக் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும், வருடம் ஒன்றுக்கு 350, 380, 487 என்றும் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்திருக்கிறோம் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். 1975, 1976-லே ஆரம்பிக்கப்பட்ட பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களோடு சுற்று வட்டாரத்திலே பிரதமக் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத நேரத்திலே, சுற்று வட்டாரத்திலே இருக்கக்கூடிய எல்லா ஊர்களையும் சேர்த்திருப்பார்கள். இன்று காலம் மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில், 25 உறுப்பினர்கள் இருந்தாலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்ற நியதியிலே இருக்கக்கூடிய இந்த காலகட்டத்திலே, எங்கெங்கெல்லாம் 100 லிட்டர் பாலை உற்பத்தி செய்யக்கூடிய சக்தி இருக்கிறதோ, அங்கெல்லாம் சங்கங்கள் அமைப்பதற்கு உறுதுணையாக, இந்த எல்லையையெல்லாம் மாற்றியமைத்து, இன்று இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப அந்தச் சட்டத்தை மாற்றியமைத்து உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முயற்சித்தால் முடியாதது இல்லை. இன்று வருடம் ஒன்றுக்குக் குறைந்தது ஆயிரம் சங்கங்கள் ஆரம்பிக்க முடியும். நமது முயற்சி, அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு, பணியாளர்களுடைய ஒத்துழைப்பு இருக்குமேயானால், கண்டிப்பாக ஆயிரம் சங்கங்களை ஆரம்பிக்க முடியும். 25 இலட்சம் விவசாயிகள் இன்றைக்குப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபடுவதாகக் கூறியிருக்கிறீர்கள். ஆனால், பால் வருவதோ 12 இலட்சத்து 40 ஆயிரம் லிட்டர் என்று கூறியிருக்கிறீர்கள். இது ஏன், என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்கே இருக்கக்கூடிய விவசாயி, குறைந்த அளவிற்கு, தினம் ஒன்றுக்கு 3 லிட்டர், 5 லிட்டர் பால் கொடுத்தால்தான் லாபகரமாக இருக்கமுடியும் ஆனால் 1 லிட்டர், 2 லிட்டர் கொடுக்கின்றபோது கண்டிப்பாக இலாபம் இருக்க முடியாது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த மாதத்திலே பாலுக்கு விற்பனை விலையை அதிகமாக்கினார்கள். இன்று ஒரு பாட்டில் மினரல் வாட்டருடைய விலை 15 ரூபாய், அதாவது 750 மில்லிலிட்டர். பாலின் விலையை இன்று 9 ரூபாயிலிருந்து 1 ரூபாய், 1½ ரூபாய் அதிகமாக்கியிருக்கிறீர்கள். அதிலே மகிழ்ச்சி. ஆனால், இன்னும் அதிகமான விலையைப் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க முடியும். நுகர்வோர்களுக்கு இன்னும் இதைவிடக் குறைவான விலையிலே பாலைக் கொடுத்துவிட்டு, இன்னும் அதிகமான விலையைப் பாலை உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க முடியும். அதிகமான கொழுப்புச் சத்து இருக்கக்கூடிய பாலைத்தான் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து பணம் கொடுக்கிறீர்கள். ஆனால், அதேநேரத்தில் 3, 3.5 சதவீதம் கொழுப்புச் சத்து இருக்கக்கூடிய பாலை நுகர்வோருக்கு விநியோகிக்கிறீர்கள். நிர்வாகம் செம்மையாக, சிறப்பாக இருக்குமேயானால் கண்டிப்பாக இலாபத்தை ஈட்ட முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், எங்களுடைய மாவட்டத்தில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. டி.என். பொன்னுசாமி என்பவர் இருக்கிறார். அவர் 20 ஆண்டுகளுக்கு முன்பாக சைக்கிளில் பால் ஊற்றிக் கொண்டிருந்தவர். ஆனால், இன்று ஒரு பால் பண்ணையை ஆரம்பித்து, தினம் ஒன்றுக்கு பெங்களூருக்கு 15,000 லிட்டர் பாலை அனுப்பி, பெரிய அளவிலே வருடத்திற்கு 50 இலட்சம் ரூபாய் வரை இலாபமாக ஈட்டி வருகின்றார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், எதிர்காலத்திலே நமது நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி, ஒழுங்காக நடத்துவோமேயானால் கண்டிப்பாகத் தேவையான அளவிற்கு உற்பத்தியாளர்கள் நல்லமுறையில் பாலை உற்பத்தி செய்ய முடியும். நுகர்வோருக்கும் குறைந்த விலையில் பாலைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பையும் பெற முடியும். ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



முற்பகல் 11-35

அடுத்து, 23 மாவட்ட ஒன்றியங்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். இதுவரை 15 மாவட்ட ஒன்றியங்களிலேதான் தணிக்கை செய்யப்பட்டிருக்கிறது என்றும், இன்னும் 3 மாவட்ட ஒன்றியங்களிலே, அதாவது திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தணிக்கை செய்யப்படவில்லை என்றும் கூறியிருக்கிறீர்கள். ஏன், எதனால் அந்த மூன்று மாவட்டங்களில் மாத்திரம் தணிக்கை செய்யப்படவில்லை? 23 மாவட்ட ஒன்றியங்கள்

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1998 மே 18

இருக்கக்கூடிய சூழ்நிலையில், 15 மாவட்டங்களிலே மாத்திரம் தணிக்கை செய்யப்பட்டதாகக் கூறியிருக்கிறீர்கள். அந்த மூன்று மாவட்ட ஒன்றியங்களிலே ஏன் தணிக்கை செய்யப்படவில்லை என்ற விளக்கத்தைத் தங்களுடைய பதிலுரையில் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில இணையத்தில் 1991-92, 1992-93-லேயிருந்து தணிக்கை செய்யப்படவேயில்லை. ஒரு நிர்வாகத்தில் தணிக்கை செய்தால்தான் அதிலுள்ள இலாப நஷ்டக் கணக்கை நாம் புள்ளிவிவர வாரியாகத் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே, தணிக்கை இல்லையென்ற சூழ்நிலையில் அதிலே என்ன இலாபம், என்ன நஷ்டம் என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் தணிக்கையை ஏன் தாமதப்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள்? விரைவாக அந்தத் தணிக்கையைச் செய்ய வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, ஏன் தணிக்கை செய்யவில்லை என்பதையும் தெளிவுபடுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், ஊட்டியில் கருவூட்டல் நிலைய ஜெர்சி பொலிகாளைப் பண்ணை ஒன்றும், ஈரோட்டில் முர்ரா எருமை இன உறைவிந்து நிலையம் ஒன்றும் செயல்படுவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறீர்கள். இதிலே குறிப்பாக நான் இந்த நேரத்திலே அன்போடு சொல்வதெல்லாம், கிராமங்களிலே, ஒவ்வொரு பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எருமை இரண்டும், ஜெர்சி பசு மாடுகள் இரண்டும்....... (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்று நிமிடங்கள்தான் ஆகியுள்ளன கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒவ்வொரு பிரதம கூட்டுறவுச் சங்கத்திற்கும், இரண்டு எருமை மாடுகளும், 2 பசு மாடுகளும் மானியத்துடன்கூடிய விலையில் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவை குறைந்தது 5 லிட்டர், 10 லிட்டர் கறக்கக்கூடிய அளவிற்கு இருந்தால்தான் அங்கே பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய முடியும். 1 லிட்டர் ½ லிட்டர், ¾ லிட்டர் என்று கறக்கக்கூடிய மாடுகளைக் கொடுத்தால் நன்றாக இருக்காது. வெளிநாடுகளிலேயெல்லாம் 15 லிட்டரிலிருந்து 30 லிட்டர், 60 லிட்டர் என்று கறக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, நம்மிடம் தொழில்நுட்ப வல்லுநர்கள், அறிவியல் நுட்பம் மிகுந்தவர்கள் அதிகம் இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, நம்முடைய சீதோஷ்ண



1998 மே 18] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

நிலைக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்யக்கூடிய வகையிலே இங்கே இருக்கக்கூடியவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உற்பத்தியைப் பெருக்க வைக்கோல், புல் மாத்திரம் போதாது. தொழில்நுட்பத்தோடு நல்ல வைட்டமின் உள்ள தேவையான தீவனங்களை உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும். நல்ல கலப்புத் தீவனத்தை உற்பத்தி செய்து இங்கே கறவை மாடுகளுக்குக் கொடுத்தால் அதிகமான பால் உற்பத்தியை நாம் ஈட்ட முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, எதிர்காலத்திலே ஈரோட்டிலே, மாதவரத்திலே 3 ஆலைகளை நிறுவி தினம் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் தீவனம் உற்பத்தி செய்வதாகக் கூறியிருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இங்கே கால்நடை தீவனம் நன்றாக இருந்தால்தான் அதிகமான பால் உற்பத்தியைச் செய்ய முடியும்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே அவரை அன்போடு நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மின்சாரக் கட்டணம் வீடுகளுக்கு என்ன நிர்ணயம் செய்து வாங்கிக்கொண்டிருகிறீர்களோ, அதுபோலவே பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினரிடமும் நீங்கள் வாங்க வேண்டும். எங்கள் பகுதிகளிலேயெல்லாம் அதிகமாக வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள். 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று சொல்லக்கூடிய இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவின் மூலமாகத்தான் நாட்டின் ஏற்றமே இருக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து, பசுத் தீவனம் பற்றி. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணி அடித்துக் கொண்டேயிருக்கிறீர்கள். இன்னும் ஒரே ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், அங்கிருக்கின்ற 23 மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கும் எதிர்காலத்தில் விரைவாகத் தேர்தல்களை நடத்தவேண்டும். தேர்தல் மூலமாகச் செம்மையான நிர்வாகத்தைக் கொடுக்கவேண்டும். அங்கே பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகமான பணம் கிடைக்கக்கூடிய அளவிலேயும், எல்லோருக்கும் குறைந்த விலையிலே பால் கிடைக்கக்கூடிய அளவிலேயும், எதிர் காலத்தில் தமிழகம் பால் உற்பத்தியில் குஜராத் மாநிலத்திற்குச் சளைத்ததல்ல, அதைவிடச் சிறப்பாகச் செய்வோம் என்ற நியதியை

அடுத்த நிதியாண்டிலே செய்து காட்டவேண்டுமென்ற வேண்டுகோளோடு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. எல். வெங்கடாசலம்.

**திரு. ஜி. எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான துறையான பால்வளத் துறையிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். 'நீரின்றி அமையாது உலகம்' என்பதைப் போன்று, இன்றைக்குப் பால் இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்ற நிலைமையில், கிராமப்புறங்களில் பால் உற்பத்தி செய்கின்றவர்களுக்குக் கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு ஒரு ரூபாயிலிருந்து 1-50 ரூபாயாகக் கூட்டித் தந்திருக்கிறார்கள். அதன் மூலமாக கிராமப்புறங்களில் பால் உற்பத்தி பெருகி, நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, பால் உற்பத்தியாளர்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உற்பத்தியாளர்களுக்குக் கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுத்த அதே நேரத்தில், நுகர்வோருக்கும் 0.50 பைசா குறைத்துக் கொடுத்து, அதன் மூலமாக சுமார் 30 கோடி ரூபாயை அந்த ஆணையத்திற்கு மானியமாக வழங்கியிருக்கின்ற மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் செய்ததைப்போல, இந்தப் பால்வளத் துறையிலும் ஊழல்கள் செய்து, அதையும் விட்டுவைக்கவில்லை. அதன்காரணமாக, பால் கூட்டுறவு ஒன்றியங்கள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றிட நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகவும், மாண்புமிகு துறை



அமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகவும், இன்றைக்கு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமானது நல்ல இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு துறையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேபோல் கடந்த ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில், 1991-92 ஆம் ஆண்டில் சுமார் 525 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டிருந்தன. ஆனால் கடந்த ஐந்து ஆண்டுக்காலத்திலே அவர்கள் தொடங்கியது 12 சங்கங்கள்தான். கடந்த ஆட்சியிலே 12 சங்கங்களைத்தான் அவர்கள் உருவாக்கினார்கள். ஆனால் நமது அரசானது ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த இரண்டே இரண்டு ஆண்டுகளில் தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் 124 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஐந்து ஆண்டுகளில் 12 சங்கங்களையே உருவாக்கினார்கள். ஆனால், 124 சங்கங்களை நாம் இந்த இரண்டு ஆண்டுகளிலேயே தொடங்கியிருக்கிறோம் என்று சொன்னால், கிராமங்களில் இருக்கிற பால் உற்பத்தியாளர்கள், குறிப்பாக விவசாயிகளின் பொருளாதாரத்திற்கு வளம் சேர்க்கின்ற வகையில் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, என்னுடைய தர்மபுரி மாவட்டத்தில் கடந்த காலகட்டத்தில் 1,04,000 லிட்டர் பால்தான் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் இன்றைக்கு 1,40,000 லிட்டர் பால் உற்பத்தி செய்கின்ற நல்ல நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். அதேபோன்று கடந்த காலங்களில் ஒரு கறவை மாடு வாங்க வேண்டுமென்று சொன்னால், 6 ஆயிரம் ரூபாய்தான் கடனாக வழங்கப்பட்டது. இன்றைக்கு அந்த 6 ஆயிரம் ரூபாய் என்பது 9 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, அதன்மூலமாக இரு கறவை மாடுகள் வாங்க நமது அரசானது 18 ஆயிரம் ரூபாயைக் கடனாக வழங்குகின்ற நிலைமையை உருவாக்கியதற்காக, விவசாயிகள் சார்பாக, பால் உற்பத்தியாளர்கள் சார்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இன்றைக்குப் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற அடிப்படையில், பால் உற்பத்தி அதிகம் அடையவேண்டும், நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்பதை

[திரு. ஜி.எல். வெங்கடாசலம்] [1998 மே 18

மனதில் கொண்டு, இந்த அரசு மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாகவும், குறிப்பாக எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலமாக 19 கோடி ரூபாயை கடனாகத் தந்து, அதன் மூலமாக பால் உற்பத்தியைப் பெருக்குகின்ற அரசாக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோன்று, இன்றைக்குத் தாட்கோ மூலமாகவும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாகவும் ஆதிதிராவிடர் மக்களுக்குக் கடன்வசதி வழங்கப்படுகின்றது. அப்படி வழங்கப்படுகின்ற உதவியினைத் தற்போது வழங்க மறுக்கின்றனர். ஏனென்றால், இங்கிருந்து பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் எல்லாம், நிலுவையிலே வைக்கப்பட்டு, வழங்கப்படாமல் இருக்கின்றன. எனவே, தேசிய வங்கிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கி, தாட்கோ மூலமாகவோ அல்லது பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாகவோ அனுப்பப்படுகின்ற அந்தப் பரிந்துரையை ஏற்று, அவர்களுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு கறவை மாடுகள் வாங்குவதற்குத் தாட்கோ மூலமாக ரூ.684.50 இலட்சம் மானியம் வழங்கப்படுகின்றது என்ற நல்ல செய்தியினை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனை முழுமையாகச் செயல்படுத்துகின்ற வகையிலே தேசிய வங்கிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில், குறிப்பாக எங்களுடைய பாலக்கோடு நகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 30,000 லிட்டர் பால் உற்பத்தியாகின்றது. அங்கிருந்து கிருஷ்ணகிரியிலுள்ள பால் ஒன்றியத்திற்கு வரவேண்டுமானால், கிட்டத்தட்ட 30-லிருந்து 50 கிலோமீட்டர் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, பாலக்கோடு பகுதியை மையமாக வைத்து, அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் உற்பத்தியாகின்ற சுமார் 30,000 லிட்டர் பாலைக் குளிரூட்டுவதற்கு, அங்கே ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 மே 18] [திரு. ஜி. எல். வெங்கடாசலம்]

அதேபோன்று, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, சிறிய சங்கமாக இருந்தாலும், புதிதாக உருவாக்கப்படுகின்ற சங்கமாக இருந்தாலும், கேன்கள் போன்ற புதிய தளவாடங்களை வாங்குவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மானிய விலையில் கேன்களும்,தளவாடங்களும் வாங்குவதற்கு ஆவன செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு பால் உற்பத்தியாளர்கள் பாலை வழங்குகின்றபோது, அந்தப் பாலின் தரத்தைத் தெரிந்து கொள்வதற்கு, உடனடியாக அதன் தரத்தை அறிந்து கொள்வதற்கு மின்னணு பால் பரிசோதனைக் கருவி ஒன்று, ரூ.25,000 மதிப்பிலே வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி வாங்குபவர்களுக்கு 50 சதவிகித மானிய விலையில் அந்தக் கருவிகளை வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கலப்பினக் கன்றுகள் வாங்குவதற்குப் பல மாவட்டங்களில், குறிப்பாக வடஆற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் மானிய விலையில் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், எங்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரையில், கலப்பினக் கன்றுகள் வாங்குவதற்கு மானியமும் வழங்கப்படுவதில்லை; அதேபோன்று, கலப்பினக் கன்றுகள் வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் கலப்பினக் கன்றுகள் வாங்குவதற்குரிய வாய்ப்பினை அதிகரித்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே சுமார் 8,484 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தாலும், 17 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் இருந்தாலும், அதிலே பணிபுரிபவர்கள் பட்டயப் பயிற்சியோ அல்லது பால்வளத் தொழில்நுட்பப் பட்டப் படிப்பு போன்றவை படிப்பதற்கோ இங்கே வசதி வாய்ப்புகள் இருக்கின்றதா என்று கேட்டால், இல்லை. ஏனென்றால், பால்வளத் தொழில் நுட்பப் பட்டப் படிப்பிற்கென்று கல்லூரி எதுவும் தமிழ்நாட்டிலே இல்லை. இங்குள்ளவர்கள் படிக்க வேண்டுமென்று சொன்னால், பக்கத்திலே, கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற பெங்களூருக்கோ அல்லது அலகாபாத், கர்நூல் போன்ற இடங்களுக்கோ சென்று, அங்கே தேசிய

பால் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக நடத்தப் பெறுகின்ற கல்லூரிகளுக்குச் சென்று, படித்து வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையினால், தமிழ்நாட்டில் பால்வளத் தொழில்நுட்பப் பட்டப் படிப்பிற்கென்று கல்லூரி ஒன்று ஆரம்பித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, அத்தகைய கல்லூரியை ஆரம்பிப்பதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகள் எங்களுடைய ஓசூர் பக்கத்தில் இருக்கின்ற மத்தகிரி பால் பண்ணையில் இருக்கின்றன. சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் அந்தப் பால்பண்ணை அமைந்து இருப்பதால் அதனை அங்கே அமைத்துத் தந்திட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த காலத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஆரம்பிக்கப்பட்டு, அவை நடைபெறாமல் முடங்கிக்கிடந்தன. அந்தச் சங்கங்களையெல்லாம் இன்றைக்கு நல்ல முறையிலே தொடங்குவதற்கு, நம்முடைய பால்வளத் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதன் மூலம் இன்னும் 50 சங்கங்கள் ஓரிரு மாதங்களில் தொடங்கப்படயிருக்கின்றன என்பதைத் தெரிவித்து, இந்த அருமையான வாய்ப்பினை உருவாக்கித் தந்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி,வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. லி. அய்யலுசாமி.

முற்பகல் 11-50

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வள மானியக்கோரிக்கையான 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்மீது பேச அனுமதித்தற்காகத் தங்களுக்கும், பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய சில கருத்துக்களை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கூற விரும்புகிறேன்.

இந்த ஆண்டு, பெண்களுக்காக, பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்ததற்காக நான் மிகவும் பாராட்டுகிறேன். ஏனென்றால், பெண்கள் வீடுகளிலேயே இருந்து, மாடுகளைக் கவனிக்கக்கூடியவர்கள். அவர்கள்



முறையாக அந்தச் சங்கங்களை நடத்துவார்கள் என்ற அடிப்படையில், பால் உற்பத்தியாளர் சங்கம் அவர்களுக்காக அமைத்ததற்கு ஆவன செய்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு, கிட்டத்தட்ட 8,921 தொடக்க நிலை பால் உற்பத்திச் சங்கங்களில் 31-1-98 முடிய தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள 1,164 சங்கங்களுக்கான ரெக்கார்டுகள் கோர்ட்டில் இருப்பதால், அவற்றிற்கான தணிக்கை முடிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அதேபோல், நம்முடைய தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் இணையமும், மாவட்ட ஒன்றியங்களும்,இதுவரை, இந்த அரசு வந்ததிலிருந்து, இதற்குமுன் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாகத் தணிக்கை நடைபெறாமல் உள்ளது என்றும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அப்பணி முன்னேற்றத்தில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? முந்தைய அரசு பழைய அதிகாரிகள் மூலமாக ஏதேனும் தவறு புரிந்திருக்கிறதா அல்லது மோசடி நடந்திருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும்; அதை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்களில், 100 லிட்டர் பால் கொள்முதல் செய்தால், 102 லிட்டர் வரவு வைக்க வேண்டுமென்று துறையின் மூலமாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் மூலமாக இரண்டு லிட்டர் அதிகமாகக் கொள்முதல் செய்வதன் காரணமாக, மெம்பர்களைத் துன்புறுத்த வேண்டும்; அவர்களைச் சுரண்டுவதற்கும், ஊழலுக்கும் இது வழிவகுக்கும். ஆகவே 100 லிட்டர் கொள்முதல் செய்தால், 102 லிட்டர் வரவு வைக்க வேண்டுமென்ற உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 100 லிட்டர் என்றால் 102 லிட்டர் வரவு வைக்க வேண்டுமென்ற நிலை இருந்தது. ஆனால், கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களினுடைய பிரதிநிதிகள் எல்லோரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்துக் கேட்டுக்

கொண்டதற்குப்பின், 100 லிட்டர் என்றால் 100 லிட்டர்தான் கணக்கு வைக்க வேண்டும் என்று இப்போது உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. பால் உற்பத்தியாளர் சங்கங்களிலிருந்து கொழுப்புச் சத்து அடிப்படையில் தரம் நிர்ணயித்து, மாவட்ட ஒன்றியங்களுக்குப் பால் அனுப்பப்படுகிறது. அப்படி அனுப்பக்கூடிய பாலுக்கு, மாவட்ட ஒன்றியங்கள் கொழுப்புச் சத்து வித்தியாசமாக இருப்பதாகக் குறிப்பிட்டு, விலையை வித்தியாசமாக நிர்ணயித்து பில் போடுகிறார்கள். அப்படிப் போடுவதன் மூலம், குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் வரம்புக்கோட்டை சங்கத்திற்கு மட்டும் 7 மாதங்களில் 17,000 ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது. இப்படி நஷ்டம் வந்தால், கிராமச் சங்கங்கள் எப்படி இலாபத்தில் இயங்க முடியும் என்பதை அரசு கவனித்து, அதிலே என்ன கோளாறு இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெற்று நிர்வாகிகளும், தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சங்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குச் சம்பளப் பிரச்சினை அல்லது பஞ்சப்படி பிரச்சினைகள் வரும்போது, நிர்வாகத்தின் மூலமாகப் பேச்சுவார்த்தை நடத்தி, ஒப்பந்த அடிப்படையில், சம்பளத்தையும், பஞ்சப்படியையும் உயர்த்தும்போது, அதிகாரிகள் அந்த அதிகாரம் போர்டுக்கு இல்லை என்று கூறி, 81, 82 விதிகளைப் பயன்படுத்தி உங்கள் சங்கங்களில் நாங்கள் ஆய்வு நடத்துவோம் என்று கூறி மிரட்டுகிறார்கள். விதிகள் 81, 82-ல் சம்பளம் மற்றும் சலுகைகளை அதிகரிக்க உரிமை அளிக்கப்பட்டுள்ளது. சம்பள விகிதங்களை ரத்து செய்ய அதிகாரிகளுக்கு உரிமை இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த வழக்கு தொடரப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றம் டபிள்யு.பி. நம்பர் 377 மற்றும் 965 நாள் 4-11-1997 மூலம் வழங்கிய தீர்ப்பில் சங்கங்கள் ஏற்படுத்தும் தொழிலாளர் ஒப்பந்தங்களை ரத்து செய்யவோ, சம்பள விகிதங்களை ரத்து செய்யவோ துணைப் பதிவாளருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. சங்கத்திலுள்ளவர்கள் ஊழல் செய்தாலோ, பதவியைத் துஷ்பிரயோகம் செய்தாலோ



அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடும்போது, அந்தச் சங்கத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் போது விதி 81, 82-ஐப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க முடியும். தொழிலாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட சம்பள விகிதத்தை ரத்து செய்ய முடியாது என்றுதான் 19(அ) பிரிவில் கூறப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் தவறான முறையில் சங்கங்களுக்கு நிர்பந்தத்தைக் கொடுக்கிறார்கள்.

முற்பகல் 11-55

பால் சங்கங்கள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்து பாலைக் கொள்முதல் செய்கின்றன. ஒரு சங்கத்தின்கீழ் 10 கிராமங்கள், 20 கிராமங்கள் வருகின்றன. அந்தக் கிராமங்களிலிருந்து பாலைக் கொள்முதல் செய்யும்போது ஒரு வீட்டிலிருந்து 4 லிட்டர், 5 லிட்டர், 10 லிட்டர் என்று பால் வரும். இப்படிக் கொள்முதல் செய்து கொண்டு வரும்போது சிரமங்கள் ஏற்படுகின்றன. 14 மணி நேரம், 12 மணி நேரம் அவர்கள் வேலை செய்ய வேண்டிய சூழ்நிலை வருகிறது. எனவே இவர்களுடைய சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு மாவட்ட அளவில் அந்த நிர்வாகத்தில் இருக்கக்கூடிய தலைவருக்கும் அதிகாரம் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்தது, பாலின் தரத்தையும், பாலின் விலையையும் நிர்ணயம் செய்வதற்குப் பால் ஒன்றியங்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கிராமங்களிலுள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களில் வேலைபார்க்கும் ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயம் செய்வதற்கும், பாலின் விலையை நிர்ணயம் செய்வதற்கும் சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. குறிப்பாக கடலூர் சொசைட்டியும், ரெட்டியாபுரம் சொசைட்டியும் பஞ்சப்படியை உயர்த்த வேண்டும் என்று சொல்லி கடிதம் அனுப்பி 6 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் அந்தப் பஞ்சப்படியை உயர்த்தி உத்தரவு வழங்கப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு மாவட்டப் பதிவாளரே இவற்றையெல்லாம் சீர்செய்து கொடுக்கும்படி செய்தால் நன்றாக இருக்கும். சங்கங்கள் மூலமாக அனுப்பப்படக்கூடிய சம்பளப் பிரச்சினையாக இருந்தாலும், வேறு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் மாவட்டப் பதிவாளரே நடவடிக்கை எடுத்து அந்தச் சங்கங்களுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறையிலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பாரத நாட்டில் குஜராத் மாநிலத்தில் தான் பால்வளம் நிரம்பி வழிகின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டவர் கலைஞர் அவர்கள். அதன் காரணமாகத்தான் இன்று தமிழகத்தில் 8,848 சங்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மறைந்த பாரதப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் பிரதமராக இருந்தபோது குஜராத் மாநிலத்திற்கே சென்று எப்படி அங்கு பால்வளம் அதிகமாக இருக்கிறது; இந்தியாவிலே இருக்கின்ற பல மாநிலங்களில் ஏன் பால்வளம் குன்றியிருக்கிறது என்ற காரணங்களைத் தெரிந்துகொள்வதற்காக அங்கு ஒரு கிராமத்திலே ஒரு இரவு தங்கியிருந்தாராம். அங்கே தங்கியிருந்து, அந்த கிராமத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எப்படி பால் உற்பத்தி செய்கிறார்கள், எப்படி தங்களுடைய கால்நடைகளை, கறவை மாடுகளைப் பேணிக் காக்கிறார்கள் என்பதை எல்லாம் நேரில் கண்டறிந்து, அவர்கள் சிறப்பாகச் செயல்படுவதைக் கண்டறிந்து, இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்களும் அதைப் பின்பற்ற வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அதன் காரணமாகத்தான் இந்தியாவில் பல மாநிலங்களில் வெண்மைப் புரட்சி நன்றாக நடைபெறுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

தமிழகத்தில் 1958-ஆம் ஆண்டு பால்வளத் துறை துவங்கப்பட்டது. ஆனால் 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் தமிழகத்திலே பல கிராமங்களில், கலைஞர் அவர்களுடைய பெரு முயற்சியின் காரணமாக பால உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1967-ல் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மதுரையில் ஒரு பால் பண்ணை ஏற்படுத்தப்பட்டது அனைவரும் அறிந்ததாகும்.

தமிழகத்தில் 17 ஒன்றியங்கள் இருக்கின்றன. வேலூர் பிரிக்கப்படாத வடாற்காடு மாவட்டத்தில், வேலூர், திருவண்ணாமலைக்கு சேர்த்து வேலூரிலே ஒரு ஒன்றியம் இருக்கிறது. அங்கே இரண்டு லட்சத்து





பத்தாயிரம் லிட்டர் பால் நாளொன்றுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால், திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் சற்றொப்ப ஒரு இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்ந்து வேலூரில் ஒரு ஒன்றியம் வைக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் பகுதியான திருவண்ணாமலை மாவட்டம் வேலூரிலிருந்து நெடுந்தொலைவில் இருக்கின்ற காரணத்தால், அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து திருவண்ணாமலைக்கு என்று ஒரு ஒன்றியத்தை உடனடியாக அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர் தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களுடைய அமைச்சரவையில் அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதிக்கு வந்தபோது போளூரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அவ்வாறு சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலேயே போளூர் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் என்னுடைய கிராமத்தில் 10 ஆண்டுக்காலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்தேன். 1972-ஆம் ஆண்டு தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக குஜராத் மாநிலத்திற்கு நான் அனுப்பப்பட்டேன். குஜராத் மாநிலத்தில் இருக்கின்ற ஆனந்த் மாவட்டத்திற்குச் சென்று அங்கே விவசாயிகள் இருக்கின்ற ஒரு கிராமத்தில் பல நாட்கள் தங்கினேன். அந்த கிராமத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எப்படி எல்லாம் வாழ்கிறார்கள், எப்படி பால் பெருக்கத் திட்டத்தை ஊக்குவிக்கிறார்கள், எப்படி தங்களுடைய கால்நடைகளை, கறவை மாடுகளை பேணிக் காக்கிறார்கள் என்பதை எல்லாம் நேரில் பார்த்தேன். நம்முடைய மாநிலத்தில் ஊராட்சித் தேர்தலுக்குப் போட்டியிடும் நபர்களின் எண்ணிக்கையைவிட, குஜராத் மாநிலத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகம் பேர் போட்டியிடுகிறார்கள். அங்கே இருக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் கொடுப்பதற்காக, காலையில் பார்த்தால் பெண்கள் எல்லாம் தலைகளில்

பால் குடத்தை ஏந்திக்கொண்டு வரிசையிலே நிற்கிறார்கள். நம்முடைய கிராமத்தில் ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு லிட்டர் பால் ஊற்றுகிறார்கள். ஆனால் குஜராத் மாநிலத்தில் உள்ள கிராமத்தில் ஒரு குடும்பத்தில் 20 முதல் 25 லிட்டர் பாலை கூட்டுறவுச் சங்கத்திற்கு ஊற்றுகிறார்கள். அங்கே இருக்கிற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் இந்த பால் உற்பத்தியின் மூலம் கிடைக்கிற வருவாயைக் கொண்டே தங்கள் மகள் மற்றும் மகன்களுக்கு திருமணம் செய்து வைக்கிறார்கள். அப்படிப்பட்ட எழுச்சி, அப்படிப்பட்ட வளர்ச்சி நம்முடைய தமிழகத்திலே வந்தாக வேண்டும். அதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக பாடுபடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆட்சிக்காலத்தில் பால் வளம் இருண்ட சூழ்நிலையில் இருந்துவந்தது. ஏனென்றால், தனி அதிகாரிகள் மூலம் பால்வள இணையங்களை நடத்தியதன் மூலம் எப்படி எல்லாம் ஊழல்கள் நடந்தன, சாதாரணமாக, காசோலைகளில் கையெழுத்து போடுவதற்குக்கூட தனி அதிகாரிகள் எவ்வளவு தொகையைப் பெற்றார்கள் என்பதெல்லாம் எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், குறிப்பாக வேலூரில் இருக்கின்ற சத்துவாச்சாரியில் பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. இப்போது அவைகள் எல்லாம் விசாரிக்கப்பட்டு முறையான வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே, விரைவாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மேலும் கடந்த 5 ஆண்டுகாலத்திலே அவர்கள் எப்படியெல்லாம் ஊழல் செய்தார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஒரு கிராமத்தில் பால் கூட்டுறவு சங்கத்தில் அந்த ஊராட்சியினுடைய அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர் ஒருவர் சங்கத்தில் பணியாற்றாமலேயே மாதத்திற்கு ரூ.500/-க்கு கையெழுத்திட்டு சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தார் என்று சொன்னால், அந்த மாதிரியான சங்கங்கள் எல்லாம் எவ்வாறு வளர முடியும் என்பதை நம்மால் நிச்சயமாக நினைத்துக்கூடப் பார்க்க



முடியவில்லை. இப்போது நிலைமை மாறி கிராமங்களில் எல்லாம் சீரடைந்து வருகிறது. (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்திலே இருக்கின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது மிக வேகமாகச் சீரடைந்து வருகின்ற இந்த நேரத்தில் இன்னும் சில முக்கியமான கருத்துக்களைச் சொன்னால் இன்னமும் வேகமாக அவை சீரடைய உதவும் என்ற வகையில் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கால்நடை மருத்துவர்கள் சில கிராமங்களுக்கு வருகிறார்கள். ஆனால் தூரத்தில் இருக்கின்ற கிராமங்களுக்கு அவர்கள் செல்லாமல் விட்டுவிடுகிறார்கள். இவர்கள் எல்லாம் கால்நடை மருத்துவர்கள். அந்தந்த சங்கங்களுக்கு அவசியமாக வாரம் ஒரு முறையாவது கால்நடை மருத்துவர்கள் சென்றாக வேண்டும் என்று உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறை விந்தைப் பொறுத்தவரையில் ஜெர்சி, பெர்சியன், முர்ரா ஆகிய இனங்களின் உறை விந்துகள் தமிழகத்தில் இருக்கின்றன. இவைகளில் அதிகமான பால் கொடுக்கக்கூடியது பெர்சியன் இனமாகும். எனவே, பெர்சியன் இன உறை விந்துவைப் பயன்படுத்தினால் அதிகமான பால் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். இப்போது இந்தக் கிராமங்களில் ஜெர்சி இன உறை விந்து உபயோகப்படுத்தப்படுகிறது. எனவே, இவற்றுடன் பெர்சியன் இன உறை விந்துவையும் கிராமங்களில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராமங்களில் நைட்ரஜன் கொடுப்பதில்லை. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் பாலை டெஸ்ட் செய்வதற்கு நைட்ரஜன் போன்றவைகள் தரப்படுவது இல்லை. எனவே, கிராமத்தில் இருக்கின்றவர்கள் மொத்தமாக ஒரு லிட்டர் பால் இவ்வளவு விலை என்று தருகின்றார்களேயொழிய டெஸ்டர் எல்லாம் போட்டு அவர்கள் பாலின் விலையை நிர்ணயிப்பது இல்லை. இதற்கு மில்கோ டெஸ்டர்கூடப் பயன்படுத்தலாம். இவையெல்லாம் இந்த அரசுத் துறையின் மூலமாக நிச்சயமாகத் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தனியார் துறையினர் அதிகமாக இன்று பாலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் தனியாருடன் போட்டி போட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு

அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவர்களைக் கொண்டு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்தச் சொல்லலாம். மேலும் கூட்டுறவுச் சங்கத்திற்கு பாலை ஊற்றுகின்றவர்களுக்குத்தான் கால்நடை அதிகாரிகளின் இலவச மருத்துவ உதவி கிடைக்கும் என்று உத்தரவிட்டால் தனியார்களை சிறிது கட்டுப்படுத்திட இயலும். மேலும் தனியார் இதில் சிறந்து விளங்குவதைப் போல, கூட்டுறவுச் சங்கங்களும் அவர்களுடன் போட்டிப் போட்டு வளர வேண்டுமென்று கூறி எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே எனக்குப் பேச அனுமதி அளித்தமைக்கு நன்றி கூறி, விவசாயிகளின் சார்பிலேயும், உற்பத்தியாளர்களின் சார்பிலேயும் பால் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, சென்ற அந்தத் தூதுக் குழுவிலே நானும் சென்றிருந்தேன், அமைச்சர் அவர்கள் பெருமனதோடு விவசாயிகளுக்காக விலையை உயர்த்திக் கொடுத்தமைக்காக முதற்கண் எனது நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இதில் சென்ற ஆட்சியிலே ரூ.83 கோடி நஷ்டம் வந்ததாகக் கணக்கு காட்டுகிறார்கள். கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலே இருக்கின்ற சங்கங்களின் வாயிலாகத்தான் நஷ்டம் வந்ததாகக் கணக்கு காட்டப்படுகின்றது. ஆனால், இதுவரை இந்த விஷயத்தில் எந்த நபர்களையும் ஏன் கைது செய்யவில்லை என்று இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பபட்டிருக்கிறேன். பல்வேறு துறைகளிலே சென்ற ஆட்சியிலே முறைகேடுகள் நடந்திருந்தாலும்கூட, பால்வளத் துறையைப் பொறுத்தமட்டில் அமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான அந்தக் கருணை எண்ணத்தோடு அவர்களையெல்லாம் விட்டுவிட்டார்களோ என்று நான் நினைக்கிறேன்.

நிச்சயமாக அவர்களை எல்லாம் கைது செய்து, அந்தப் பணத்தை அவர்களிடமிருந்து வாங்கி, பால்வளத் துறையிலே ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



பிற்பகல் 12-10

எனக்குத் தெரிந்த வரையிலே, வேலூர் ஆவினிலே 112 பேர்கள் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்தனை பேர்களுக்கும் இப்போது அங்கே வேலை இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம், சென்ற ஆட்சியிலே, வேண்டியவர்களுக்கு எல்லாம் வேலை போட்டுக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதனால், இன்றைக்கு அந்த ஆவின் நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே, அங்கே ஆட்குறைப்புச் செய்து, அந்த நபர்களை வேறு நிலையத்திற்காவது அனுப்பி, அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேவையான இடங்களில் புதிய சங்கங்களை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இங்கே வேடிக்கை என்னவென்றால், கூட்டுறவு அமைப்புகளின் கிழே கிட்டத்தட்ட 13,08,000 எருமை மாடுகள் இருப்பதாகக் கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நமக்குக் கிடைக்கின்ற பாலின் அளவோ 12.44 இலட்சம் லிட்டர்தான். ஆக, ஒரு எருமை மாட்டுக்கு ஒரு லிட்டர்கூட இல்லை என்பதைத்தான் இங்கே கணக்கு சொல்லுகிறது. 13 இலட்சம் எருமை மாடுகள் இருந்தும், நமக்குக் கிடைக்கின்ற பால் உற்பத்தி 12.44 இலட்சம் லிட்டர்தான். எனவே, தேவையான அளவுக்கு நல்ல ஜெர்சி இன மாடுகளை, பால் அதிகமாகக் கறக்கக்கூடிய மாடுகளை—குஜராத்திலே இப்போது 20 லிட்டர் பால் சுலபமாகக் கறப்பதாகச் சொல்லுகிறார்கள் அத்தகைய ஜெர்சி இன மாடுகளை—இங்கே கொண்டுவந்து, பால் வளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டும் போதாது, இங்கே நம்முடைய மாடுகளுக்குக் கொடுக்கின்ற தீவனம் வெறும் வைக்கோல்தான். ஆகவே, ஊட்டச் சத்து மிகுந்த தீவனத்தைக் கொடுப்பதற்கு நம்முடைய பால்வளத் துறையின் மூலம் ஆராய்ச்சி செய்து நல்ல தீவனமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. காரணம், நம்முடைய சட்டப்பிரகாரம் 120 நாட்கள் அல்லது 300 லிட்டர் பால் கொடுப்பவர்களைத்தான் மெம்பர்களாகச் சேர்க்க வேண்டும் என்று

இருக்கிறது. ஆனால் 10 ரூபாய் கட்டினால் போதும், மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்கிறார்கள். இப்படி ஏராளமான மெம்பர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறர்கள். தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது.

ஆனால், அது முறையான தேர்தலாக இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே, இனிமேலாவது, உண்மையான உறுப்பினர்களை அதிலே சேர்த்து, விரைந்து தேர்தலை நடத்தி, பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட அளவிலே தணிக்கை நடத்த வேண்டும். பல இடங்களிலே இன்னும்கூட சரியான முறையிலே தணிக்கை நடத்தப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். நாங்கள் கூட, தணிக்கைக் குழுவிலே சென்று பார்த்தபோது, சில உற்பத்தி இடங்களுக்குள்ளே செல்ல முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகிறது. ஆகவே, சுகாதாரமான முறையிலே அவைகளை எல்லாம் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, ஆவின் மூலம் கொடுக்கப்படுகின்ற பல்வேறு பொருட்கள், சுகாதாரமான முறையிலே, சுத்தமான முறையிலே இல்லை என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுகுறித்து அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் அமைப்பிலே கொடுக்கின்ற எருமை மாடுகளை நாமே செலக்ட் செய்து, அதிக அளவில் பால் கொடுக்கக்கூடிய மாடுகளாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு குஜராத்திலே இந்தத் துறையிலே புதிதாக வரும் நபர்களுக்கு எந்த உதவி வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அந்த முறையையே நாமும் இங்கே பயன்படுத்தி, நம்முடைய பால் உற்பத்தியாளர்களுக்கும் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட வாரியாகத் தணிக்கை செய்தால்தான் அதை நடத்துகின்றவர்களுக்கும் சரி, அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகளுக்கும் சரி, அதன் பொறுப்பிலே உள்ளவர்களுக்கும் சரி, பயம் வரும். அதைச் செய்யாத காரணத்தினால்தான், இன்றைக்கு வெளி ஆட்களை உறுப்பினர்களாக ஆக்கிக் கொண்டு, நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.



எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் அவைகளையெல்லாம் தணிக்கை செய்து, முறையாகக் கணக்குகளை எடுத்துவைத்து, இந்தத் துறை மேலும் சிறப்பாக இயங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் மானியக் கோரிக்கை எண் 10, பால்வளத் துறை மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்து சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்துவைக்க முன் வருகிறேன்.

இன்றையதினம், தமிழகத்தில், தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் எடுத்துச் சொல்லியதற்கிணங்க — ஆட்சிப்பொறுப்பேற்ற சில நாட்களுக்குள் ஆங்காங்கே இருக்கின்ற ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவற்றிற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் முறையாக தேர்தல் நடத்துவேன் என்று தன்னுடைய தேர்தல் அறிக்கையில் எடுத்து வைத்தார்கள், அந்த அடிப்படையிலே — ஊராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதற்குப் பின்னால் கூட்டுறவுத் துறையில் தேர்தல்கள் நடத்தியதன் வாயிலாக இந்தப் பால்வளத் துறையின் மூலமாகவும் இன்றையதினம் தேர்தல்கள் முறையாக நடத்தப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் சில ஒன்றியங்களில் கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில இடங்களில் நடத்த வேண்டியிருக்கிறது. அந்த இடங்களுக்கு முறையாகத் தேர்தல் நடத்தி முடித்ததற்குப் பின்னால், பால் இணையத்திற்கும் தேர்தல் நடத்தி உரிய துறையின் மூலமாக அதற்குரிய வாரியத் தலைவரை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இன்றையதினம் மகளிருக்காக என்று ஒரு கூட்டுறவுச் சங்கத்தைத் தொடங்க வேண்டுமென்ற ஒரு நல்ல திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

[திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்] [1998 மே 18

பெண்களுக்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்குரிய வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையிலே, பெண்களுக்காக, பால்வளத் துறை மூலமாகக் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதியில் இந்தத் திட்டம் சிறப்புள்ளதாகவும், பயனுள்ளதாகவும் அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, வாழ்த்தி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் உற்பத்தியாளர் இணையம், மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஆகியவற்றில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பல ஆண்டுகளாக நிரந்தரமாக்கப்படாமல் உள்ளனர். அவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக அறிவித்து, குறைந்தபட்ச ஊதியத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 1997-ல் தமிழ்நாட்டில் 17 சங்கங்கள் தவிர, மற்றவற்றுக்கு முறைப்படி தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதை நான் வரவேற்கின்றேன். அதேபோன்று, மாவட்டப் பால் உற்பத்தியாளர்களின் ஒன்றியங்களிலும் முறையாகத் தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 31-3-1998 முடிய, 7,747 சங்கங்களில் 1996-97 ஆம் ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1164 சங்கங்களில், தணிக்கை முடிக்கப்படாமல், அவற்றின் புத்தகங்கள் நீதிமன்றத்தில் நிலுவையாக இருக்கின்றன. அதை இந்த அரசு கவனித்து, தணிக்கைகளை முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியாளர்களுக்கு இந்தச் சங்கங்கள் மூலம் கடனுதவி வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கு உரிய முறையிலே, நேரடியாக எருமை மாடுகளை, சங்கங்கள் மூலமாக வழங்குவதற்குரிய முயற்சிகளைத் துரிதப்படுத்தி, அவைகள் விரைவிலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்கே கால்நடை மருத்துவர்களைத் தேர்வு செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. பயனாளிகள் வேண்டி விண்ணப்பிக்கின்ற நேரத்தில், கால்நடை மருத்துவர்கள் வருவதில்லை. கால்நடை மருத்துவர்களைத் தேர்வு செய்து கொடுப்பதில் ஏற்படுகின்ற காலதாமதத்தை உடனடியாகத் தவிர்த்து, துரிதமாக மேலதிகாரிகள் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு வழிவகை செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1998 மே 18] [திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்]

அதுபோன்று ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் மூலமாக I.R.D.P. கடனுதவிகள் வழங்கப்படுவதிலே - உற்பத்தியாளர்களுக்கு எருமை மாடுகள், பசு மாடுகள் வழங்குவதிலே - காலதாமதம் ஏற்படுகிறது. இதை நான் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே கூறியிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களுடைய தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்கிவிட்ட காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடைக்கப்பெறாத நிலையில், சட்டமன்ற உறுப்பினர்களை நாடி, தொகுதியிலே இருந்து கடனுதவி கேட்டு வருகின்ற பயனாளிகளுக்குப் பரிந்துரை செய்து சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எடுத்துச் சொன்னாலும்கூட, அங்கே ஊராட்சி அலுவலகத்தில் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கக்கூடிய தலைவர்கள் இலாப நோக்கத்தை மனதில்கொண்டு, மெத்தனம் காட்டுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தாலும், I.R.D.P. கடனுதவி மூலம் கறவை மாடுகள் வழங்குவதில் மெத்தனம் காட்டுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய பயனாளிகள் உரிய பொருள்கள், மாடுகள் வாங்க, கடனுதவிகள் விரைவிலே அவர்களுக்குக் கிடைப்பதற்குரிய ஒரு திட்டத்தை அமல்படுத்துவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால் வழங்கும் உற்பத்தியாளர் சங்கம் கரூரில் இல்லாமல் இருந்தது. நாங்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய உத்தரவுக்கிணங்க, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள், இன்றையதினம் புதிதாகக் கரூரிலே பால் வழங்கும் உற்பத்தியாளர்கள் சங்கத்தை வழங்கி பெருமை சேர்த்து இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தத் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, சின்னதாராபுரம், ஈசநத்தம், ஜமீன் ஆத்தூர் போன்ற பகுதிகளில் எல்லாம் ஆவின் பாலே கிடைக்காமல் இருந்தது. இப்போது அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டு, அங்கே நல்ல முறையிலே ஆவின் பால் வழங்கப்பட்டு வருகின்றது. இதிலே உள்ள சில குறைகளை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அங்கிருந்து வேன் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்ற பால், 5 மணிக்கு

எடுக்கப்பட்டு, 6 மணிக்குக் கிராமங்களிலே விநியோகிக்கப்பட வேண்டும் என்றால், லாரி ஒப்பந்தக்காரர்கள் அதைக் காலதாமதம் செய்து, உரிய நேரத்தில் காலையிலே 5 அல்லது 6 மணிக்குப் பால் கிடைக்க வேண்டும் என்ற நிலையை மாற்றி, தாமதமாக வந்து விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைத் துரிதப்படுத்தி, உரிய நேரத்தில் உரியவர்களுக்குப் பால் கிடைக்கக்கூடிய வழிவகையைச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, விற்பனையாளர்களாக, ஏஜென்டுகளாக இருக்கக் கூடியவர்கள் முன்பணம் கட்டி ஒரு நாளைக்கு 1,000 முதல் 1,200 லிட்டர் வரை பால் வாங்கி, பயனாளிகளுக்கு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி விற்பனை செய்து கொண்டு இருப்பவர்கள், முன்பணம் கட்டித்தான், ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் தேவையோ, அதற்குரிய பணத்தை வங்கியிலே செலுத்தித்தான், அவர்கள் பாலை மறுநாள் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் இதுபோன்று தங்களுக்குத் தேவையான பாலுக்குரிய பணத்தை அவ்வப்போது செலுத்தி வந்தாலும், மாதத்திற்கு ஒரு முறையாவது, அவர்களுக்கு வரவேண்டிய கமிஷன் தொகைக்குப் பில் போட்டுக் கொடுக்காமல் காலதாமதம் செய்வதால், அவர்கள் அந்தப் பால் விற்பனையை விட்டுவிடலாமா என்றுகூட எண்ணிக்கொண்டு இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே, 2 மாதங்களாகியும் கமிஷன் தொகை வராமல் அவர்கள் காத்திருக்க வேண்டிய நிலை, நஷ்டப்பட வேண்டிய நிலை அவர்களுக்கு இருக்கின்றது. அந்த விற்பனையாளர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, தயவுசெய்து அவர்களுக்குக் கமிஷன் தொகை கிடைக்க வழிவகை செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சுடு பால் விற்பனை நிலையம் என்று, ஆவினுடைய பெயரை வைத்துக் கொண்டு, 50 மில்லி அளவு சுடு பாலுக்கு இரவு நேரத்திலும், பகல் நேரத்திலும் 5 ரூபாய் என்று கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். உரிமம் பெற்றவர்கள் ஒருபுறம் இருந்தாலும், உரிமம் பெறாதவர்கள் அதை எடுத்துக்கொண்டு, ஆவினுடைய பெயருக்குக் களங்கம் கற்பிக்கின்ற வகையிலே அவர்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இதனை அங்குள்ள அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்து, 100 மில்லி சுடு பாலின் விற்பனை விலை என்ன





என்ற விவரத்தை அங்கே குறிப்பிட்டு, அதை அமல்படுத்த வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

இது தவிர, கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற பால் உற்பத்தி நிலையங்களிலிருந்து வாங்கப்படுகின்ற பாலை சங்கங்களுக்குக் கொண்டுபோய்க் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, மறைமுகமாக அதைக் கிராமங்களிலே தனியார் விற்பனைக்கு ஆயத்தப்படுத்தி, நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவ்வாறு நடைமுறைப் படுத்துகின்ற பகுதிகளிலே, கிராமங்களிலே இருக்கின்றவர்கள், அந்தப் பாலில் இருக்கின்ற கொழுப்புச் சத்தை எடுத்துவிட்டு, அதில் சோடா உப்பு போன்ற அமிலப் பொருட்களைக் கலந்து, கிராமங்களிலே விற்பனை செய்ய முயற்சி செய்து கொண்டு வருகின்றார்கள். ஆங்காங்குள்ள பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளிலேயும் கிராமங்களிலேயும், சுகாதார ஆய்வாளர்கள் - சேனிட்டரி இன்ஸ்பெக்டர்ஸ் மூலமாக அதைப்பற்றிச் சொல்லி நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற பாலை விற்பனை செய்வதால் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு உண்டுபண்ணக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருக்கிறது; இதனைத் தணிக்கை செய்து அதுபோன்ற பாலை விற்பனை செய்பவர்களைத் தடை செய்ய வேண்டும்; முறையாக அனுமதி பெற்றவர்கள், உரிமம் பெற்றவர்கள்தான் பாலை விற்பனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஆங்காங்கு இருக்கின்ற பேரூராட்சி, நகராட்சி மன்றங்களிலே சொல்லி இருக்கின்றோம். இருப்பினும், அதைப்பற்றியும் துறையைச் சார்ந்த அதிகாரிகள் ஆய்வு செய்து, இதற்கு ஒரு வழிவகை செய்து தர வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இதுபோன்ற நல்ல திட்டங்களை எல்லாம் அரசு, முறையாக, கடந்த 2 ஆண்டுக் காலத்திலே செயல்படுத்தி வருகின்றது; அதற்கு இந்த அரசுக்கு நன்றியையும், நல்வாழ்த்துக்களையும் கூறி, கூட்டுறவே நாட்டுயர்வு என்று கூறி, இந்தத் துறை சிறந்து விளங்க, கிராம மக்கள், கிராம அங்காடிகள் சிறந்து விளங்க வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னைப் பேச அழைத்த தங்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்த அமைச்சருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் 4 ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று, 2 ஆண்டுகள் நிறைவு பெற்று, 3 ஆவது ஆண்டிலே வெற்றிகரமாக நடைபோட்டு வருகின்ற நாளிலே, பால்வளத் துறையைப் பற்றி, சில கருத்துக்களைக் கூற முன்வந்து இருக்கின்றேன். 1958 ஆம் ஆண்டு இந்தத் துறை ஆரம்பிக்கப்பட்டு, இன்றைக்கு 40 ஆண்டுகள் கழித்து, 1998 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக இந்தத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-25

1967-லே கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னாலே, இந்தத் துறை இலாபகரமாக நடைபெற்றாலும், இடையிலே ஐந்தாண்டுகள் ஏற்பட்ட அரசியல் சறுக்கல் காரணமாக, ஊழல்கள் பெருகி விட்டதால், இந்தத் துறை பல நஷ்டங்களுக்கு உள்ளாக்கப்பட்டது. இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பு எடுத்துக்கொண்ட பின்னாலே, இந்தத் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற ஊழல்களை எல்லாம் வெளிக் கொணர்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

அதேநேரத்தில், பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த அரசு இப்போது நல்ல கொள்முதல் விலையைக் கொடுத்தாலும்கூட, அது போதாது என்ற நிலை இருக்கிறது. காரணம், ரூ. 15,00விருந்து ரூ. 20,000 வரையிலும் முதல் போட்டு பால் உற்பத்தி செய்கின்ற ஒரு விவசாயி, காலையிலிருந்து மாலை வரை உழைத்துச் சேர்த்து, பத்து லிட்டர் பாலை உற்பத்தி செய்தாலும், அவர்களுக்குக் கிடைப்பது ரூ. 75-லிருந்து 80 வரைதான். அதில் மாட்டுத் தீவனத்திற்குச் செலவு செய்வது 65 ரூபாய் என்றாலும், மீதமுள்ள 15, 20 ரூபாயில் அவன் வாழ்க்கையை நடத்த முடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு கடையில் போய் பிஸ்லரி தண்ணீர் பாட்டில் வாங்குகிறோம் என்றால் அது 20 ரூபாய். ஆனால், பால் உற்பத்தி செய்கிற விவசாயிக்கு நாம் ஒரு லிட்டருக்குக் கொடுப்பது ஏழரை ரூபாயோ, எட்டரை ரூபாயோதான். என்றால் அந்த விவசாயி மனம் எப்படி சஞ்சலப்படும் என்பதை நாம் அறிய முடிகிறது. ஆகவே, பால் கொள்முதல் விலையை



மீண்டும் உயர்த்தித் தர அரசு ஏதாவது ஒரு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், மாடுகள் வாங்கத் தரப்படும் கடன் தொகையை உயர்த்த வேண்டும். நம்முடைய அரசாங்கம் வந்தபிறகுதான், ரூ. 6000 என்று இருந்த கடன் தொகையை ரூ. 9,000 என்று உயர்த்தியிருக்கிறது. அதுவும், கூட்டுறவு வங்கிகள்தான் ரூ. 9,000 கொடுக்கிறார்களே தவிர, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், அதே ஆறாயிரம் ரூபாயைத்தான் இன்றும் கொடுக்கிறார்கள். இந்தக் காலத்தில் ஒரு ஜெர்சி இன மாடோ, சிந்தி இன மாடோ அல்லது ரெட் டேன் இன வகை மாடோ வாங்க வேண்மானால், குறைந்தபட்சம் ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000 ஆகும். ஆனால், அதற்காகக் கொடுக்கப்படுகிற தொகை மிகச் சொற்பமானது, அதை மனதில் கொண்டு, மாடுகள் வாங்குவதற்கான தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், தர்மபுரி மாவட்டப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் கிருஷ்ணகிரியில் இருக்கிறது. தர்மபுரி மாவட்டம் அதிகமான மாம்பழம் விளையும் பகுதி. எப்படி சேலத்தில் ஆவின் சம்பந்தப்பட்ட குளிர் பானங்களைத் தயாரிக்கிறோமோ, அதைப்போல கிருஷ்ணகிரியில், பால் உற்பத்தியாளர் ஒன்றியம் சார்பாக, பழச்சாறு உற்பத்தித் தொழிற்சாலையை நாம் உருவாக்க வேண்டும். மேலும், பாலை முதன்மையாக வைத்துக் கொண்டு, அங்கே ஒரு சாக்லேட் தொழிற்சாலையையும் தொடங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பால்வளத் துறையில் உயர் படிப்புப் படிக்க வேண்டுமானால், அரியானாவில் இருக்கிற கர்னால் பகுதியில் உள்ள கல்லூரிக்குத் தான் செல்ல வேண்டும் அல்லது குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்த் என்ற இடத்திற்குத்தான் செல்ல வேண்டும். அதுபோன்ற ஒரு கல்லூரியை, தென் மாநிலங்களில், குறிப்பாக, தமிழ்நாட்டில் உருவாக்க அரசு முன்வர வேண்டும். கர்னால் கல்லூரியில் சேர நுழைவுத் தேர்வு மையம் பெங்களூரில் இருக்கிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் பல பேர் அந்த சென்டரில் தேர்வு எழுதியும்கூட, ஒருவர் கூடத் தேர்ச்சி பெறுவதில்லை. இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்நாட்டிலிருந்து குறைந்தது பத்துப் பேராவது அந்தக் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பை உண்டாக்கித் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



2/4/00

நம்முடைய பால் உற்பத்தியாளர்கள் இணையத்தில் பல ஆண்டுகளாகப் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருந்த ஊழியர்களை, இந்த ஆட்சி வந்த பிறகு நிரந்தரமாக்கியிருக்கிறீர்கள். அதிலே இன்னும் கொஞ்சம் பேர் மீதி இருக்கிறார்கள். அவர்களையும் பணி நிரந்தரம் ஆக்க வேண்டும்.

எப்படி தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு, அவர்கள் மாடு வாங்க மானியத் தொகை கொடுக்கிறீர்களோ, அதேபோல பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலிருக்கும் மானிய விலையில் மாடுகள் வாங்க, நிதி உதவி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கின்ற காரணத்தினாலே, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஒரேயொரு கோரிக்கையை மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். என்னுடைய தொகுதியினுடைய மக்களின், குறிப்பாக, அரசம்பட்டி, பனந்தூர் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, தென்பெண்ணையாற்றின் குறுக்கே இந்த இரண்டு ஊர்களையும் இணைக்கக்கூடிய ஒரு பாலத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் உறுதி அளித்தவாறு 3 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால்வள மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் வெளிநாட்டுப் பயணம் நல்ல முறையில் சென்று வர, எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வாழ்த்துகிறேன்.

விவசாயிகள் வளர்க்கின்ற மாட்டை வைத்து இன்று கூட்டுறவுத் துறைக்குப் பால் வழங்குகின்றார்கள். இந்த ஆண்டு, பாலுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற விலையினால் விவசாயிகளெல்லாம் மிகவும் ஏமாற்றம் அடைந்ததுபோல் இருக்கின்றார்கள். சாதாரணமாக, ஒரு



மாட்டை வைத்து, நாள் ஒன்றுக்கு 7, 8 லிட்டர் பால் உற்பத்தி செய்து, அதைக் கூட்டுறவுத் துறைக்கு வழங்குகின்றார்கள். ஒரு நாளைக்குத் தீவனத்திற்கு எவ்வளவு செலவாகிறது என்றால், அந்த மாட்டிற்குத் தவிடு, பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, புல் இதைப்போன்ற செலவினங்களுக்குத்தான் அந்த ரூபாய் சரியாகிறது. ஆனால் ஒரு மாட்டை வைத்து வளர்ப்பவருக்குக் கூலி இல்லாத நிலையிலே விவசாயிகள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள்—அந்தப் பால் உற்பத்தியாளர்களுக்கு, அதைச் சரி செய்யும் வகையிலே, தற்போது பாலுக்குத் தரப்பட்டு இருக்கின்ற விலை போதுமானதாக இல்லை, அதை மறு பரிசீலனை செய்து பாலுக்கு விலையேற்றம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

மாதவரம் பால் பண்ணை திறக்கப்பட்டிருக்கிறது. அதிலே பணி செய்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் பணி நியமனம் வழங்கப்படவில்லை. விடுபட்டிருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் பணி நியமனம் வழங்க ஆவன செய்ய வேண்டுமாய்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுபட்டவர்களுக்கு வேலை போட்டுத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். யார், யார் விடுபட்டவர்கள் என்ற பட்டியல் ஏதாவது இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் கொடுப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ப. கோவிந்தன்:** தற்போது என்னிடம் இல்லை.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏனோதானோவென்று பேசிவிட்டுப் போய்விடக் கூடாது. பொறுப்பாகப் பேச வேண்டும். ஏதோ பத்திரிகையிலே வர வேண்டும் என்பதற்காகச் சொல்லக்கூடாது. குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகவும் சொல்லக்கூடாது. பட்டியலிலே யார், யார் என்று பெயர்கள் இல்லையென்றால், எத்தனை பேர் என்றாவது சொல்லுங்கள் பெயர் வேண்டாம், எத்தனை பேர்கள் என்றாவது சொல்லுங்கள். நான் விடுவதாக இல்லை. சொல்லுங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு குத்துமதிப்பாகச் சொல்லிவிடாதீர்கள்.

[1998 மே 18

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விடுபட்டவர்கள் பட்டியல் தற்போது என்னிடத்திலே இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெயர்கள் வேண்டாம், மாண்புமிகு உறுப்பினர், எத்தனை பேர் என்றாவது சொல்ல முடியுமா?

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எத்தனை பேர் என்று சொல்லுங்கள், இல்லையென்றால் ஏற்கெனவே சொன்னதை, 'தவறாகச் சொல்லிவிட்டேன்' என்று ஒத்துக்கொள்ளுங்கள். அல்லது நாளை கொண்டு வந்து தருகிறேன் என்று சொல்லுங்கள். இப்படி நின்று கொண்டு இருந்தால் எப்படி? அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். பேசியது 3 நிமிடங்கள், நின்றது 3 நிமிடங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கேட்ட அறிக்கையை, பிறகு நாளை முதலமைச்சரிடம் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. கணேசன் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். அந்தப் பட்டியலையும், அந்தப் பெயர்களையும், எண்ணிக்கையையும் நாளைக் காலை என்னிடத்திலே தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே இரண்டு, மூன்று வாரங்கள் அல்லது ஒரு மாதம்கூட பணம் பட்டுவாடா செய்வதற்கு ஆகிறது. என்னுடைய தாரமங்கலம் ஒன்றியத்திலே 3 வாரமாகியும் இதுவரை பணம் பட்டுவாடா செய்யப்படாத நிலை இருக்கிறது. அந்தப் பால் உற்பத்தியாளர்களுக்கு வாரா வாரம் தொகை கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பால் உற்பத்தியாளர்கள்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய கழக அரசு ஏற்பட்ட பிறகு, குறைந்தது 10 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. உறுப்பினர் சொன்னது போல் எங்காவது இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.



1998 மே 18]

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எனது ஊர், திட்டம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் 3 மாதங்களாகப் பட்டுவாடா செய்யப்படாத நிலையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும். 3 நிமிடங்கள் கேட்டீர்கள். அதற்கு மேலும் 4 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, விருதாசம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே முன்பு தலைவராகப் பொறுப்பேற்று இருந்தவர், அந்தக் கூட்டுறவுச் சங்கத்ினுடைய பணத்தை பல முறைகேடுகளுக்குப் பயன்படுத்தி, அந்தப் பணத்தைச் செலவு செய்துள்ளார். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மனுக்களாக முன்னமே கொடுத்திருக்கிறேன். அதைப் பரிசீலனை செய்து, அவர் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது பேசுகையில், ஒரு கூட்டுறவுச் சங்கத்தினுடைய பிரச்சினையை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து முடிக்க விரும்புகிறேன். குறிப்பாக, கடையாலுமூடு என்ற கிராமத்தில் ஒரு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளது. அதிலிருந்து ஏறத்தாழ 1100, 1200 லிட்டர் பால், மாவட்ட இணையத்திற்கு வழங்குகிறார்கள். ஆனால், அது ஒரு மலைப்பாங்கான பகுதி என்ற காரணத்தால், ரப்பர் காடுகளில் கிடைக்கின்ற புல்லைத்தான் மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்கிறார்கள்.

பொதுவாக, பாலினுடைய கூட்டி என்பது கொஞ்சம் குறைவாக ஏற்படுகிறது. ஆனால், அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே பழங்குடி மக்கள் 18 பேர் உறுப்பினர்களாக இருந்து, பாலை வழங்குகின்றார்கள். அவர்களுக்கு ஒரு லிட்டருக்குக் கிடைக்கின்ற விலை 3 ரூபாய், 4 ரூபாய் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. இன்றைய காலகட்டத்தில், நம்முடைய அரசு பாலினுடைய விலையை உயர்த்திய பிறகும்கூட இதே நிலை நீடிக்கிறது. அந்தப் பால் கூட்டுறவுச் சங்கமானது

நஷ்டத்திலே ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்கு மேலும், அந்த மலைப்பாங்கான பகுதியிலேயிருந்து பாலைக் கொண்டு வருவதற்காக, சில ஊர்திகளை ஏற்பாடு செய்து கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தார்கள்; அதுவும் நடக்கவில்லை. ஆகவே, நான் அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், அதற்கப்புறம் 4 கிலோ மீட்டர்-ஐத் தாண்டுகிறபோது கேரள பார்டர். அங்கே அவர்கள் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற அந்த விலையைத்தான் கொடுக்கிறார்கள். இதே அமைப்பிலே இருக்கக்கூடிய முறையிலேதான் பால் அங்கே கிடைக்கிறது; அதனுடைய கட்டியும் இப்படித்தான் இருக்கும். ஆனால், இங்கே மட்டும், கடையாலுமூடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு மொத்தத்திலே இதனுடைய விலையைக் குறைவாகக் கொடுக்கிறார்கள். அதனாலே அந்த விவசாயிகள் மத்தியிலே கடுமையான ஒரு கோபாவேசம் ஏற்பட்டிருக்கிறது. அது நஷ்டத்தில் ஓடுகிறது. அந்த நஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கும், அந்த விவசாயிகளுக்குப் பாலுக்கு உரிய விலை கிடைப்பதற்கும், அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளினுடைய நலனைக் கருத்தில் கொண்டு, 9 ரூபாய் 45 காசுக்கு விற்ற எருமைப்பாலை 10 ரூபாய் 94 காசுக்கும், பசும்பாலை 7.51 காசுக்கு வாங்கியதை 9 ரூபாய்க்கும் கொள்முதல் செய்கின்றீர்கள். ஆனால் எருமைப்பாலை விற்பனை செய்யும்போது 1 லிட்டருக்கு 11 ரூபாயாகவும், பசும்பாலை 9 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து, 10 ரூபாய் 50 காசுக்கு விற்பனை செய்கின்றீர்கள். 1.50 காசு அதிக லாபம் வைத்து விற்கின்றீர்கள். இதைக் குறைத்து, எருமைப் பால் விற்பதைப் போன்று, வாங்கிய விலையை விட 6 காசு அல்லது 25 காசு கூட்டி விற்பனை செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பசும்பாலுக்கு எப்படி உயர்த்திக் கொடுத்தோமோ, அதே விலையில்தான், அதாவது 9 ரூபாய் 45 காசு என்பதை



இப்போது 10 ரூபாய் 94 காசு என்று உயர்த்தி எருமைப் பாலுக்குக் கொடுத்திருக்கிறோம். அதே விலைதான். பசும்பாலுக்கு என்ன விலையோ, அதேபோன்றுதான் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம், 1½ ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை செய்கின்ற பசும்பால் 9 ரூபாய்க்குக் கொள்முதல் செய்யப்பட்டு, 10 ரூபாய் 50 காசுக்கு விற்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைத்தான் நான் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

அடுத்து, பால் உற்பத்தியில் எவ்வளவு பெரிய திட்டங்களைத் தீட்டினாலும், குஜராத்திலே National Dairy Development Corporation மூலம், ஆனந்த் மில்க் டெய்ரி மூலம் விவசாயிகளுக்கு இலவசமாகவே எருமை மாடுகளும், பசு மாடுகளும் அவற்றை வளர்க்க, விரும்புகின்ற விவசாயிகள் கேட்ட ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படுகின்றன. அவர்கள் அந்த மாடுகளுக்குத் தீவனத்தை மட்டும் போட்டுப் பாதுகாத்து, காலையிலே பாலை கறந்து, ஆனந்த் மில்க் டெய்ரி ஃபார்மிற்குக் கொடுத்தால், மாலையில் பால் எடுக்க வரும்போது, அவர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. அதேபோல், மாலையில் எடுக்கின்ற பாலுக்கு மறுநாள் காலையில் பால் எடுக்க வருகின்றவர்கள், அவர்களுடைய இல்லத்திற்கே சென்று நேரடியாக அந்தப் பணத்தை பட்டுவாடா செய்து, அந்தப் பாலைப் பெற்று வருகின்றார்கள். அந்த அடிப்படையிலே, நம்முடைய அரசும், குஜராத்திலே இருக்கின்ற ஆனந்த் மில்க் டெய்ரியைப் போன்று, ஏழைகளுக்கு இலவசமாகக் கறவை மாடுகளைக் கொடுத்து, அதன் மூலம்-தற்போது 12.42 இலட்சம் லிட்டர்தான் ஒரு நாளைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. இது பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக, இந்த முறையில் வருங்காலங்களில் திட்டங்களைத் தீட்டினால் அதன் மூலம் ஏழை விவசாயிகள் பயன் அடையவும், நாட்டிலே பால் உற்பத்தியை அதிகப்படுத்தவும், வேலை வாய்ப்பின்மையைப் போக்குவதற்கும் இது ஒரு நல்ல திட்டமாக இருக்கும் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, வருங்காலங்களில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு சரியான திட்டத்தினை நீங்கள் வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிர்வாக வசதிக்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கூட்டுறவுத் துறையையும், உணவு விநியோகத் துறையையும் ஒரே அமைச்சருடைய நிர்வாகத்தின்கீழ் கொடுத்ததைப் போன்று, கால்நடைத் துறையையும், பால்வளத் துறையையும் ஒரே அமைச்சரே சேர்ந்து கவனிக்க ஏற்பாடு செய்தால் நிச்சயமாக நல்லமுறையிலே தமிழகத்தில் பால் உற்பத்தி ஏற்படும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், தேசிய கூட்டுறவு வளர்ச்சித் திட்டம். டெல்லியிலிருந்து தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்திற்காக 1987-88 ஆம் ஆண்டு 7 கோடியே 5 இலட்சம் ரூபாய்—மத்திய அரசிடமிருந்து 70 சதவீதமும், நம்முடைய தமிழக அரசிடமிருந்து 30 சதவீதமும்—மொத்தம் 7 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி கொடுக்கப்பட்டு, இந்த ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நெல்லை மாவட்டத்தில் ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறியீட்டோடு அங்கே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இன்றுவரை நாள் ஒன்றுக்கு 51 ஆயிரம் லிட்டருக்கு மேல் அங்கே பால் உற்பத்தி செய்யப்படவில்லை. 7 கோடி ரூபாய் முதலீடு செய்த பின்பும், ஏன் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நல்ல திட்டங்களை, இந்த ஒருங்கிணைந்த திட்டத்தின் மூலம் நெல்லையில் ஏற்படுத்தவில்லை, ஏற்படுத்த முடியவில்லை என்பதைப் பார்க்கும்போது, விந்தையாக உள்ளது, அதற்கு சில காரணங்களும் உள்ளன.

பிற்பகல் 12-45

நெல்லையிலே இயங்குகின்ற சி.ஒய்.டி. 245, நெல்லை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியம் 20-5-1994 அன்று கடந்த கால ஆட்சியிலே தன்னிடம் கையிருப்பாக இருந்த 417 டன் பால் பவுடரையும், 120 டன் நெய்யையும் விற்பனை செய்வதற்கு அனுமதி கோரியபோது, அப்போது அந்தத் துறையினுடைய ஆணையாளரும், செயலாளரும் ஒரு கிலோ நெய்யை ரூ. 90-க்குக் குறைவாகவும், ஒரு கிலோ பால் பவுடரை ரூ. 42-க்குக் குறைவாகவும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்த பின்பும், அப்போதைய பால்வளத் தலைவராக இருந்தவர் இதில் முறைகேடு செய்து, 20-5-1994 அன்று நெய்யை ரூ. 56-க்கும், பால் பவுடரை ரூ. 26.02-க்கும் விற்பதற்காக டெண்டர் கோரப்பட்டது. டெண்டர் கோரப்பட்டதனுடைய



விசித்திரத்தை நீங்கள் பார்க்க வேண்டும். 'நேஷனல் மார்க்கெட்டிங் கம்பெனி' வழங்கியுள்ள டெண்டர் படிவத்தில், எந்த இடத்தைச் சேர்ந்தவர், எந்தத் தேதியில் டெண்டரில் கையொப்பம் இட்டார், பெயர், பதவி மற்றும் முகவரி எதுவுமே இல்லாமல் 20-5-1994 அன்று டெண்டர் விடப்பட்டிருக்கிறது. அதோடு டெண்டரைப் பிரிக்க அதிகாரம் படைத்த அதிகாரிகள் ஒருவர்கூட அந்த டெண்டரைப் பிரிக்கவில்லை. டெண்டரின் முடிவுத் தேதியான 20-5-1994 முதல் 20 நாட்களுக்குள் டெண்டர்தாரர் பணம் செலுத்தி, அந்த டெண்டர் பொருட்களைப் பெற்றிருக்க வேண்டும். அந்த முறையும் அங்கே கையாளப்படவில்லை. இந்த நிலையில் 25-5-1994 அன்று அந்த டெண்டர் ரத்துச் செய்யப்பட்டது. ஆனால், மீண்டும் 16-6-1994 அன்று அன்றைய நிர்வாக இயக்குநர் அதே டெண்டருக்கு, ஏற்கெனவே பாதி விலைக்கு வாங்கி, இலட்சக்கணக்கிலே மோசடி செய்ய விழையும் அந்த டெண்டருக்கு அனுமதி அளித்திருக்கின்றார்கள். அந்த டெண்டர் அளிப்பதற்கு, முறையாக செய்தித்தாளின் மூலம் எந்த விளம்பரமும் செய்யப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, அடக்க விலைக்குக் குறைவாக இந்தத் துறையிலே இருக்கக்கூடிய பொருட்களை விற்கக்கூடாது என்ற நிரந்தரமான ஆணை இருந்தும், அதையும் மீறி இவர்கள் செய்திருக்கிறார்கள். அதோடு, தலைவர் அவர்களிடம், 'விதிமுறைகளுக்குப் புறம்பாக பல இலட்சக்கணக்கான ரூபாய் ஊழல் செய்கின்ற இந்தத் திட்டத்தை, இந்த டெண்டர் முறையை நீங்கள் ஏன் நிறைவேற்றினீர்கள்.' என்று கேட்டபோது, அமைச்சரவர்கள் தனக்கு அனுமதி அளித்திருப்பதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதன்மூலம், நம்முடைய திருநெல்வேலி பால் பண்ணைக்கு மட்டும் ரூ. 40,80,000 இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால், நம்முடைய அரசு பொறுப்பேற்ற பின்பும், அந்தக் காலத்திலே நடந்த ஊழலில் ரூ. 40 லட்சம் ஒரே டெண்டரில் ஊழல் செய்யப்பட்டிருப்பதைத் தெளிவாக ஆடிட் ரிப்போர்ட்டில் கூட எடுத்துக் கூறிய பின்பும், அவர்கள்மீது இன்னமும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் முன்னாள் பெருந்தலைவர் மற்றும் நிர்வாகத்தினர்மீது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று, அந்த உண்மைகள் கண்டறியப்பட்டு, 1995 ஆம்

ஆண்டில் சுமார் ரூ. 97 லட்சம் கையாடல் செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்போது அரசு உதவி வழக்குரைஞரின் சட்டக் கருத்து பெறப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை ஒரு சில நாட்களில் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி, அதோடு அதே திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் 31-3-1997 அன்று அங்கே ஆய்வுக்கு வந்த அதிகாரி, அங்கேயிருக்கின்ற பொருட்கள் சரியாக இருக்கின்றனவா என்பதைக் கணக்கிடுவதற்காக வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் பார்வையிட்டபோது, பதிவேட்டில் இருக்கின்ற பொருட்களின் எண்ணிக்கையையும், அங்கே உள்ள பொருட்களினுடைய எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கிட்டத்தட்ட ரூ. 13,15,474 பெறுமான பொருட்கள் அங்கே குறைவாக இருநதிருகின்றன. இது 1997 ஆம் ஆண்டு ஆய்வு செய்தபோது கண்டுபிடிக்கப்பட்ட குற்றச்சாட்டு ஆகும். இதற்கும் நம்முடைய ஆட்சி வந்த பின்பு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்தவரை, அனைத்து மாவட்டங்களிலும் அதைக் கண்காணிக்கின்ற வகையிலே அனைத்து ஆடிட்களும் இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** இந்த அளவிற்குத் திட்டமிட்டு, பல இலட்சம் ரூபாய்களை, பல கோடி ரூபாய்களைக் கொள்ளை அடித்தவர்கள் முன்னாள் முதல்வர் அவர்கள். கடந்த ஜனவரி 1, 2, 3 ஆகிய தேதிகளில் வெள்ளி விழா மாநாடு நெல்லையிலே நடைபெற்றபோது, முக்கியமாக ஜி. சுப்பிரமணியன், இன்னும் பல அதிகாரிகள், தினமலரிலே, முதல் பக்கத்திலே, அவர்களுடைய விசுவாசத்தைக் காட்டுகின்ற அளவில் விளம்பரத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இரண்டு ஆண்டு நாம் ஆட்சியிலே இருந்த பிறகும்கூட இவ்வளவு பெரிய ஊழலைச் செய்தவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், நம்மை என்ன



செய்து விடுவார்கள் என்ற எண்ணத்தில், அவர்கள் தங்களுடைய ஊழலுக்கு யார் உதவி செய்தார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை என்னிடம் கொடுங்கள். (திரு. மு. அப்பாவு பத்திரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்தார்)

**திரு. மு. அப்பாவு:** இந்த அளவில் அவர்கள் ஊழலைச் செய்து விட்டு, தொடர்ந்து இன்னும் அங்கே பணியாற்றிக் கொண்டு, அங்கே அவர்கள் தனியாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தன்னை யாரும் கேட்கமுடியாது என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு, உடனடியாகத் திருநெல்வேலியிலே நடைபெறுகிற அந்த ஊழலை அம்பலப்படுத்துவதோடு, உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, நெல்லை மாவட்டத்திற்கு மத்திய அரசும், நாமும் சேர்ந்து 7 கோடி ரூபாய் திட்டத்தில் செயல்படுத்துகின்ற திட்டத்தில் அந்த 1 இலட்சம் லிட்டர் பால் உற்பத்திக் குறியீட்டை எட்டுவதற்கு, ஏழை விவசாயிகளுக்கு இன்னும் அதிகமான கறவை மாடுகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை மானியத்தின் மீது மூன்றாவது முறையாக இம்மாமன்றத்தில் உரையாற்றிடும் அரிய வாய்ப்பினை நல்கிய, தமிழ் இனத்தினுடைய தானைத் தலைவர், முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு, எனது உரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் இந்த மானியக் கோரிக்கையின்மீது நல்ல விளக்கங்களையும், இந்தப் பால்வளத் துறை செம்மைப்பட சில அறிவுரைகளையும் நல்கியதற்கு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பால்வளத் துறையானது, உற்பத்தியாளர்களும், நுகர்வோர்களும், விற்பனையாளர்களும் இணைந்து, நாள்தோறும் காலை, மாலை இரண்டு வேளைகளிலும் செயல்படும் ஓர் அமைப்பாகும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதைப்போல, 10,000 இடங்களிலிருந்து, 26 இலட்சம் கிராமப் பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து, 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பாலை நாள்தோறும்

[திரு. க. சுந்தரம்] [1998 மே 18

கொள்முதல் செய்து ஏறத்தாழ 28 இலட்சம் குடும்பங்களில் உள்ள மக்களுக்கு, அதே நாளில் அவசரமாகவும், அவசியமாகவும் 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பால், பால் பொருட்களை விற்பனை செய்யும் மிகப் பெரிய நிறுவனம் இது. 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசின் பால் வழங்கு துறை 1972 ஆம் ஆண்டு மே திங்களில் தமிழ்நாடு பால் நிறுவனமாக தனியாக நிறுவப்பட்டது. மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள்தான், 'ஆவின்' என்ற ஒரு அழகான பெயரை இந்த நிறுவனத்திற்குச் சூட்டினார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 25 ஆண்டு காலமாக தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் மற்றும் நுகர்வோர்களின் நம்பிக்கையைப் பெற்று, ஒவ்வொருவரின் இல்லத்திலும் 'ஆவின்' குடும்பப் பெயராகிவிட்டது. இந்தப் பால் வளத் துறையின் மிக முக்கியமான குறிக்கோள், தமிழகத்தில் சீரான முறையில் நுகர்வோருக்கு சுகாதாரமான பால், நியாயமான விலையில் கிடைத்திடவும், அதேபோன்று, பால் உற்பத்தியாளர்களாகிய, கிராமங்களில் வாழும் ஏழை, எளிய விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்குக் கட்டுப்படியாகும் நியாயமான விலை கிடைத்திடவும், இத்துறை தற்போது நேர்மையாகவும், தூய்மையாகவும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுடைய மேம்பாட்டிற்காக, அல்லும் பகலும், அயராது பாடுபட்டு வரும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை, எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் லிட்டர் ஒன்றுக்கு 1 ரூபாய் 50 காசுகள் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கியதற்காக ஏறத்தாழ 26 இலட்சம் விவசாயக் குடும்ப மக்கள் மனதார, வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, ஆவின் பால் வாங்கிப் பயனடையும் நுகர்வோர் பெருமக்களின் நலன் கருதி பால் வழங்குவதற்காக, தாயுள்ளம் கொண்ட, பால் மனம் படைத்த நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 30 கோடி ரூபாயை ஆவின் நிறுவனத்திற்கு மானியமாக வழங்கியிருக்கிறார்கள் என்பதை மிகப் பெருமையாகத் தெரிவித்துக்கொள்வதுடன், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 18] [திரு. க. சுந்தரம்]

பிற்பகல் 12-55

பால் விலை உயர்வுக்கு முன்னர், ஆவின் நிறுவனத்தால் நாளொன்றுக்கு 11 இலட்சத்து 44 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இதற்குக் காரணம், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத விலை மற்றும் தனியார் பால் பண்ணைத் தொழில்களின் ஆதிக்கம். தமிழக முதல்வர் அவர்கள் கொள்முதல் விலையை கிராமப் பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி, வரலாறு காணாத அளவிற்கு 7-4-1998 அன்று முதல் உயர்த்திக் கொடுத்த காரணத்தினால், தற்போது ஆவின் நிறுவனத்தால் நாளொன்றுக்கு சுமார் 13 இலட்சத்து 45 ஆயிரம் லிட்டராகப் பால் கொள்முதல் உயர்ந்துள்ளது. இது நாளொன்றுக்கு சுமார் 2 இலட்சம் லிட்டர் கூடுதலாகும் என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற மாநிலங்களோடு, குறிப்பாக, தென் மாநிலங்களோடு ஒப்பிடும்போது பால் விற்பனை விலை தமிழ்நாட்டில்தான் குறைவானதாகும் என்பதனைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

உற்பத்தியாளர்களின் கறவை மாட்டின் இனவிருத்திக்கென இரண்டு பண்ணைகள் மூலம் தரம் உயர்ந்த காளைகளை வைத்துப் பராமரித்து இனப்பெருக்கத்திற்கான விந்துக் குச்சிகள் தயார் செய்யப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டு 10 இலட்சத்து 76 ஆயிரம் உறை விந்துக் குச்சிகளைத் தயார் செய்து விநியோகம் செய்யப்பட்டது. 2500 பால் உற்பத்தியாளர் சங்கங்களில் இந்தச் செயற்கை முறைக் கருவூட்டல் பணி மூலம் 8 இலட்சத்து 9 ஆயிரம் கறவை மாடுகளுக்குச் சினையூட்டப்பட்டன. 1 இலட்சத்து 98 ஆயிரத்து 299 தரமான கலப்பினக் கன்றுகள் பிறந்து, வருங்காலப் பால் உற்பத்தியைப் பெருக்கத் தயாராகி வருகின்றன. சிகிச்சைக்கென 102 நடமாடும் கால்நடை மருந்தகங்கள், அவசர சிகிச்சைக்கென 37 தனியான கால்நடை மருந்தக வசதிகள் மூலம் 8 இலட்சத்து 60 ஆயிரம் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மாவட்ட அளவிலான 17 ஒன்றியங்களையும், சென்னையில் ஓர் மாநில அளவிலான இணையத்தையும் கொண்டு, கிராம அளவில் 8 ஆயிரத்து 921 பால் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

கடந்த நிதியாண்டில் 350 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 31-12-1997 வரை 358 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 100 சங்கங்கள் மகளிருக்கு மட்டுமே என்று அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வரும் ஆவின் நிறுவனத்தின்கீழ் இயங்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில், நீதிமன்றத் தடை ஆணை மற்றும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளால் தேர்தல் நின்று போன 14 கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் இப்போது தேர்தல் நடத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 14 பிரதம பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, அனைத்துச் சங்கங்களுக்கும், ஜனநாயகத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஜனநாயக முறையில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை மானியத்தில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட அளவிலான சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தேர்தல் தேதியை அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், மாவட்ட அளவிலான பால் கூட்டுறவு ஒன்றியங்களுக்கான தேர்தல் நடத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாக இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், பால் பண்ணைத் தொழிலை விரிவாக்கம் செய்ய புதியதாக 282 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அவற்றில் 23 சங்கங்கள் மகளிருக்கென உருவாக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிகவும் இன்றியமையாத கருவிகளான பால் கேன்கள் மற்றும் பால் பரிசோதனைக் கருவிகள் ஆகியவை வாங்குவதற்கு அந்தச் சங்கங்கள் 50 விழுக்காடு தொகையை முன்பணமாகச் செலுத்தினால் மீதமுள்ள 50 விழுக்காடு தொகையை ஊரக வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் வாங்கக்கூடிய திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆனால், அந்த 50 விழுக்காடு தொகையைக்கூடச் செலுத்த இயலாத சங்கங்களுக்கு, அந்த 50 விழுக்காடு தொகையை அரசே வழங்கும் திட்டம் முதன்முறையாக இந்த நிதியாண்டில் பகுதி 2 திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்





பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஆரம்ப பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்குக் கூடுதலாகச் செலவான காரணத்தினால், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து கட்டடங்கள் ஒப்படைப்பு செய்யப்படாமல் இருந்தன. எனவே, அந்தந்தச் சங்கங்களின் கட்டட நிதியிலிருந்து பணம் வழங்க அனுமதியளித்தும், கட்டட நிதியில் பணம் இல்லாத சங்கங்களில் பொது நிதியிலிருந்து பணம் வழங்க அனுமதி அளித்தும் கட்டப்பட்ட கட்டடங்களில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க, தக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கேகூட, மாண்புமிகு உறுப்பினர்கள் பாலின் விலையைப்பற்றிச் சொன்னார்கள். பால் கொள்முதல் செய்வதிலிருந்து பால் விற்பனை செய்வது வரை லிட்டர் ஒன்றுக்கு கூடுதலாக 2 ரூபாய் 35 காசுகள் செலவாகின்றது. அந்த வகையில்தான் நஷ்டம் ஏற்படுகிறது. அதை ஈடுகட்டும் வகையில்தான்—பால்வளத் துறையானது பால் விற்பனையில் இலாபம் ஈட்ட முடியாத நிலையில், பால் அல்லாத பிற உபபொருட்களான வெண்ணெய், நெய், நறுமணப்பால், பதினாறு வகையான ஐஸ்கிரீம், இனிப்புத் தயிர், பால்கோவா, பாலாடைக்கட்டி, மோர் மற்றும் மாம்பழச்சாறு ஆகியவற்றை விற்பனை செய்வதால் பால் உபபொருட்கள் மூலம் கணிசமான அளவில் இலாபம் ஈட்டுகிறது. கடந்த ஆண்டு மட்டும் 8 கோடி ரூபாய் இலாபம் வந்துள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆவின் பால் உபபொருட்களான யோகர்ட், அதாவது, இனிப்புத் தயிர் இப்போது நம்முடைய அதிகாரிகளின் முயற்சியால் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தடங்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கு வழங்கப்பட்டு, அவர்களின் பாராட்டினைப் பெற்றுள்ளது.

பிற்பகல் 1-00

மேலும், சென்னை மாநகரில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளான சோழா, தாஜ், ட்ரைடன்ட் மற்றும் ஃபுட்வேர்ல்ட் உணவகங்களில்

ஆவின் பால் உபபொருட்களான ஆவின் ஐஸ்கிரீம் மற்றும் யோகர்ட் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் பாலில் வைட்டமின் 'ஏ' சத்து சேர்த்து வழங்குவது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். கடந்த நிதிநிலை அறிக்கையில் 'ஏ' வைட்டமின் சேர்ந்த பால் வழங்கப்படும் என்று சொன்னோம். சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்ற அந்த அடிப்படையில் கடந்த ஆண்டிலிருந்து இந்த முறை அமல்படுத்தப்பட்டு வருவதால் இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் ஏழை, எளிய மக்களுக்கு வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவால் ஏற்படும் பார்வைக் குறைபாடுகள் போன்ற பல்வேறு நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தன் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல 1989-ல் மாதவரத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின்காரணமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் 1095 பேர், சம்பள விகிதத்தில் பணி ஆற்றியவர்கள். 1989-ல் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 370 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தார்கள். மறுபடியும், 1996-ல் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1095 பேருக்கும் வேலை கொடுக்கவேண்டும் என்று அதிரடி நடவடிக்கையாக விளம்பரப்படுத்தியபோது மறுபடியும் 326 பேர் தான் வந்தார்கள். 10 பேர் அதில் சம்பந்தப்படாதவர்கள் வந்திருந்தார்கள். ஆகவே, வந்த அனைவர் குறித்தும் பரிசீலிக்கப்பட்டு 316 பேருக்கும் வேலைவாய்ப்புத் தரப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள், தற்போது இந்தத் தொழிலாளர்கள் வேலையில் இல்லாத காலத்தை வேலையில் இருந்ததாகக் கருத்தில்கொண்டு சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார்கள். அதைக் கருணை உள்ளத்தோடு பரிசீலித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, ஆவின் நிறுவனத்திற்குக் கூடுதலாக ரூபாய் 1 கோடியே 92 இலட்சம் செலவு ஏற்பட்டாலும் சரி என்று 686 தொழிலாளர்களுக்கும் வேலை இல்லாத காலத்தையும் கணக்கில் கொண்டு சம்பளத்தை மறு நிர்ணயம் செய்து



## (எ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமிக்கின்றேன்:

திரு. ஏ.ஜி. சம்பத்
திரு. இ. புகழேந்தி
திரு. இரா. பெர்னார்டு
திருமதி காஞ்சனா கமலநாதன்
திரு. பி. இராசமாணிக்கம்
திரு. ஆர். சொக்கர்
திரு. ஓ.ஆர். இராமச்சந்திரன்
திரு. ந. கருப்பண்ண உடையார்
திரு. பா. துரைசாமி
திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
திரு. சுப. தங்கவேலன்
திரு. ம. அப்துல் லத்தீப்

பேரவை விதி 240-ன்கீழ், திரு. ம. அப்துல் லத்தீப் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கின்றேன்.

## (ஏ) அரசு உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கின்றேன்:

திரு. வி.ஜி. தனபால்
திரு. பி.என். வல்லரசு
திரு. எஸ்.கே. ராஜேந்திரன்
திரு. மு.பெ. சாமிநாதன்
திரு. மு . பன்னீர்செல்வம்
திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்
திரு. அ. மாரிமுத்து
டாக்டர் தே. குமாரதாஸ்
திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்

திரு. மு. அப்பாவு
திரு. நா. பெரியசாமி
திரு. ப. கோவிந்தன்

பேரவை விதி 249 (1)-ன்கீழ், டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

பிற்பகல் 1-25

## (ஐ) அவைக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கின்றேன் :

திரு. கு. மனோகரன்
திரு. பொ. முருகேசன்
திரு. கோ. மோகனதாசன்
திரு. கே. தங்கமணி
திரு. ஆர். சிவராமன்
டாக்டர் ஆ. ஞானசேகரன்
திரு. பெ. ஆசையன்
திரு. சி.இரா. இராமச்சந்திரன்
திரு. குத்தாலம் பி. கல்யாணம்
திரு. பா. கோபால்
திரு. இ.ஜி. சுகவனம்
திரு. அ. சுடலைமுத்து
திரு. சி. சண்முகம்
திரு. என். ஆர். அழகராஜா
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.
திரு. ப. மோகன் கந்தசாமி
திரு. வி. அய்யலுசாமி
திரு. அ. வெங்கடாசலம்

பேரவை விதி 253 (1)-ன்கீழ் திரு. கு. மனோகரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கின்றேன்.





## (ஒ) மனுக்கள் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கின்றேன்:

டாக்டர் மு. தேவராஜன்
திரு. எஸ்.எஸ். பொன்முடி
திரு. ஜி.எல். வெங்கடாசலம்
திரு. ஆ.செ. மணிக்கண்ணன்
திருமதி ஏ.ஆர். வேடம்மாள்
திருமதி வாசுகி முருகேசன்
திரு. த. நடராஜன்
திரு. பா. வேல்துரை
திரு. ரா. ஈஸ்வரன்
திரு. பி. வெங்கடசாமி
திரு. பா.மு. முபாரக்

பேரவை விதி 261 (2)-ன்கீழ் திரு. பா.மு. முபாரக் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கின்றேன்.

## (ஓ) நூலகக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான பேரவை நூலகக் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கின்றேன்:

பேரவைத் தலைவர்
டாக்டர் (திருமதி) பத்மா
திரு. எஸ்.எஸ். மணி நாடார்.
திருமதி ஆன் டி' மான்டி
திருமதி சுப்புலட்சுமி செகதீசன்
திரு. தங்கம் தென்னரசு
டாக்டர் வே. ஆல்பன்
திரு. பா. அருண்குமார்
திரு. செ. ராமச்சந்திரன்
திரு. அ.வ. அப்துல் நாசர்

[பேரவைத் தலைவர்] [1998 மே 18

பேரவை விதி 264 (3)-ன்கீழ் பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

## (ஔ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவிற்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கின்றேன்:

டாக்டர் அ. மணி
திரு. தி.ப. ஆறுமுகம்
திரு. வெ.அ. ஆண்டமுத்து
திரு. சொ. கருப்பசாமி
திரு. ரெ. செல்வம்
திரு. க. கன்னையன்
திரு. கே.சி. கணேசன்
திரு. கே.ஆர். இராமசாமி
திரு. ச. இராஜரெட்டி
திரு. மீ.அ. வைதியலிங்கம்
திரு. வெ. சின்னய்யா

பேரவை விதி 268 (2)-ன்கீழ் திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

மேற்கண்ட குழுக்கள் அனைத்தும் 29-5-1998 ஆம் நாள் முதல் அமைக்கப்படுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19-05-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

148. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் அட்டவணைகள் 1, 2 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 5-2-1998 ஆம் நாளிட்ட 40 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

149. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் அட்டவணைகள் 1,2 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 13-3-1998 ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

150. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமை விதிகளை வகுப்பது குறித்து பொதுத் (S.C.) துறையின் 6-5-1998 ஆம் நாளிட்ட 1757 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1997) 7(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

194. மானியக் கோரிக்கை எண் 10— —பால்பண்ணை வளர்ச்சி மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99, (தமிழ், ஆங்கிலம்)

195. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) கையேடு. (தமிழ், ஆங்கிலம்)

196. தமிழ்நாடு விழிப்புப் பணிக் குழுவின் 1-4-1993 முதல் 31-3-1994 வரையிலான கால அளவுக்குரிய இருபத்து எட்டாம் ஆண்டு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

197. மனுக்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1997-98.

198. மனுக்கள் குழுவின் பத்தாவது அறிக்கை, 1997-98

199. மனுக்கள் குழுவின் பதினோராவது அறிக்கை, 1997-98.





## இணைப்பு

(73 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## 1998-99 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண்.10

## பால் வழங்கு செயல் திட்டங்கள்

### முன்னுரை

பால்வளத் துறை 1958 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன் முதலாக நவீன பால்பண்ணை மாதவரத்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை நிறுவப்பட்டது. பால்வளத் திட்டங்கள் அனைத்தும் குஜராத் மாநிலத்தில் உள்ளதைப்போல், பால் கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனுடைய நிர்வாக அமைப்பு மூன்று அடுக்கு கொண்டதாகும். அடிப்படையில் (கிராம அளவில்) பால் உற்பத்தியாளர், கூட்டுறவுச் சங்கமாகவும், மத்தியில் (மாவட்ட அளவில்) பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் ஒன்றியமாகவும், மேல்மட்டத்தில் (மாநில அளவில்) ஒன்றியங்களின் இணையமாகவும் இயங்கி வருகின்றது.

### பால்வளத் துறையின் முக்கியமான குறிக்கோள்கள்

அ. நிலையான, மாறாத மற்றும் நன்றாக ஒழுங்குப்படுத்தப்பட்ட வியாபார உதவிகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமாக விலை கிடைக்க வழி செய்தல்.

ஆ. நுகர்வோர்களுக்கு பாலும் மற்றும் பாலில் இருந்து செய்யப்படும் பொருள்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

### நடவடிக்கைகள்

மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோளைக் கருத்தில் கொண்டு பின்வரும் பெரும்பான்மையான நடவடிக்கைகள் பால்வளத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அ. பால் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்களுக்கு உரிமையான கால்நடைகளுக்கு இலவசமாக கால்நடை மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் நடத்துதல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடைப் பராமரிப்பு பயிற்சி அளித்தல் இவை அனைத்தும் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்கும், அதன் மூலம் மாடுகள் தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அதிக பால் அளிக்கவும் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன.

ஆ. அதிக பால் கொள்முதல் செய்யவும், பதப்படுத்தவும், பாலை விற்பனை செய்யவும் தகுந்த அளவில் உள்ளீடு வசதிகள் அளித்தல், பால் கொள்முதல் வழிகள் அமைத்தல், பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், பால் பதப்படுத்தப்படும் ஆலைகள் அமைத்தல், நுகர்வோர் நலனுக்காக பால் தூள் (பால் பவுடர்) உற்பத்தி ஆலைகள் அமைத்தல் மற்றும் நவீன பால் விற்பனைமுறை மேற்கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்துதல் மற்றும் பால் பொருட்கள் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விணையம் பால்வளத் திட்டங்களை தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது.

மாநிலத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு அடிப்படையில் பால் பண்ணைகளால் பால் பெருக்குத்திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.—

1. கன்னியாகுமரி 2. திருநெல்வேலி 3. தூத்துக்குடி 4. இராமநாதபுரம் 5. சிவகங்கை மற்றும் 6. விருதுநகர்.

சில சிறப்புத் திட்டங்களான மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் நலத்திட்டம் முதலியன சம்பந்தப்பட்ட நிதி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பால்வளத் திட்டங்களை மாவட்ட அளவில் நிறைவேற்றிட 23 பால்பத துணைப் பதிவாளர்கள் உள்ளனர். மற்றும் கால்நடைகளுக்கு மருத்துவ வசதியும், செயற்கையான கருவூட்டல் வசதியும் அளிக்கும் வகையில் 11 பால் சேகரிப்புக் குழுக்களும், 13 நடமாடும் கால்நடை மருந்தகங்களும், பால் பெருக்குத் திட்டம் செயல்படாத (Non-operation flood area) விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

தற்போது முக்கியமாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், பதிவு செய்தல், அவைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துதல், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், 1983 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள், 1988 ஆகிய விதிகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய பணிகளை பால் பெருக்குத் துறை மேற்கொள்கிறது.

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வுறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை மேற்படிச் சங்கங்கள் சேகரிக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும் வழங்கும் பாலை பரிசோதித்து, அதன் தரத்தின் அடிப்படையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையில், பால் பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது. கொள்முதல் மற்றும் இடுபொருட்கள், மருத்துவப்பிரிவு/மருத்துவ வசதிக் குழுக்களில் இருக்கும் கால்நடை உதவி மருத்துவர்களால் பால் உற்பத்தியாளர்கள் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதி அவர்கள் வீட்டிலேயே வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த செலவில் செயற்கை முறை கருவூட்டல் வசதியும் வழங்கப்படுகின்றது. இச்சங்கங்களின் செயலாளர்களுக்கு, சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மற்றும் முதலுதவி செய்யும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு சங்கமும் தங்களுக்குச் சொந்தமாக முதலுதவிப் பெட்டிகள் வைத்துள்ளன. இக்கிராமச் சங்கங்களில் கொள்முதல் செய்யப்படும் பாலில், உள்ளூர் உபயோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக்கொண்டு, எஞ்சியுள்ள பால் மாவட்ட ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

[1998 மே 18

## பால்வளத் துறையின் முன்னேற்றம்

அரசு திட்ட நிதி உதவியுடனும் மற்றும் பிற சிறப்புத் திட்ட ஒதுக்கீட்டுடனும் கீழ்க்கண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை பால்வளத் துறை அடைந்துள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை (நுகர்வோர் கூட்டுறவுகள் மற்றும் பால் வழங்கும் கூட்டுறவுகளை உள்ளடக்கியது) | 8,921 |
| 2. | மாவட்ட ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 3. | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 26.81 இலட்சம் |
| 4. | பால் உற்பத்தி (சங்கங்களின் அளவில்) | 15.20 இலட்சம் லிட்டர்—நாள் ஒன்றுக்கு |
| 5. | பால் கொள்முதல் (ஒன்றிய அளவில்) | 12.44 இலட்சம் லிட்டர்—நாள் ஒன்றுக்கு |
| 6. | சென்னை நகரத்தில் பால் விற்பனை | 8.14 இலட்சம் லிட்டர்—நாள் ஒன்றுக்கு |
| 7. | பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை | 19 |
| | திறன். | 27.39 இலட்சம் லிட்டர்—நாள் ஒன்றுக்கு |
| 8. | குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கை | 43 |
| | திறன் | 11.51 இலட்சம் லிட்டர்—நாள் ஒன்றுக்கு |
| 9. | தானியங்கி பால் நிலையம் | 204 |



1998 மே 18]

## பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் வளர்ச்சி

1996-97-ல் 315 சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-3-1997 வரை 487 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1996-97ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டச் சங்கங்களில் 31-3-1997 வரை 185 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 350 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்ட குறியீட்டிற்கு 31-12-1997 வரை 358 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 31-12-1997 வரை 100 சங்கங்கள் பெண்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

பால் கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு அம்சங்களும், புள்ளி விவரங்களும்/தமிழகத்தில் உள்ள ஆரம்ப பால் கூட்டுறவுச் சங்கங்கள்/ ஒன்றியங்கள்

| | | |
|---|---|---|
| அ. | பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | 8,848 |
| ஆ. | பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் | 8 |
| இ. | கூட்டுறவு பால்பண்ணை | 1 |
| ஈ. | பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 63 |
| உ. | கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியங்கள் | 1 |
| ஊ. | மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 |
| எ. | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (மாநில அளவு இணையம்) | 1 |

## பால் பண்ணை வளர்ச்சித் துறையினால் செயல்படுத்தப்படும் தொடர் திட்டப் பணிகள்

1. திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்

பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களில் இருக்கும் பால்பண்ணைகளுக்கு இணையாக உள்ளீட்டு வசதிகளை திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்படுத்தப்படுவதற்கென

[1998 மே 18

ரூ.7.05 கோடி திட்ட மதிப்புடன் கூடிய ஒரு பெரிய ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், புதுடில்லி ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்திற்கு, இக்கழகம், திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம் கடனாக வழங்கும். மீதம் 30 சதவிகிதத்தை, மாநில அரசு மானியமாகவும் பங்கீட்டுத் தொகையாகவும் வழங்கும். இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

1. 651 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

2. மேலும் கூடுதலாக 73,000 கால்நடைகளைக் கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் கொண்டு வருதல்.

3. 651 கூட்டுறவுச் சங்கங்களுக்கு கால்நடை மருத்துவ வசதி செய்தல்.

4. 3 பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.

5. தற்போதுள்ள திருநெல்வேலி பால்பண்ணையின் கொள்திறனை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக உயர்த்துதல்.

6. நாளொன்றுக்கு 73,000 லிட்டர் பால் விற்பனை செய்தல். இத்திட்டம் 53,000 விவசாய உறுப்பினர்களுக்கு பயன்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. பால் கொள்முதல் நாளொன்றுக்கு 75,000 லிட்டருக்கு உயர்த்தப்படும்.

இத்திட்டத்திற்குண்டான தொகை ரூ.705 இலட்சங்கள் அனைத்து மாவட்ட கூட்டுறவுப் பால் ஒன்றியத்திற்கும் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்டத் திட்டம் எல்லாவிதத்திலும் முடிவடைய 31-3-1997 வரை கால அளவு நீட்டிப்பு அரசு செய்துள்ளது. மேற்படித் திட்டம் தற்போது முடிவடைந்துள்ளது.

**2. விருதுநகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டம்**

ஒருங்கிணைந்த பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பால் பண்ணை அமைப்பதற்கு ரூ.465.50 இலட்சம் திட்ட மதிப்புடன் திட்டம் ஒன்று தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட மதிப்பீட்டில் 70 சதவிகிதம், ரூ.325.85 இலட்சங்கள், தேசியக்



1998 மே 18]

கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் கடனாகவும், 30 சதவிகிதம் ரூ.139.65 இலட்சங்கள், அரசு மானியமாகவும் பங்குத் தொகையாகவும் கருதி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பங்குத் தொகையான ரூ.139.65 இலட்சங்களை அரசு விடுவித்துள்ளது. 70 சதவிகிதம், ரூ.325.85 இலட்சங்களை அரசு விடுவித்துள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ரூ.251.986 இலட்சம், 31-3-1997 வரை நிதியினை அளித்துள்ளது. ஆகமொத்தம் இத்திட்டத்திற்கு ரூ.465.50 இலட்சங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் இன்னும் சில பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளதால், இத்திட்டத்தை 31-3-1999 வரை நீட்டிக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கறவை மாடுகள் மானியத் திட்டம்**

ஆதிதிராவிடர், கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு மானியத்துடன் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசு மற்றும் தாட்கோ நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் ஒருங்கிணைந்த முகவர்களாக இருந்து, செயல்படுத்தி வருகின்றன. 1997-98 ஆம் நிதியாண்டில் இத்திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது:

| | திட்டம் | இலக்கு எண்ணிக்கை கறவை மாடுகள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நலத் திட்டம் | 2,666 | ரூ.80.00 இலட்சம் |
| 2. | ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிறிஸ்துவர்களாக மதம் மாறியவர்கள் | 50 | ரூ.1.50 இலட்சம் |
| 3. | தாட்கோ | 13,000 | ரூ.390.00 இலட்சம் |
| 4. | கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டம் | 2,000 | ரூ.213.60 இலட்சம் |

[1998 மே 18

### பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள்

தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த 8,607 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு ஆணை எண் 160 கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை நாள் 27-9-1996-ன்படி அனைத்து உறுப்பினர்களும் தேர்தலில் போட்டியிடவும், வாக்களிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டு, நீதிமன்றத் தடை ஆணை மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளால் தேர்தல் நின்று போன 17 சங்கங்கள் தவிர அனைத்துச் சங்கங்களுக்கும், பிப்ரவரி 1997-ல் தேர்தல்கள் நடத்தப்பட்டு தற்போது ஜனநாயக முறைப்படி அனைத்து உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகக் குழுவினரால் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவிலான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும், தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட உள்ளன.

### பகுதி 2 திட்டங்கள்

1998-99 பகுதி 2 திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களை. மொத்த ரூ.25.98 இலட்சங்கள் செலவில் செயல்படுத்தவும், இச்செலவினை 1998-99 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் சேர்க்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு உள்ளீட்டு வசதி அமைத்துத் தருதல், அதாவது பால் கேன்கள் மற்றும் பால் பரிசோதனை கருவி (மில்கோ டெஸ்டர்) வழங்குவதற்கு ரூ.10.50 இலட்சங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பால்பண்ணை குடியிருப்புகளில் அமைந்துள்ள குறுக்குச் சாலைகளை செப்பனிடுவதற்காக ரூ.7.00 இலட்சங்கள் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாதவரம் பால்பண்ணை குடியிருப்புகள் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிக்காக ரூ.5.22 இலட்சங்கள் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1998 மே 18]

பால்வளத் துறை நிர்வாக அலுவலக வளாகத்திற்கு வருடாந்திர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பள்ளிப் பேருந்து அலுவலக கார் மற்றும் ஈப்பு ஆகியவற்றை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கான கொட்டில் வசதிகள் செய்ய ரூ.1.30 இலட்சங்கள் வழங்கவும், துறை தலைமை அலுவலகத்தில் எலக்ட்ரானிக் தொலைபேசி மற்றும் பேக்ஸ் (Fax) வசதிகள் அளிக்க ரூ.1.96 இலட்சங்கள் செலவிடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாள் முதல் பால் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல், பால் மற்றும் பால் பொருட்களை விநியோகம் செய்தல் ஆகிய வணிக சம்பந்தமான நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் செய்து வருகிறது. தேசிய பால்வள வாரிய நிதி உதவியுடன் இவ்விணையம் கீழ்க்காணும் 23 மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால்வள மேம்பாட்டு நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகின்றது:

1. சென்னை
2. காஞ்சிபுரம்
3. திருவள்ளூர்
4. விழுப்புரம்
5. கடலூர்
6. வேலூர்
7. திருவண்ணாமலை
8. தர்மபுரி
9. சேலம்
10. நாமக்கல்
11. ஈரோடு
12. கோயம்புத்தூர்
13. மதுரை
14. தேனி
15. திண்டுக்கல்

16. நீலகிரி
17. திருச்சிராப்பள்ளி
18. கரூர்
19. பெரம்பலூர்
20. தஞ்சாவூர்
21. திருவாரூர்
22. நாகப்பட்டினம்
23. புதுக்கோட்டை

பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால் கொள்முதல் மற்றும் விநியோகத்தை அந்தந்த மாவட்ட ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஆனால் கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தத் தேவைப்படும் உறை விந்து தயாரிக்கத் தேவையான பொலிகாளைப் பண்ணைகள், உறை விந்து நிலையங்கள் போன்ற பொதுவான வசதிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அமைத்து நிர்வகித்து வருகிறது. தற்சமயம் இவ்வணையத்தின்கீழ் அம்பத்தூர், மாதவரம், சோழிங்கநல்லூர் மற்றும் அயனாவரம் ஆகிய நான்கு இடங்களில் பால்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அம்பத்தூர் பால்பண்ணை நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. 01.05.96 முதல் இயங்கி வரும் சோழிங்கநல்லூர் பால்பண்ணையும், நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. மாதாவரம் பால்பண்ணையும் நாளொன்றுக்கு 1.75 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்டது. இப்பால் பண்ணைகள் பாலைப் பதப்படுத்தி பாலித்தின் பைகளில் நிரப்பி சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விநியோகம் செய்து வருகின்றன. அயனாவரத்தில் நாளொன்றுக்கு 12,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் கொண்ட பால்பண்ணையில் பால் பொருட்களான சுவையூட்டிய தயிர் (யோகர்ட்), ஐஸ்கிரீம், பால்கோவா ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒன்றியங்களை மேற்பார்வையிட்டு ஒருங்கிணைந்து வழி நடத்தி அவற்றிற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை இணையம் நல்குகிறது. ஒன்றியங்களின் சார்பாக திட்டமிடல், பண்ணைகள் மற்றும்



பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் ஆகிய பணிகளையும் இயந்திரச் சாதனங்கள் நிறுவி உற்பத்தியைத் தொடங்கி வைக்கும் "டர்ன்கி" (Turn Key) அடிப்படையில் இணையம் மேற்கொள்கிறது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பாலையும், பால்பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக் கட்டி போன்ற பால்பொருட்களையும், இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி செய்கிறது.

**மாவட்ட ஒன்றியங்கள் வாரியாக கொள்முதல் செய்யப்பட்ட பாலின் விவரம்.**

| மாவட்டம் | 1997-98 (31-12-1997 முடிய) நாளொன்றுக்குச் சராசரியாக (ஆயிரம் லிட்டர்கள்) |
|---|---|
| 1. காஞ்சிபுரம் - திருவள்ளூர் | 27 |
| 2. விழுப்புரம் - கடலூர் | 97 |
| 3. வேலூர் - திருவண்ணாமலை | 210 |
| 4. தர்மபுரி | 119 |
| 5. சேலம் - நாமக்கல் | 225 |
| 6. ஈரோடு | 132 |
| 7. கோயம்புத்தூர் | 83 |
| 8. நீலகிரி | 21 |
| 9. மதுரை-தேனி | 72 |
| 10. திண்டுக்கல் | 28 |
| 11. திருச்சி-கரூர்-பெரம்பலூர் | 131 |
| 12. தஞ்சாவூர்-திருவாரூர்-நாகப்பட்டினம் | 11 |
| 13. புதுக்கோட்டை | 5 |
| 14. காரைக்குடி - சிவகங்கை | 15 |
| 15. விருதுநகர் | 8 |
| 16. திருநெல்வேலி | 51 |
| 17. கன்னியாகுமரி | 9 |
| | 1244 |

[1998 மே 18

## பால் கொள்முதல் விலை (உற்பத்தியாளர்களுக்கான விலை)

பால் உற்பத்திக்குத் தேவைப்படும் தீவனம் மற்றும் இடுபொருட்கள் மற்றும் கால்நடைப் பராமரிப்புச் செலவின் உயர்வை கருத்திற்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கொள்முதல் விலை 7-04-1998 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

| காலம் | எருமைப் பால் (கொழுப்புச் சத்து கிலோ ஒன்றுக்கு) ரூ. | ஒரு லிட்டரின் விலை ரூ. | பசும்பால் கிலோ (மொத்த திடப் பொருள் கிலோ ஒன்றுக்கு) ரூ. | ஒரு லிட்டரின் விலை ரூ. |
|---|---|---|---|---|
| 07-04-1998 முதல் இன்று வரை | 135.00 -லிருந்து 156.28 | 9.45 -லிருந்து 10.94 | 57.74 -லிருந்து 69.23 | 7.51 -லிருந்து 9.00 |

## விற்பனை விலை

பால் உற்பத்தியாளர்களுக்கு கொள்முதல் விலை உயர்வு, மின் கட்டணம், பெட்ரோலியப் பொருட்கள், பாலித்தின் பை தயாரிப்பதற்குத் தேவையான பாலித்தின் பிலிம் விலை அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பால் விற்பனை விலை 16-04-1998 முதல் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது :—

| | பாலித்தின் பைகளில் (லிட்டர் ஒன்றுக்கு) | தானியங்கி நிலையங்களில் (லிட்டர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| பால் அட்டை | ரூ.10.50 | ரூ.10.50 |
| ரொக்கத்திற்கு | ரூ.11.00 | ரூ.10.50 |

மேற்படி விலையேற்றத்திற்குப் பிறகு பெரும்பாலான மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது, பால் விற்பனை விலை தமிழ்நாட்டில் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



1998 மே 18]

## கால்நடைத் தீவன உற்பத்தி ஆலை

மூன்று கால்நடைத் தீவன உற்பத்தி ஆலைகள் கீழ்க்கண்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன :

| மாவட்ட ஒன்றியம் | தீவன ஆலை அமைந்துள்ள இடம் |
|---|---|
| 1. காஞ்சிபுரம்-திருவள்ளூர் | மாதவரம் |
| 2. ஈரோடு ஒன்றியம் | ஈரோடு |
| 3. மதுரை ஒன்றியம் | கப்பலூர் |

இவ்வாலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும்.

இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் தீவனங்கள் பெல்லட் (Pellet) மற்றும் 'மேஷ்' (Mesh) வகைகள் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு, ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது. மேலும் இத்தீவனம் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும், மாவட்ட கால்நடைப் பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கால்நடைத் தீவன ஆலைகளில் 1997-98 ஆம் ஆண்டின் தீவன உற்பத்தி மற்றும் விற்பனை:

| இருப்பிடம் | உற்பத்தி | 1997-98 31-12-1997 முடிய விற்பனை தொடர் இருப்பு உள்பட |
|---|---|---|
| | (டன்களில்) | |
| சென்னை மாதவரம் | 1628 | 1767 |
| ஈரோடு | 10840 | 10984 |
| கப்பலூர் | 2533 | 2520 |
| மொத்தம் | 15001 | 15271 |

[1998 மே 18

## பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை

சென்னை பால்பண்ணைகளால் 1997-98 ஆம் ஆண்டு (31-12-1997 முடிய) நாளொன்றுக்கு சராசரியாக 8.14 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டது. 509 பால் விற்பனை நிலையங்கள், 34 பாலகங்கள் 204 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் மற்றும் 277 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் (எப்.ஆர்.பி.டேங்க்) மூலமாக முறையான விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நிறுவனங்களுக்கு மொத்தமாகவும், தனி வாடிக்கையாளர்களுக்கு பாலித்தின் பைகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. சென்னையிலும், சென்னையைச் சுற்றிலும் 34 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான பாலை நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன.

### பால் பொருட்கள் விற்பனை விவரம் பின்வருமாறு :—

| இனங்கள் | 1997-98 (31-12-1997 முடிய) |
|---|---|
| நாளொன்றுக்கு சராசரி விற்ற பால் (லட்சம் லிட்டர்களில்) | 8.14 |
| வெண்ணெய் (டன்னில்) | 694.00 |
| நெய் (டன்னில்) | 353.00 |
| பால்பொடி (டன்னில்) | 6.00 |

## ஐஸ்கிரீம் மற்றும் யோகர்ட் விற்பனை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆவின் யோகர்ட் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனையை பெருக்கிட பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இம்முயற்சிகள் காரணமாக பெருமை வாய்ந்த வியாபார நிறுவனங்களான ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் போன்ற நிறுவனங்கள் முதன்முதலாக ஆவின் யோகர்ட்டை வாங்கத் துவங்கியுள்ளன. இந்தியன் ஏர்லைன்ஸில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சர்வீசுகளில் ஆவின் சிறப்புவகை யோகர்ட் வழங்கப்படுகிறது. புகழ் வாய்ந்த ஓட்டல்களான டிரைடன்ட், தாஜ்கொரமண்டல், சோழா மற்றும் புட்வேர்ல்ட் தொடர் உணவகங்களும் வளர்ந்து வரும் ஆவின் வாடிக்கையாளர்களின் குடும்பத்தில் இணைந்துள்ளன.



1998 மே 18]

அதேபோன்று சமீபகாலத்தில் தனியார் துறை நிறுவனங்களின் கடுமையான போட்டிக்கிடையே ஆவின் ஐஸ்கிரீம் ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் நுழைவதில் வெற்றி கண்டுள்ளது.

இணையம் தரமானப் பொருள்களை சந்தையில் நிலவும் விலையை விட குறைந்த விலையில் அளிக்க எல்லா முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இணையத்தின் இக்கொள்கை போட்டியாளர்களின் சந்தைப் பங்கை இணையம் தொடர்ந்து பெற உதவியுள்ளது.

## நுகர்வோர் நலன் பாதுகாப்பு

நுகர்வோர் குறை மற்றும் ஆலோசனைகளைக் கேட்டறிவதன் மூலம் நுகர்வோரையும் பால் விநியோகத்தில் ஈடுபடச் செய்யும் ஒரு திட்டம் தானியங்கி நிலையங்களில் நடைபெறும் பால் விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்கென வகுக்கப்பட்டது. அதன்படி 24 மணி நேரமும் இயங்கும் புகார் பிரிவினைத் தவிர, நுகர்வோர் தங்களது குறைகள் மற்றும் ஆலோசனைகளை எழுத்து மூலம் தெரிவிக்க ஏது பாக, அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்ட உள் அஞ்சல் தாள்களில் விற்பனை நிலையம் மற்றும் விற்பனையாளரது செயல்பாடு குறித்த விளக்கங்கள் அச்சிடப்பட்டு, அதனை வெவ்வேறு கோணங்களில் மதிப்பீடு செய்யக்கோரி, பால் வாங்கிச் செல்ல வரும் வாடிக்கையாளர்களுக்கு, அனைத்து தானியங்கி நிலையங்களிலும் விநியோகிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களிடமிருந்து மதிப்பீடு செய்யப்பட்டு, திரும்பப் பெறப்பட்ட அஞ்சல் தாள் படிவங்களின் விவரங்கள் கணிப்பொறிகளில் பதிவு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது.

நுகர்வோர்களது மதிப்பீடு, ஒரு தானியங்கி நிலையச் செயல்பாடுகள் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டினை விட குறைவாக இருந்தால், அந்த விற்பனையாளரது ஒப்பந்தம் இரத்து செய்ய தகுதியுடையதாக கருதப்படுகிறது. மற்ற தானியங்கி நிலையங்களில் தவறுகள் ஏதும் நடக்காமல் இருக்க இணையத்தின் விழிப்புத் துறையினால் தொடர்ந்து திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

## மூன்றாம் பால் பெருக்குத் திட்டம்

மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் 23 மாவட்டங்களில் தேசிய பால்வள வாரியம் மூலமாக உலக வங்கி நிதியுதவி பெறப்பட்டு

செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ரூ.88.23 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு 1996 ஆம் வருடம் மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. இத்திட்டத்தின்கீழ் பல முக்கிய திட்ட வேலைகள் முடிவடைந்துள்ளன. புதிய பால் உற்பத்தியாளர் உறுப்பினர்கள் சேர ஊக்குவித்தல், கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் குளிரூட்டும் திறனை அதிகப்படுத்துதல், மாவட்ட அளவில் விற்பனை மற்றும் சென்னை நகரில் விற்பனை முன்னேற்றம் அடையச் செய்தல் போன்றவை இத்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும்.

மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தில் முடிவடைந்த திட்ட விவரங்கள் பின்வருமாறு:

| மாவட்டம் | இடம்/திட்ட விவரம் | கொள்ளளவு நாளொன்றுக்கு (ஆயிரம் லிட்டர்களில்) | செலவுகள் மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. இணையம் | 3வது பால் பண்ணை சோழிங்கநல்லூர் (புதியது) | 400 | 2480.00 |
| | அம்பத்தூர் பால்பண்ணை | 300-400 | 161.98 |
| 2. விழுப்புரம் | விழுப்புரம் பால் குளிரூட்டும் நிலையம் பால் பதனிடும் ஆலையாக மாற்றும் | | 289.97 |
| | குளிரூட்டும் திறன் | 100 | |
| | பால் பதப்படுத்தும் திறன் | 50 | |
| 3. திருவண்ணாமலை | திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் | 30-100 | 99-94 |
| 4. வேலூர் | ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையம் | 30-50 | 36-26 |
| | அணக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம் | 30-60 | 28.44 |
| | கொடக்கல் பால் குளிரூட்டும் நிலையம் (புதியது) | 30 | 72.69 |





| மாவட்டம் | இடம்/திட்ட விவரம் | கொள்ளளவு நாளொன்றுக்கு (ஆயிரம் லிட்டர்களில்) | செலவுகள் மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 5. தர்மபுரி | கிருஷ்ணகிரி பால்பண்ணை | 100-150 | 37.46 |
| | தர்மபுரி பால் குளிரூட்டும் நிலையம் | 40-50 | 24.83 |
| 6. சேலம் | சேலம் பால்பண்ணை | 200-300 | 206.25 |
| | ஆத்தூர் பால் குளிரூட்டும் நிலையம் | 50-80 | 64.29 |
| 7. நாமக்கல் | நாமக்கல் பால் குளிரூட்டும் நிலையம் | 30-50 | 134.27 |
| 8. மதுரை | மதுரை பால்பண்ணை | 150-200 | 104.44 |
| 9. ஈரோடு | ஈரோடு பால்பண்ணை | 30 மெட்ரிக் டன் பால் பவுடர் ஆலை | 807.82 |
| | சங்கராண்டாம் பாளையம் பால் குளிரூட்டும் நிலையம் | 30-50 | 55.40 |
| 10. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் பால்பண்ணை | 100-200 | 158.73 |
| | சண்முகாபுரம் பால் குளிரூட்டும் நிலையம் | 10-50 | 56.52 |
| | சுல்தான்பேட்டை பால் குளிரூட்டும் நிலையம் | 10-50 | 54.87 |
| 11. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி பால்பண்ணை (புதியது) | 150 | 762.11 |
| 12. பெரம்பலூர் | பெரம்பலூர் பால் குளிரூட்டும் நிலையம் | 8-50 | 119.05 |
| 13. கரூர் | கரூர் பால் குளிரூட்டும் நிலையம் | 8-30 | 83.88 |
| 14. திருவள்ளூர் | காக்களூர் பால்பண்ணை | 30-50 | 15.43 |

[1998 மே 18

| மாவட்டம் | இடம்/திட்டம் விவரம் | கொள்ளளவு நாளொன்றுக்கு (ஆயிரம் லிட்டர்களில்) | செலவுகள் மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 15. காஞ்சிபுரம் | சானூர் பால் குளிரூட்டும் நிலையம் (புதியது) | 30 | 53.25 |
| 16. தேனி | தேனி பால் குளிரூட்டும் நிலையம் | 10-50 | 107.00 |

## உள்ளீட்டுப் பணி

### பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்

இவ்வாண்டு 1997-98 (டிசம்பர் 1997 முடிய) மாவட்ட ஒன்றியங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 12.44 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது.

பால் உற்பத்தியை பெருக்குவதற்காக 1997-98ல் (டிசம்பர் 1997 முடிய) 316 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டு 13.18 இலட்சம் பசு மற்றும் எருமை கறவை இனங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் உறை விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் செய்ய தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடைத் தீவனமும், பசுந்தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகள் மூலம் சிகிச்சையும், வெக்கை, கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் கிராம அளவில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் மூலம் செய்யப்படுகிறது. 1997-98 (டிசம்பர் 1997 முடிய) உறைவிந்து மூலம் 6.74 இலட்சம் செயற்கை முறை கருவூட்டல்கள் செய்யப்பட்டன.

1997-98 (டிசம்பர் 1997 முடிய) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், நல்ல தேர்ச்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் 6.02 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தன. கால்நடை உரிமையாளர்களிடமிருந்து வரும் அவசர கால அழைப்பிற்காக, அவசர



1998 மே 18]

கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுத்தப்பட்டன. 1997-98 ஆம் ஆண்டு (டிசம்பர் 1997 முடிய) 100 நடமாடும் கால்நடைப் சிகிச்சைப் பிரிவுகளும் 37 அவசர கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டன.

## உள்நாட்டுக் கால்நடைகளின் பால் வழங்கும் திறனை மேம்படுத்தும் பணி

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக 1997-98 ஆம் ஆண்டு (டிசம்பர் 1997 முடிய) 71,785 வீரியமுள்ள கிடாரிக் கன்றுகள் பிறந்துள்ளன. உதகமண்டலத்திலுள்ள கருவூல நிலைய ஜெர்சி பொலிகாளை பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும், ஈரோட்டிலுள்ள எருமை இன பொலிகளை உறைவிந்து நிலையத்திலும் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### அ. கருவூட்டல் மைய பொலிகாளை பண்ணை, உதகை

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் உதகமண்டலத்தில் கருவூட்டல் நிலைய ஜெர்சி பொலிகாளைப் பண்ணை ஒன்றை பராமரித்து வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் தேசிய அளவில் இயங்கி வரும் அனைத்து பொலிகாளைப் பண்ணைகளிலும் இது இரண்டாவது இடத்தில் உள்ளது என தேசிய பால்வள வாரியத்தின் அறிக்கை தெரிவிக்கிறது. இப்பண்ணை இலாபத்தில் இயங்கி வருவதோடு, இப்பண்ணையில் அமைந்துள்ள உறைவிந்து நிலையம் அகில இந்திய அளவில் பெருமைப்படும் அளவில் புகழ் வாய்ந்தது.

1997-98 ஆம் ஆண்டு (டிசம்பர் 1997 முடிய) உதகமண்டலத்தில் உள்ள கருவூட்டல் ஜெர்சி பொலிகாளைப் பண்ணையில் 7.66 இலட்சம் உயர் இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஈரோட்டில் உள்ள எருமை இன உறைவிந்து நிலையத்தில் 1.20 இலட்சம் முர்ரா எருமை இன உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்பட்டன.

## வம்சாவழி மூலம் பொலிகாளைகள் தேர்வுத் திட்டம்

பால் உற்பத்தியை மேம்படுத்த நல்ல தரமான கலப்பின பொலிகாளைகளை தேர்ந்தெடுப்பதற்கான வம்சாவழி மூலம் பொலிகாளைகளை தேர்வு செய்யும் திட்டம் வேலூர், தர்மபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எந்த காளைக்குப்

[1998 மே 18

பிறந்த கிடாரிக் கன்றுகள் பசுவாகி, மற்ற காளைக்குப் பிறந்த கிடாரி கன்றுகள் பசுவாகி கொடுக்கும் பாலைவிட அதிகமாகக் கொடுக்கிறதோ அந்தக் காளை சிறந்த காளை என தேர்வு செய்யப்படும். இதுவரை முதல் குழுவில் தேர்வு செய்வதற்காக எடுத்துக் கொண்ட பொலிகாளைகளில் சில சிறந்த பொலிகாளைகள் என்று நிரூபிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## கால்நடைப் பராமரிப்புத் துறையில் செயலாக்கப் பணிகள்

பால் உறப்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை இனவிருத்தி வசதிகளை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களால் செய்யப்படாத இடங்களில் மேற்குறிப்பிட்ட பணிகளை கால்நடைப் பராமரிப்புத் துறை செய்து வருகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை கால்நடை மருத்துவம் மற்றும் இனவிருத்தி வசதிகளை பரவலாக உள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம், கிளை நிலையங்கள் ஆகியவை மூலம் வழங்குகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரி மற்றும் வெக்கை நோய் ஆகிய நோய்கள் கால்நடைகளுக்கு வராமல் தடுப்பதற்காக, தடுப்பு ஊசிகளை கால்நடைகளுக்கு போடுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் நோய் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு புலனாய்வு செய்து நோயை கண்டுபிடிக்க உதவுகிறது.

## இந்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த பால் பண்ணை வளர்ச்சித் திட்டம்

மைய அரசு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1995-96, 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பால்பண்ணை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த ரூ.336.63 இலட்சத்தை மானியமாக வழங்கியது. இத்திட்டத்தில் கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கும் அவைகளுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கும், பால் உற்பத்தியாளர்களின் கறவைகளுக்கு சிகிச்சை மற்றும் கருவூட்டல் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள், பால்பண்ணைகளுக்குத் தேவையான உபகரணங்கள் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பதற்குத் தேவையான, பாலை பாலித்தின்



1998 மே 18]

பைகளில் அடைக்கும் இயந்திரம் பால் டெப்போக்கள், குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவைகளை வாங்குவதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் புதியதாக 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 30,000 பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள மணப்பாறையில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறையில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறனுடன், அதை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறன் கொண்டதாக விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில் புதியதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் சுமார் ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு இதற்கு மேல் தேவைப்படும் நிதியை, திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் தனது நிதியிலிருந்து செலவிடும். 1998-99 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் இக்குளிரூட்டும் நிலையம் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய பால்வள வாரியத்திடமிருந்து 100% கடனாக பெற்று செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள்

தர்மபுரி மாவட்டத்திலுள்ள மொரப்பூரில் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறனுடன் அதை நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பாலை குளிரூட்டும் திறன் கொண்டதாக விரிவாக்கம் செய்யக்கூடிய வகையில் ஒரு புதிய குளிரூட்டும் நிலையம் சுமார் ரூ.183 இலட்சத்தில் அமைக்கவும், சென்னையில் சுமார் ரூ.4 கோடி செலவில் ஒரு பால் உபபொருட்கள் பண்ணை அமைக்கவும், மதுரை பால்பண்ணையில் ரூ.82.50 இலட்சத்தில் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையும், தேனி பால் குளிரூட்டும் நிலையத்தில் ரூ.23.00 இலட்சத்தில் ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையும் அமைக்க ஆனந்திலுள்ள தேசிய பால்வள வாரியத்திற்குக் கருத்துரு, நிதி உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

[1998 மே 18

*தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவன நிதி உதவியுடன் அம்பத்தூர் பால் பண்ணையில் பாலைக் குளிர்விக்க பிரியான் வாயுவுக்குப் பதிலாக அம்மோனியா வாயுவை உபயோகிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் அமைத்தல்*

தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் அம்பத்தூர் பால் பண்ணையில் பாலைக் குளிர்விக்க தற்போது உபயோகப்படுத்தப்படும் பிரியான் வாயுவிற்குப் பதிலாக அம்மோனியா வாயுவை உபயோகப்படுத்துவதற்குத் தேவையான சாதனங்கள் அமைக்க ரூ.107 இலட்சத்திற்கு ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி ரூ.107 இலட்சத்தில் 70 விழுக்காடு அதாவது ரூ.74.90 இலட்சத்தை தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் கடனாக வழங்கியது. மீதமுள்ள 30 விழுக்காடு ரூ.32.10 இலட்சம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

மார்ச் 1998 இறுதியில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு இத்திட்டம் முழுமையாகச் செயல்பட்டு வருகிறது.

**வைட்டமின் ஏ சத்தை பாலில் சேர்த்தல்**

வைட்டமின் ஏ சத்து குறைவின் காரணமாக கண்பார்வைக் குறைவு ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இக்குறையினைத் தவிர்க்க இவ்விணையம் சென்னை பெருநகரில் மத்திய அரசின் உதவியுடன் 13-06-1997 முதல் பாலில் வைட்டமின் ஏ சத்து கலந்து விநியோகம் செய்து வருகிறது.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையானது, தேசியப் பால்பெருக்கு வாரியத்தின் ஆலோசனைப்படி தமிழகத்திலுள்ள அனைத்து வகையான பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொண்டிருந்த தணிக்கை வாரியம் கலைக்கப்பட்ட பின்னர் 1-10-1987 முதல் தொடங்கப்பட்டு தனித்துறையாகச் செயல்பட்டு வருகிறது. இத்துறை 8921 தொடக்க நிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் கணக்குகளை ஆண்டுதோறும் தணிக்கை செய்து வருகிறது.



1998 மே 18]

**தணிக்கை முன்னேற்றம்**

**அ. தொடக்க நிலை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 1996-97 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

மொத்தமுள்ள 8921 தொடக்க நிலை பால் உற்பத்தியாளர்/நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களில் 31-1-1998 முடிய 7757 சங்கங்களில் 1996-97 ஆம் ஆண்டிற்குத் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. தணிக்கை புத்தகங்கள் நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ளதால், மீதமுள்ள 1164 சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ள இயலவில்லை.

**ஆ. மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை**

**1. 1995-96 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

மொத்தமுள்ள 17 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் 15 ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றததில் உள்ளது.

**2. 1996-97 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

1996-97 ஆம் ஆண்டிற்கான தணிக்கை காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தவிர எஞ்சிய 15 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

**இ. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் 1991-92 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச்சான்று வழங்கப்பட்டுவிட்டது. 1992-93 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைமீது சோதனைத் தணிக்கை முடிக்கப்பட்டு சோதனைத் தணிக்கையின்போது காணப்பட்ட குறைகள் இணையத்திற்குத் தொடர்புறுத்தப்பட்டுள்ளன. குறை நிவர்த்தி அறிக்கை எதிர்நோக்கப்படுகின்றது. 1993-94 ஆம் ஆண்டு அறிக்கையின்மீது சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில்

[1998 மே 18

உள்ளது. இச்சோதனைத் தணிக்கை முடிக்கப்பெற்றபின் பட்டயக் கணக்கரால் தயாரிக்கப்பட்ட 1994-95 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கையின்மீது சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படும். 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கையும் அரசினால் அனுமதிக்கப்பட்ட பட்டயக் கணக்கர்களால் மேற்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

**அரசு வருவாய்**

1997-98 ஆம் நிதியாண்டில் நிதி நிலையறிக்கையில் ரூ.86.50 இலட்சம் வருவாய் வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1997-98 ஆம் நிதியாண்டில், இவ்விலக்கு மிஞ்சப்பட்டு 31-3-1998 முடிய ரூ. 1,07,59,000/- வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.



1998 மே 18] [திரு. க. சுந்தரம்]

மாண்புமிகு கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்தில் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது, சென்னையில் உள்ள 204 தானியங்கி பால் வழங்கு நிலையங்களிலும் 295 பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாக சென்னை மாநகர மக்களுக்கு 3 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் இந்த 2 ஆண்டு காலத்தில் எப்படி நேர்மையான, தூய்மையான ஆட்சி நடைபெறுகிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் நமது ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து, அளவு குறையாமல், தரமான பால் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தத் துறை கண்டிப்போடு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடுத்துக்காட்டாக, 1991 முதல் 1996 வரையிலான கடந்த கால ஆட்சியில், 5 ஆண்டு காலத்தில், அபராதத் தொகையாக 17 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. ஆனால், நமது ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 13-5-1996 முதல் 31-3-1998 வரையிலான ஒரு வருடம் பத்து மாத காலத்தில் சோதனை மிகவும் அதிகரிக்கப்பட்டு 45 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த கால ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் 17 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டது, ஆனால் நமது ஆட்சியில் ஒரு ஆண்டு 10 மாத காலத்தில் மட்டும் 45 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டது. அவ்வளவு கண்டிப்பாகச் செயல்பட்டு வருவதைத்தான் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்ட கலப்படம் மற்றும் அளவு குறைந்து பால் ஊற்றுதல் ஆகிய குற்றங்களுக்காக 1993 முதல் 1996 மே மாதம் வரையிலும் 67 சலுகைதாரர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. 1996 ஜூன் முதல் 1998 மார்ச் வரை ஒரு வருடம் 9 மாத காலத்தில் 93 சலுகைதாரர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுகர்வோரின் கருத்தை அறிய, சுமார் 50 ஆயிரம் ரூபாய் செலவில் கருத்துக் கணிப்பு அஞ்சலட்டை வழங்கப்பட்டு, அவர்கள்தம் குறை

[திரு. க. சுந்தரம்] [1998 மே 18

நிறைகளைக் கண்டறிந்து சென்னையில் பால் வினியோகம் செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே, முதன்முதலாக, தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ், ஆவின் நிறுவனம் தொடர்பான மக்கள் உரிமை சாசனக் கையேடுகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதவரம் பால் பண்ணைக் குடியிருப்புப் பற்றிய அறிவிப்புகள்: மாதவரம் பால் பண்ணைக் குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள குறுக்குச் சாலைகள், நீண்ட நெடுங்காலமாகக் கேட்பாரற்றுக் கிடந்தன. அவற்றைச் செப்பனிட 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாதவரம் பால் பண்ணைக் குடியிருப்புகள் 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் பழுதுபார்க்கப்படும். மாதவரம் பால் பண்ணை ஆணையர் அலுவலகத்தில் 1 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் எலக்ட்ரானிக் தொலைபேசி மற்றும் ஃபேக்ஸ் வசதிகள் செய்யப்படும். மாதவரம் பால்வளத் துறையைச் சார்ந்த வாகனங்களைப் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க 1 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் கொட்டில் வசதிகள் செய்யப்படும்.

பிற்பகல் 1-05

கறவை மாடுகள் மானியத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மதம் மாறிய ஆதிதிராவிட கிறிஸ்துவர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க ஒரு மாட்டிற்கு 6 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட்டு 3 ஆயிரம் ரூபாய் மானியமாகவும், 3 ஆயிரம் ரூபாய் கடனாகவும் வழங்கப்படுகிறது.

இந்த நிதியாண்டில் தாட்கோ திட்டத்தின்கீழ் 13 ஆயிரம் மாடுகள் 3 கோடியே 90 இலட்சம ரூபாய் மானியத்துடன் வழங்கப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிட நலத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக இரண்டாயிரத்து அறுநூற்று அறுபத்தி ஆறு கறவை மாடுகள் ரூபாய் 80 இலட்சம் மானியத்துடன் வழங்கப்படவுள்ளன.



1998 மே 18] [திரு. க. சுந்தரம்]

மதம் மாறிய ஆதிதிராவிட கிறிஸ்துவர்களுக்காக, 50 மாடுகள் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படவுள்ளன.

மேலும் தாட்கோ நிதி உதவியுடன் இந்த நிதி ஆண்டில் 2 ஆயிரம் கலப்பின கிடாரி கன்றுகளுக்கு 100 சதவீத மானியமாக 30 மாதங்களுக்குத் தீவனம் வழங்கிப் பராமரிக்க ஒரு கன்றுக்கு ரூ. 10,440 வீதம் 2 கோடியே 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக, மாண்புமிகு ராஜ்குமார் மன்றாடியார், மாண்புமிகு பேரூர் நடராஜன், மாண்புமிகு மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பெரியசாமி மற்றும் மாண்புமிகு இஸ்மாயில், தொ.மு.ச. பேரவைத் தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. குப்புசாமி உள்ளிட்ட பலர் பல ஆண்டு காலமாகப் பல்வேறு மாவட்ட ஒன்றியங்களில், சென்னை இணையத்தில் பணியாற்றிவரும் தினக்கூலிப் பணியாளர்கள் நிரந்தரப்படுத்தப்பட வேண்டுமென்று கோரினார்கள்.

மாவட்ட ஒன்றியங்களில் 480 நாட்களுக்கு மேலாக, வருடக் கணக்கில் தினக்கூலியாகப் பணிபுரியும் பல்வேறு மட்டப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு, இந்த அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. கடந்த ஓராண்டில் மட்டும் தருமபுரி ஒன்றியத்தில் 145 நபர்கள், வேலூர் ஒன்றியத்தில் 110 நபர்கள் உள்ளிட்ட 287 நபர்களுக்குப் பணி நிரந்தரம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய கொறடா திரு. முபாரக் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, உதகமண்டலத்தில் பொலிகாளை பண்ணையில் பல ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் 38 நபர்கள், மதுரை ஒன்றியத்தில் ஐந்து ஆண்டுகளாகப் பணிபுரியும் 13 கால்நடை மருத்துவர்கள், சேலம் ஒன்றியத்தில் 168 நபர்கள், ஈரோட்டில் 82 நபர்கள் - மாண்புமிகு பெரியசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள் - உட்பட பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் 401 நபர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இணையத்திலும், ஒன்றியத்திலும் பணிபுரியும் கனரக வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள், பால் மற்றும் பால் பொருட்கள் சேகரித்து வருவதற்கும், வினியோகம் செய்வதற்கும் வாகனப் படி பெறத் தகுதியுடையவர்கள். தற்போது வழங்கப்படும் பயணப் படி 16-6-1993-ல் அளிக்கப்பட்டது. பயணப்படி உயர்வுகுறித்து ஓட்டுநர்களின் சங்கம் கோரிக்கை விடுத்து, அவர்கள்தம் நியாயமான கோரிக்கையை ஏற்று பயணப் படி உயர்வு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் நுகர்வோர் நலனைக் கருத்தில்கொண்டு அந்தந்தப் பகுதிகளிலே உள்ள பால் வழங்கும் நிலையங்களில் பால் அட்டை விற்பனை செய்யப்படுகின்றது. அந்தப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு 15 ரூபாய்தான் பல ஆண்டு காலமாகப் பாக்கெட் மணியாகக் கொடுத்து வருகின்றோம். மழை, வெயில் என்று பாராது திறமையாகப் பணியாற்றும் இந்தப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் இந்தத் தொகை 15 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்தித் தரப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகர் நுகர்வோர்கள் வேண்டுகோளின்படியும், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளின்படியும் சென்னை மாநகரில் கூடுதலாக 25 பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாகப் பால் வினியோகம் செய்யும் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் சொன்னதைப்போல, திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று அமைக்க, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் சில சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை முன் வைத்து, புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் ஆராயப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம், இப்பொழுது நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், நுகர்வோர்கள் பாதிக்கப்படாத வகையில்



பாலின் விலையை 50 காசு குறைத்து, அதாவது 11 ரூபாயிலிருந்து 10½ ரூபாய் என்று அறிவித்த காரணத்தால்—ஏற்கெனவே இந்தத் துறைக்கு 3 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது—இங்கே 8 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நஷ்டம். வெளி மாவட்டங்களையும் சேர்த்துக் கணக்கிட்டபொழுது 27 கோடி ரூபாய் நஷ்டம். எங்களுடைய துறைக்கு ஏற்கெனவே ஏற்பட்டுள்ள நஷ்டம் 3 கோடியையும் சேர்த்து, 30 கோடி ரூபாயை நம்முடைய தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள், அரசு மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். பொது மக்களுக்காக இந்த அரியபெரிய காரியத்தை நம்முடைய முதல்வரவர்கள் செய்திருக்கிறார்கள். பெரும்பாலான மாநிலங்களிலே பாலுக்கு பெரும்பாலும் மானியம் கொடுப்பது கிடையாது. நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், வரலாற்றில் இடம் பிடிக்கின்ற வகையிலே, இந்த 30 கோடி ரூபாய் மானியத்தை வழங்கினார் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-10

இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், திரு. மோகன் கந்தசாமி போன்றவர்கள் எல்லாம், நாங்கள் ஏதோ கருணை அடிப்படையில் குற்றம் செய்தவர்களையெல்லாம் மன்னித்துவிடுவோம் என்கிற நிலையிலே இருக்கின்றோம் என்று கோடிட்டுக் காட்டினார்கள். எங்களைப் பொறுத்தவரை, கண்டிப்பாக யாராக இருந்தாலும்—நம்முடைய திரு. அப்பாவு அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள்—கண்டிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுப்போம். எந்த ஒரு தவறையும் செய்யக்கூடாது என்ற வகையில், முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்கின்ற அந்தக் கருத்தின்படி, அந்த அடிப்படையில் நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். குறிப்பாக், கோவை மாவட்டத்தில் 22 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் கையாடல் நடந்ததாக முன்னாள் நிர்வாக இயக்குநர் மற்றும் அலுவலர்கள், அதேபோல, மதுரை மாவட்ட ஒன்றியத்திலே 2 கோடியே 41 இலட்சம் ரூபாய் கையாடல் நடைபெற்றதாக முன்னாள் பெருந்தலைவர், நிர்வாக இயக்குநர் கைது செய்யப்பட்டு, வழக்கு, நீதிமன்றத்தில் உள்ளது. கோவை மாவட்ட முன்னாள் பெருந்தலைவர் முன்ஜாமீன் பெற்றுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, வேலூர் மாவட்டம். அடிக்கடி நம்முடைய உறுப்பினர் வழக்கறிஞர் திரு. ஞானசேகரன் சொல்வார்,

வேலூர் மாவட்டத்தில் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் கையாடல் செய்த வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் முன்ஜாமீன் பெற்றிருக்கிறார். அவர் எப்படியெல்லாம் முன்ஜாமீன் பெற்றார் என்பதையெல்லாம்கூட நான் அன்பிற்குரிய நம்முடைய வழக்கறிஞர் திரு. ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, முன்ஜாமீன் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி மாவட்ட ஒன்றியத்தில் 45 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் கையாடல் நடைபெற்றதாகவும், திண்டுக்கல் மாவட்ட ஒன்றியத்தில் ஒரு கோடியே 17 இலட்சம் ரூபாய் கையாடல் நடைபெற்றதாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, முன்னாள் பெருந்தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுள்ளார். இப்படி முன்ஜாமீன் பெற்றால் நாங்கள் என்ன செய்வது என்பதையும் குறையோடு தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால், வழக்கிலிருந்து மட்டும் தப்ப முடியாது என்ற வகையில் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) விழுப்புரம் மாவட்ட ஒன்றியத்தில் 6 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய், நீலகிரி மாவட்டத்தில் 6 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய், தருமபுரியில் 8 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய், காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட ஒன்றியத்தில் 24 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய், சிவகங்கை மாவட்ட ஒன்றியத்தில் 5 இலட்சத்து 11 ஆயிரம் கையாடல் நடைபெற்றுள்ளது. நபர்களைச் சொல்லக்கூடாது. ஏனென்றால் முன்ஜாமீன் பெற்றுவிடுவார்கள். கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துகள், அன்பிற்குரிய நம்முடைய திரு. பாலசுப்பிரமணியன் சொன்ன கருத்துகள் எல்லாம், கவனிக்கப்படும் உபரி பால் இருந்தால்தான் பால் பவுடர் தயாரிக்கப்படுகிறது, அதுவும் ஏதோ 50 கோடி, 60 கோடிக்கோ அல்ல, 15 கோடி ரூபாய் அளவில்தான் ஈரோடு, மதுரை, கிருஷ்ணகிரி, சேலம் போன்ற இடங்களில் தயாரிக்கப்படுகிறது. இப்போது 10 நாட்களாக பால் உபரியாக வந்திருப்பதால்தான் அது இப்போது ஃபங்ஷன் ஆகிக்கொண்டு வருகிறது என்பதை மட்டும் மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நாங்கள் என்றைக்கும் நேர்மையாக, நியாயமாகச் செயல்படுவோம் என்பதைக் கூறிக்கொண்டு, பால் வளம் பெருக்குவோம் பார் நிலை உயர்த்துவோம் என்ற கொள்கைக்கு வலிவு சேர்க்கும்



வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை எடுத்து வைத்தார்கள், உங்கள் மேலான கோரிக்கைகளைக் கவனத்தில் கொண்டு, இத்துறை மேலும் சிறப்பாக நடைபெற நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்தால் வாய்ப்பு எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். நான் யாருக்கும் கொடுப்பதாக இல்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** லேடிக்கு மட்டும் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லேடீஸ் என்றால் ஸ்பெஷலா? லேடி, போலி டாக்டர் எல்லோரும் இருக்கிறீர்கள். (சிரிப்பு) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய தேர்வாணையத்தின்மூலமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட 900 பேர் 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திலே ஆவின் பால் நிறுவனத்திலே பணி மாற்றம் செய்யப்பட்ட பின்னால், அவர்களிலே 500 பேருக்கு மேற்பட்டவர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள், 400 பேர் இன்னும் பணியிலே இருக்கிறார்கள். அந்தப் பால் இணையத்திலே பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பவர்கள், எந்த ஒரு தவறும் செய்யாத நிலையில் ஓய்வூதியம்கூடக் கிடைக்காமல் அவலமான நிலையிலே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் பெயர் மாற்றம் செய்ததினால், தங்களுடைய பணியை அவர்கள் மாற்றிக்கொண்டதன் விளைவாக இன்று எந்த ஒரு பயனும் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களும் இதை மறுபரிசீலனை செய்து, அவர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அப்படிச் செய்வார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மைதான். இருந்தாலும் அரசாங்கத்திலிருந்து இணையத்திற்கு வருகின்ற காரணத்தினால், அவர்கள் ஓய்வுபெறும் காலத்தில் இப்படி நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் இதைப் பரிசீலிக்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் மாடு வாங்குவதற்கு 6,000 ரூபாய்தான் கொடுத்து வருகிறார்கள். அதிலே, 3,000 ரூபாய் மானியமாகவும், 3,000 ரூபாய் கடனாகவும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது, அந்த 6,000 ரூபாயில் வாங்கக்கூடிய மாடுகள்மூலம் உண்மையிலேயே 1½ லிட்டர், 2 லிட்டர் பால் கறப்பதற்குக்கூட சிரமமாக இருக்கின்றன. ஆகையினாலே, 10,000 ரூபாய் கொடுக்க வேண்டும். இருந்தாலும்கூட, அதனை 8,000 ரூபாய் என்று இன்னும் உயர்த்தி - 2,000 ரூபாய் அதிகமாக உயர்த்தி - 4,000 ரூபாய் மானியமாகவும், 4,000 ரூபாய் கடனாகவும் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய நிதி - தாட்கோ நிதி - டெல்லியிலிருந்து அதாவது, மத்திய அரசாங்கத்திடமிருந்து வரப்பெறுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை தாட்கோவிற்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் இணையத்திலே 1992 ஆம் ஆண்டிலேயிருந்து தணிக்கை ஏன் இதுவரை நடைபெறவில்லை என்பதையும், 17 மாவட்ட பால் வள ஒன்றியங்களிலே, 15-லே தணிக்கை நடத்தப்பட்டது. இன்னும், திருநெல்வேலி, காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஏன் தணிக்கை நடத்தப்படவில்லை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஒன்றியங்களில் 1996-97 ஆம் ஆண்டு வரை தணிக்கை செய்து முடிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் காஞ்சிபுரம்-திருவள்ளூர், திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் 1996-97-க்கு தணிக்கை செய்து முடிக்கப்படவில்லை. விரைவில் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல முன்னாள் ஒன்றியத் தலைவர்கள், கடந்தகால ஆட்சியிலே தவறு செய்தவர்கள் எல்லாம் முன்ஜாமீன் பெற்றுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணமே அந்த சி.சி.ஐ. டபிள்யூ என்று இருக்கக்கூடிய அந்த போலீஸ் சரிவர நடவடிக்கை எடுக்காததால்தான். அதை லோக்கல் போலீசுக்கோ அல்லது மற்ற போலீசுக்கோ கொடுத்திருக்கலாம். இப்போதுகூட, முன்ஜாமீன் வாங்கியவர்கள்கூட இதுநாள் வரையில், நீதிமன்றத்தில் சரண்டர் ஆகவில்லை. ஆகவே, அவர்கள் சரண்டர் ஆகாத சூழ்நிலையில், போலீசாருக்குக் கைது செய்யக்கூடிய அதிகாரம் இருக்கிறது. அப்படி அதிகாரம் இருந்தும்கூட, இன்னும் அவர்களை யாரும் போய்த் தொடவும் இல்லை; அவர்கள் சரண்டர் ஆகவும் இல்லை. இப்படிப்பட்ட கொடுமைகள் இருக்கிற காரணத்தாலே, அவர்களை உடனடியாகக் கைது செய்து அவர்கள் மேல், அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கின்ற அந்த முன்னாள் பெருந்தலைவர்கள் சரண்டர் ஆகி, முன்ஜாமீனில் வந்ததாகத்தான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அப்படியில்லையென்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கொடுப்பு.

**கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 10-பால் வழங்கு செயல் திட்டங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர். திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"பால் வழங்கு செயல் திட்டங்கள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ். ரூ. 10,96,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 9. அறிவிப்புகள்

### (அ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான பேரவையின் நிலைக் குழுக்கள் அமைப்பதுபற்றி பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1998-99 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) 16 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன.

திரு. செ. இராமலிங்கம்

திரு. ஏ. இராமலிங்கம்

திரு. சி. கோபு

திரு. சி. சண்முகம்

திரு. கே. சுந்தர்

திரு. இரா. மகேந்திரன்

திரு. அ. அசோகன்

திரு. ஆர். சக்ரபாணி

திரு. வ. அன்பழகன்

திரு. டி. அமரமூர்த்தி

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. ச. புரட்சிமணி

திரு. வை. சிவபுண்ணியம்

திரு. ஜ. கணேசன்

டாக்டர் க. கிருஷ்ணசாமி

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்

நியமனம் செய்யப்படவுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1998-99 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களாக இவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 196-ன்கீழ் திரு. செ. இராமலிங்கம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

பிற்பகல் 1-20

## (ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) 16 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பேரவையின் கீழ்க்கண்ட 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. எல். மூக்கையா

திரு. வி. முத்து

திரு. எஸ்.கே. வேதரத்தினம்

திரு. ப. பாலசுப்பிரமணியன்

திரு. கோ. தளபதி





திரு. க. வேல்சாமி

திரு. ஆர். சிவானந்தம்

திரு. கொ.வீ. நன்னன்

திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்

திரு. க. மணிவர்மா

திரு. எ. தெய்வநாயகம்

திரு. ப. ரங்கநாதன்

திரு. கே. ரவி அருணன்

திரு. கே. சுப்பராயன்

திரு. முகம்மது கோதர் மைதீன்

திரு. ப. கோவிந்தன்

1998-99-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கின்றேன். நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர், தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 204 (1)-ன்கீழ், திரு. ப. ரங்கநாதன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கின்றேன்.

## (இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) 16 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. ஆ. நடராசன்

திரு. எம். ரங்கநாதன்

திரு. ம. சண்முகம்

திரு. வெ. கோவிந்தன்

திரு. வ. வேலுசாமி

திரு. கே.கே. வீரப்பன்

திரு. ஆர். காந்தி

திரு. எஸ். டேவிட் செல்வின்

திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி

திரு. வி.கே. லட்சுமணன்

திரு. சி. ஞானசேகரன்

திரு. ஆர்.ஆர். சேகர.

திரு. ஜி. பழனிசாமி

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

திரு. ஜி.கே. மணி

திரு. பி.ஆர். சுந்தரம்

1998-99 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன். தவிர, மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் ஆகியோர், தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 213-ன்கீழ், திரு. ஆ. நடராசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கின்றேன்.

### (ஊ) அவை உரிமைக் குழு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99-ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee on Privileges) 14 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் 14 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. எஸ். ராஜு

திரு. வி.பி. சிங்காரவேலு

திரு. வி.பி. இராசன்

திரு. ம. முத்துராமலிங்கம்

திரு. மு.ந. ஜோதிகண்ணன்

திரு. .கு. ரவிசங்கர்

திரு. உ. திசைவீரன்



திருமதி ஆர். சரஸ்வதி

திருமதி கோமதி சீனிவாசன்

திரு. கோ. நயினா முகமது

திரு. சு. சிவராஜ்

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்

திரு. ஜி. நிஜாமுதீன்

திரு. எஸ்.வி. கிருஷ்ணன்

1998-99 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர், தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 227 (3)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் இக்குழுவின் தலைவராக இருப்பார்.

### (உ) அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99-ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக்குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமிக்கின்றேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்

மாண்புமிகு முதலமைச்சர்

மாண்புமிகு பேரவை முன்னவர்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

எதிர்க்கட்சித் தலைவர்

மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா

திரு. ஆர். சொக்கர்

திரு. ஜி. பழனிசாமி

திரு. ம. அப்துல் லத்தீப்

திரு. இரா. தாமரைக்கனி

திரு. எஸ். திருநாவுக்கரசு

திரு. ஐ. கணேசன்

[பேரவைத் தலைவர்] [1998 மே 18

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்
திரு. லா. சந்தானம்
திரு. சி. வேலாயுதன்
திரு. டி. மணி
டாக்டர் கு. கிருஷ்ணசாமி
திரு. பி. வெங்கடசாமி

பேரவை விதி 231 (1)-ன்கீழ், பேரவைத் தலைவர் இக்குழுவின் தலைவராவார்.

## (ஊ) பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான பேரவை விதிகள் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமிக்கின்றேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்
மாண்புமிகு முதலமைச்சர்
மாண்புமிகு பேரவை முன்னவர்
மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
எதிர்க்கட்சித் தலைவர்
மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா
திரு. குழந்தை தமிழரசன்
திரு. ரா. சேதுநாதன்
திரு. கே.எம். விஜயகுமார்
திரு. ச. அழகிரி
திரு. டி. மணி
திரு. அ.லெ. சுப்பிரமணியன்
திரு. ஏ. ராசேந்திரன்
திரு. எஸ். திருநாவுக்கரசு
திரு. லா. சந்தானம்
டாக்டர் வை. இராமசாமி

219100

பேரவை விதி 256 (1)-ன்கீழ், பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராக இருப்பார்.

V2'',Z1N98
N98.54.1

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.